

Book of
James
LESSONS FOR LIFE
BRO. ABRAHAM DAVID JOHN

# Book of James

Lessons for Life

*Bro.* ***Abraham David John***
World Christian Fellowship
60, High Worple, Rayners Lane, Harrow
Middlesex, HA2 9SZ, United Kingdom
www.wcflondon.com
E-mail : wcflondon@gmail.com



# CONTENTS

| | |
|---|---|
| யாக்கோபின் நிருபம் | 1 |
| **ஆசிரியர்** | **1** |
| **சோதனை** | **8** |
| ஞானம் | **12** |
| தூண்டுதல் | **20** |
| பார்க்கும் விதம் | **28** |
| கட்பவரா அல்லது செய்பவரா? | **34** |
| நாவை பழக்குதல் | **40** |
| வேற்றுமை அல்லது பாரபட்சம் அல்லது பாகுபாடு | **46** |
| இரக்கம் & நியாயத்தீர்ப்பு | **54** |
| விசுவாசம் மற்றும் கிரியைகள் | **62** |
| பெருமை மற்றும் பொறாமை | **66** |
| வியாபாரம் மற்றும் செல்வம் | **72** |
| ஜெபம் மற்றும் குணமாதல் | **80** |
| நற்செய்தி அறிவித்தல் | **88** |

# PREFACE

It's a pure joy to meet with you on this Bible study on the book of James.

**But don't just listen to God's word. You must do what it says. Otherwise, you are only fooling yourselves. James 1:22**

When I read this verse in my personal study few years back, it really made me ponder and led me to do a spiritual check upon myself. The result is the Bible study on the book of James. This book will help you when you watch the videos. Videos are available at www.youtube.com/user/wcflondon but you can also read this as a separate book for your personal Bible reading on the book of James.

This letter which was written by Apostle James is a very challenging one. We have studied this book through 15 titles, these will challenge, equip and empower you.
This book challenged me so much and I am sure it will challenge you as well. If you take these lessons seriously then surely it will change you. Take one title at a time. It may take a week or two to read all the scriptures and to meditate upon it. My only advise is that you don't rush to read all the book or watch all the videos.

Teaching and writing these notes on this book had a profound impact in me, my prayers is the same for you.
My prayer is that you will seek God's help in studying this and as you walk along in this journey take time to do a spiritual check on yourself.

May the Holy Spirit enable you to change you like the image of our Lord and Saviour Jesus Christ.

Love and Blessings
-Abraham D John






# 1 ஆசிரியர்

## யாக்கோபின் நிரூபம்


**யாகோபு, இயேசுவின் ஒன்றுவிட்ட சகோதரன்.**

இந்த புத்தகத்தின் ஆசிரியர் அப்போஸ்தலனாகிய யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபுவாக இருக்க முடியாது. யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபு ஆண்டவராகிய இயேசுவை முதலாவதாக விசுவாசித்தவர்களில் ஒருவர் மற்றும் அவர் ஏரோது அரசனால் கி.பி 42ல் கொல்லப்பட்டார் (அப்போஸ்தலர் 12:2). ஆனால் இந்த கடிதம் கி.பி 42 ற்கு பின்புதான் எழுதப்பட்டதாக தேதியிடப்படுகிறது. ஆகவே, யாக்கோபு

(அப்போஸ்தலனாகிய யோவானுடைய சகோதரன்) இந்த கடிதத்தை எழுதியவராக இருக்க முடியாது.

ஆக அடுத்து இயேசுவின் ஒன்றுவிட்ட சகோதரன் யாக்கோபு என்பவராகதான் இருக்க முடியும். இயேசுவானவர் பிறந்த பின்பு யோசேப்புக்கும் மரியாளுக்கும் பிள்ளைகள் இருந்தார்கள் அவர்களுடைய பெயர்கள் வேதத்திலே குறிப்பிடப்பட்டுள்ளது.

**மாற்கு 6:3, இவன் தச்சன் அல்லவா? மரியாளுடைய குமாரன் அல்லவா? யாக்கோபு யோசே யூதா சீமோன் என்பவர்களுக்குச் சகோதரன் அல்லவா? இவன் சகோதரிகளும், இங்கே நம்மிடத்தில் இருக்கிறார்கள் அல்லவா?**



என்று சொல்லி, அவரைக் குறித்து இடறலடைந்தார்கள். இயேசு தன்னுடைய வீட்டை விட்டு ஊழியத்தை பகிரங்கமாக செய்ய ஆரம்பித்தார் ஆனால், அவருடைய சகோதரர்கள் அவர்தான் மேசியா, தேவனுடைய குமாரன் என்று விசுவாசிக்கவில்லை.

**யோவான் 7:5, அவருடைய சகோதரரும் அவரை விசுவாசியாதபடியால் இப்படிச் சொன்னார்கள்.**

இயேசுவின் ஒன்றுவிட்ட சகோதரனாகிய யாக்கோபை, இயேசு



உயிர்த்தெழுந்த பின்பு சந்தித்தார்.

**1 கொரிந்தியர் 15:7, பின்பு யாக்கோபுக்கும், அதன்பின்பு அப்போஸ்தல ரெல்லாருக்கும் தரிசனமானார்.**

இயேசு உயிர்த்தெழுந்த பின்பு மற்ற அப்போஸ்தலர்களுக்கும் ஏறக்குறைய 500 ஜனங்களுக்கும் தரிசனமானார். அவர் அவர்களோடு 40 நாட்கள் தங்கி தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்து போதித்தார். இயேசு தேவதூதர்களோடு பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் முன்பு, அவர்களை நோக்கி, தேவனுடைய வாக்குத்தத்தத்தையும், பரிசுத்த ஆவியையும் பெறவேண்டும் என்பதற்காக அவருடைய சீஷர்களை எருசலேமிலே தங்கும்படி சொன்னார் (அப்போஸ்தலர் 1: 48). 120 பேர் மேல் வீட்டிலே கூடி இருந்தார்கள்.

அங்கே யாக்கோபு தன்னுடைய தாயாரோடு இருந்தார்.

**அப்போஸ்தலர் 1:13-14, [13]அவர்கள் அங்கே வந்தபோது மேல்வீட்டில் ஏறினார்கள்; அதில் பேதுருவும், யாக்கோபும், யோவானும், அந்திரேயாவும், பிலிப்புவும், தோமாவும், பர்த்தொலொமேயும், மத்தேயும், அல்பேயுவின் குமாரனாகிய யாக்கோபும், செலோத்தே என்னப்பட்ட சீமோனும், யாக்கோபின் சகோதரனாகிய யூதாவும் தங்கியிருந்தார்கள். [14]அங்கே இவர்களெல்லாரும், ஸ்திரீகளோடும் இயேசுவின் தாயாகிய மரியாளோடும்,**

**அவருடைய சகோதரரோடுங்கூட ஒருமனப்பட்டு, ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்தார்கள்.**

அதனால், இயேசு மறித்து உயிர்த்தெழுந்த காலக்கட்டத்திலிருந்து, யாக்கோபு இயேசு கிறிஸ்து தேவனுடைய குமாரன் என்று அவர்மேல் மிகுந்த விசுவாசமுள்ளவராகி அவரை பின்பற்ற தொடங்கினார்.

யாக்கோபு, ஆதிசபையிலே தலைவராக இருந்தபோது அவர் மிகவும் கனம்பண்ணப்பட்டார். அந்த சமயத்தில் அப்போஸ்தலனாகிய பேதுரு சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டபோது சிறைச்சாலையில் நடந்த காரியங்களை யாக்கோபிடம் போய் சொல்லும்படி அவர் தேவதூதனால் போதிக்கப்பட்டார்.

**அப்போஸ்தலர் 12:17, அவர்கள் பேசாமலிருக்கும்படி அவன் கையமர்த்தி, கர்த்தர் தன்னைக் காவலிலிருந்து விடுதலையாக்கின விதத்தை அவர்களுக்கு விவரித்து, இந்தச் செய்தியை யாக்கோபுக்கும் சகோதரருக்கும் அறிவியுங்கள் என்று சொல்லி; புறப்பட்டு, வேறொரு இடத்திற்குப்போனான்.**

அப்போஸ்தலனாகிய பவுல் தான் சம்பாஷித்த காரியங்களையும் அவர் எருசலேமிற்கு போனபோது யாரை சந்தித்தார் என்பதை பற்றியும் கலாத்திய சபைக்கு எழுதினார்.

**கலாத்தியர் 1:19, கர்த்தருடைய சகோதரனாகிய யாக்கோபைத் தவிர, அப்போஸ்தலரில் வேறொருவரையும் நான் காணவில்லை.**

யாக்கோபு எருசலேமிலே சபையை தலைமைதாங்கி நடத்தும் ஒரு முக்கிய தலைவராக இருந்தார்.

புறஜாதியாரிலிருந்து புதிதாக கிறிஸ்தவர்களாக மாறியிருந்த ஜனங்களுடைய பிரச்சனைகளை அப்போஸ்தலனாகிய பவுலும் பர்னபாவும் எதிர்கொண்டார்கள்.

அப்பொழுது அங்கிருந்த யூத விசுவாசிகள் தங்களுடைய பாரம்பரிய யூத சடங்காசாரங்களை நிலைநிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி வந்தார்கள் [யூதர்களே முதல் கிறிஸ்தவர்கள் இருந்தார்கள்.

அவர்களுக்கு தேவன் வாக்குப்படி இயேசு தான் மேசியா என்று விசுவாசித்த போதிலும் அவர்கள் யூத சடங்காச்சரங்களுக்கும் கலாச்சாரங்களுக்கும் கீழ்படிகிறவர்களாகவே இருந்தனர்].

இந்த சர்ச்சையை எருசலேம் சபைக்கு கொண்டு வந்த பொது இதை பற்றி பேசி அவற்றை சரி செய்ததவர் இந்த யாக்கோபு என்பவரே.




**அப்போஸ்தலர் 15: 12-13, [12]**
**அப்பொழுது கூடிவந்திருந்த**
**யாவரும் அமர்ந்திருந்து, பர்னபாவும்**
**பவுலும் தங்களைக்கொண்டு**
**தேவன் புறஜாதிகளுக்குள்ளே**
**செய்த அடையாளங்கள்**
**அற்புதங்கள் யாவையும் விவரித்துச்**
**சொல்லக்கேட்டார்கள். [13]அவர்கள்**
**பேசி முடிந்தபின்பு, யாக்கோபு**
**அவர்களை நோக்கி: சகோதரரே,**
**எனக்குச் செவிகொடுங்கள்.**

சில வருஷங்களுக்கு பின்பு மறுபடியும் பிரச்சனை ஏற்பட்டபோது அப்போஸ்தலனாகிய பவுல் யாக்கோபிடம் சென்றார், ஏன்னென்றால் இம்முறை அப்போஸ்தலனாகிய பவுலை பற்றி தவறான காரியங்கள் வெளியாகியிருந்தன. எப்படி என்றால் பவுல் யூத பாரம்பரியங்களை பற்றி தவறாக பேசியதாக சொல்லப்பட்டது. யாக்கோபு பவுலுக்கு என்ன செய்ய வேண்டும் என்று போதிதிருந்தார் (அப்போஸ்தலர் 21:17-26). யாக்கோபின் போதனைப்படி பவுல் செய்தபோதிலும் யூதர்களிடமிருந்து அவரை காப்பாற்ற முடியவில்லை. யாக்கோபு தேவ ஆலயத்திலிருந்து (**Temple of Mount**) தூக்கி எறியப்பட்டபோதிலும் அவர் சாகவில்லை. அதன் பிறகு அவரை கட்டையினால் அடித்து தலை பிளக்கப்பட்டு மரித்தார் என்று நம்பப்படுகிறது. அவர் கி.பி 62 இறந்தார்.

## கடிதம் எழுதப்பட்ட வருடம்

1. இந்த கடிதத்தில் யூதர் அல்லாதவர்களை பற்றி குறிப்பிடவில்லை.
2. ஸ்தேவான் துன்புருத்தபட்டு மரித்தபின் புறஜாதியார் கிறிஸ்தவர்கள் ஆனார்கள். இதனால்




விசுவாசிகள் மற்ற நாடுகளுக்கு செல்ல நேர்ந்தது (அப்போஸ்தலர் 11:19). இவை கி.பி 45 ல் நடந்தது.

3. அல்லாமலும் எருசலேமில் துன்பங்களும் நேரிட்டது அவை அப்போஸ்தலர் 12: 1 ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆதலால் மேலே குறிப்பிட்டபடி இந்த கடிதம் கி.பி 42 லிருந்து கி.பி 44 குள் எழுதப்பட்டது என்று நாம் சொல்லலாம். சுவிசேஷம் எழுதப்படுவதற்க்கும் முன்பாக

முதலாவது எழுதப்பட்ட கடிதங்களில் இந்த கடிதமும் ஒன்று.

**நோக்கம்**

யூத வம்சத்திலிருந்து வந்த முதல் விசுவாசிகள் எல்லா இடங்களிலும் பரவி மற்ற நாடுகளில் வசிக்க ஆரம்பித்து விட்டார்கள்.

ஆனால் எந்த அப்போஸ்தலர்களும் தலைவர்களும் அப்படி செல்லவில்லை.

அதனால், யாக்கோபு யாரெல்லாம் சிதறிப்போனார்களோ அவர்களுக்கு எப்படி கிறிஸ்தவ வாழ்க்கை வாழ வேண்டும் என்றும் அவர்களை ஊக்கப்படுத்தியும் எழுதினார்.

நீங்கள் கிறிஸ்துவை விசுவாசித்தீர்களானால் நீங்கள் வாழும் வாழ்க்கை அதை பிரதிபலிப்பதாக இருக்க வேண்டும்.

**இந்த கடிதத்தில் முக்கிய பொருள் விசுவாசமும் வேலையும்**

15ஆம் நூற்றாண்டின் பொது நடந்த வேதாகம சீர்திருத்தத்தின் போது அநேக அறிஞர்கள் இந்த புத்தகத்தை வேதாகமத்திலிருந்து நீக்க வேண்டும் என்று மறுப்பதோடு அல்லாமல் இந்த கடிதம் விசுவாசத்திற்காக கிரியை நடப்பிக்க வேண்டும் என்பதை முன்வைக்கிறது என்று நினைத்தார்கள்.

ஆனால் நாம் புரிந்துகொள்ள வேண்டியது என்னவென்றால் “கிரியை” மாத்திரம் நம்மை இரட்சிக்கமாட்டாது.

நீங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின்மேல் விசுவாசம் வைத்தும் உங்கள் அன்றாட வாழ்வில் கிரியைகள் இல்லாதிருக்குமானால் உங்க விசுவாசம் உண்மையல்ல.

ஆகவே, நீங்கள் இந்த கடிதத்தை வாசிக்கும் போது கிரியைகளினால் தேவனிடத்தில் ஒரு இடம் நமக்கு உண்டு என்று நினைத்து தயவு செய்து குழப்பி கொள்ளாதீர்கள். இரட்சிப்பு என்பது தேவன் நமக்கு தந்த ஈவு (எபேசியர் 2:8). அதை யாரும் சம்பாதிக்க முடியாது!

நமக்கு கிரியை இல்லை என்று சொல்வோமானால் நம்முடைய விசுவாசம் போலியானது.



**அதிகாரங்கள் மற்றும் வசனங்கள்**

**இந்த புத்தகத்தில் 5 அதிகாரங்களும் 108 வசனங்களும் உள்ளது.**
**அதிகாரம் 1 சோதனைகள், விடாமுயற்சி மற்றும் முதிர்ச்சி.**
**அதிகாரம் 2 விசுவாசம் மற்றும் கிரியை.**
**அதிகாரம் 3 நாவு மற்றும் வார்த்தை.**
**அதிகாரம் 4 தேவனிடத்தில் சமர்பித்தல்.**
**அதிகாரம் 5 விசுவாசம் மற்றும் ஜெபம்.**

இந்த புத்தகத்திலிருந்து எல்லா அதிகாரத்திலும் 17வது வசனத்தை எடுத்து தனிப்பட்ட முறையில் மனப்பாடம் செய்திருக்கிறேன்.

1:17, நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை.

2:17, அப்படியே விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் தன்னிலேதானே செத்ததாயிருக்கும்.

3:17, பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது.

## Application for us today

**Humility** is the main virtue we can learn from James introduction. He even commands through the words of the Old Testament in his letter in chapter 4: 6

**But He gives more grace. Therefore He says: “God resists the proud, But gives grace to the humble.”**

Not only James preached but he practiced it in his life, so let us learn to be humble so that God can give us more grace!!

4:17, ஆதலால், ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்.

5:17, எலியா என்பவன் நம்மைப்போலப்பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான், அப்பொழுது மூன்றுவருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை.

**இப்பொழுது நாம் இந்த யாக்கோபின் புத்தகத்துக்குள்ளாக கடந்து செல்வோம்.**

அதிகாரம் 1:1, தேவனுக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் ஊழியக்காரனாகிய யாக்கோபு, சிதறியிருக்கிற பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் வாழ்த்துதல் சொல்லி எழுதுகிறதாவது:

எல்லா தகுதிகளையும் தாண்டி அவர் தன்னை ஒரு ஒப்பந்தமிடபட்ட வேலைக்காரனாக கூறுகிறார்.

- அவர் தன்னை இயேசுவின் ஒன்றுவிட்ட சகோதரன் என்று சொல்லவில்லை.
- அவர் தன்னை ஒரு அப்போஸ்தலன் என்று கூறவில்லை.
- எருசலேம் சபையின் தலைவன் என்று தன்னை கூறிக்கொள்ள வில்லை.
- தன்னை ஒரு தலைவன் என்றும் அல்லது வயதில் முதிர்ச்சி அடைந்தவன் என்றும் கூறவில்லை.
- வேலைக்காரன் என்று இல்லை தன்னை ஒரு ஒப்பந்தமிடபட்ட வேலைக்காரன்! அல்லது அடிமை என்று சொல்லுகிறார்.

ரோம அரசாங்கத்தின்படி, ஒப்பந்தமிடபட்ட வேலைக்காரன் என்பவன் எஜமானுடைய தனிப்பட்ட சொத்து. அடிமைகளுக்கு எந்த அதிகாரமுமில்லை மற்றும் தண்டனையிலிருந்து தப்புவதற்கான காரணம் இருந்தாலும் எஜமானனால் கொல்லப்படவும் முடியும்.

இதே மாதிரியான காரியங்களை அப்போஸ்தலனாகிய பவுலிடம்



காணலாம், ரோமர் 1:1, கலாத்தியர் 1:10, பிலிப்பியர் 1:1 மற்றும் தீத்து 1:1

## கிறிஸ்துவுக்குள் விசுவாசிகளாய் எப்படி நாம் வாழலாம்?

விசுவாசிகளான நாம் நம்மை கிறிஸ்துவின் அடிமைகளாகவும் அல்லது ஒப்பந்தமிடபட்ட வேலைக்காரனாகவும் எண்ணவும் வேண்டும்.

1 கொரிந்தியர் 7:22; கர்த்தருக்குள் அழைக்கப்பட்ட அடிமையானவன் கர்த்தருடைய சுயாதீனனாயிருக்கிறான்; அப்படியே அழைக்கப்பட்ட சுயாதீனன் கிறிஸ்துவினுடைய அடிமையாயிருக்கிறான்.

எபேசியர் 6:6; மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள்

2 தீமோத்தேயு 2:24, கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதகசமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்கவேண்டும்.

இயேசுவே நம்முடைய ஆண்டவர். நாம் அவர் ஒருவருக்கே விசுவாசிகளாய் இருக்க வேண்டும். நாம் ஒப்பந்தமிடபட்ட வேலைக்காரராய் இருக்கிறபடியால் மற்ற எஜமானருக்கு ஊழியம் செய்யலாகாது.

மத்தேயு 6:24, இரண்டு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து ஒருவனைச் சிநேகிப்பான். அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டைபண்ணுவான்;

தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களால் கூடாது.

மத்தேயுவில் எழுதியிருக்கிறபடி நம்மை நாம் முழுவதுமாக

அவரிடத்தில் ஒப்புக்கொடுப்போம்

மத்தேயு 16:24, அப்பொழுது, இயேசு தம்முடைய சீஷர்களை நோக்கி: ஒருவன் என்னைப் பின்பற்றி வர விரும்பினால், அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை எடுத்துக்கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன்.

ஒப்பந்தமிடபட்ட வேலைக்காரனாக இருப்பது கடினமான காரியமல்ல ஏனென்றால் என் நுகம் மெதுவாயும் என் சுமை இலகுவாயும் இருக்கிறது என்றார். (மத்தேயு 11:30)

**வச 1:1, தேவனும் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும்.** இங்கே யாக்கோபு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை அழைக்க கூடிய பதம் "கிரியோஸ்" என்கிற வார்த்தை.

கிரியோஸ் என்கிற கிரேக்க வார்த்தைக்கு ஆண்டவர் என்று அர்த்தம். ஆண்டவர் என்று சொல்லும்போது என்னை ஆளுகிறவர். அவர் தனியாக தான் எந்த ஒரு முடிவையும் எடுக்க முடியாதபடி இன்னொருவர் தன்மீது ஆளுகை செய்வதாக அர்த்தமாம். எபிரேயுவிலே இதற்கு நிகரான வார்த்தை "அடோனாய்" என்பதே.

ஆகையால் இயேசுவினுடைய சகோதரன் தன்னை ஒரு அடிமையாக மாத்திரமல்ல அவர் இயேசுவை அவருடைய எஜமானனாக உயர்த்துகிறார்.
வச 1:1, நாடெங்கும் சிதறடிக்கப்பட்ட பன்னிரண்டு கோத்திரங்களுக்கும்.

இது நேரடியாக சரித்திரத்திலிருந்து கொடுக்கப்பட்ட காரியம் அதாவது உலக நாடெங்கும் சிதறி இருக்கிற யூத விசுவாசிகளுக்கு யாக்கோபு எழுதினார் என்பதே.

நம் வாழ்வில் இன்று நடைமுறைப்படுத்த வேண்டியவை பணிவு என்னும் நல்லொழுக்கத்தை நாம் யக்கோபினுடைய அறிமுகத்திலிருந்து கற்றுக்கொண்டோம். அவர் பழைய ஏற்பாட்டு வார்த்தையின் வாயிலாக அவருடைய கடிதத்தில் அதிகாரம் 4: 6 ல் கட்டளைக்கொடுக்கிறார்.



யாக்கோபு 4: 6 அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே. ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது."

யாக்கோபு போதிக்கமட்டும் செய்யவில்லை அவருடைய வாழ்க்கையில் நடைமுறைப்படுத்தினார். ஆகையால், பணிவாக இருக்க நாம் கற்றுக்கொள்வோம் அதினிமித்தம் தேவன் நமக்கு கிருபை செய்வாராக!!

ஆமென்!





# சோதனை

## யாக்கோபு 1:5-8

2

[2]என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில்
அகப்படும்போது, 3உங்கள் விசுவாசத்தின்
பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று
அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்.
4நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல்,
பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி,
பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது.

### ஒழுக்கம்

விதிகளுக்கு ஏற்ப பயிற்சி செய்து அதன்படி நடத்தல். இதற்க்கான தண்டனை நம்மை ஒழுங்குபடுதும்படியும் பயிற்றுவிக்கும்படயும் அமையும்.

### சோதனை

தற்காலிக அல்லது சோதனைகள் மூலம் நாம் ஒரு காரியத்தில் உறுதியாக இருக்கிறோமா என்று சோதிப்பது.

### தேர்வு

தரம், செயல்திறன், அல்லது ஒரு காரியத்தின் நம்பகத்தன்மை, முக்கியமாக அவை பரவலாக



பயன்பாட்டிற்க கொண்டு செல்வதற்கு முன் ஒரு செயல்முறையை சரிபார்ப்பது.

### தூண்டுதல்கள் (சபலம் - Tepltations)

ஆவலை தூண்டுவதாக செயல்: மயக்கம் அல்லது வசீகரிக்கும்: அல்லது தூண்டும், வசீகரிக்கும், மயக்கும் ஒரு காரியம்.

ஒழுக்கம் நம்மை நேசிக்க கூடிய ஒருவரிடதிலிருந்து வருவது, தேவன்! சோதனைகள் அல்லது தேர்வுகள் தேவனிடத்தில், சாத்தானிடத்தில், அல்லது உலகத்திலிருந்து நம்மை நோக்கி வருபவை.

தூண்டுதல், நம்மிடத்திருந்து வருபவை அல்லமு உருவாகுவது.

**நான் ஒழுங்குபடுத்தலுக்கு உட்பட்டிருக்கிறேனா? அல்லது சோதனை நடுவில் இருக்கிறேனா? அல்லது தூண்டப்படுகிறேனா?**

யாக்கோபு, விசுவாசத்தினிமித்தம் சிதறிப்போன பன்னிரண்டு கோத்திரங்களுக்கும், துன்பப்படுத்தப்பட்டவர்களுக்கும், யாரெல்லாம் தங்கள் ஜீவனையும் பரியமானவர்களையும் இழந்தார்களோ அவர்களுக்கும், தங்களுடைய உடைமையை இழந்து வெளியேற்றப்பட்டவர்களுக்கும் இந்த கடிதத்தை எழுதினார். ஆகையால், அவர்களுடைய விசுவாசம் சோதிக்கப்படுவதினிமித்தம்

| நம்மை நாமே கேட்க வேண்டியவை | ஒழுக்கம் | சோதனை/தேர்வு | தூண்டுதல்கள் (சபலம் - Tepltations) |
|---|---|---|---|
| **யார் மூலக்காரணம்?** | ஆண்டவர் | தேவன், சாத்தான், | நாம், சாத்தான் |
| காரணம் என்ன? | என்னுடைய கீழ்படியாமை | தேவனை பின்பற்றல் | வெளிப்பாடு மற்றும் பெருமை |
| நான் எப்படி பதிலளிக்க வேண்டும்? | மனந்திரும்புதல் | விடாமுயற்சி | எதிர்த்துநில் |
| செய்யகூடாதது | நாமாக ஒளி உருவாக்குதல் | தயக்கம்/ ஒடுங்குதல் | விழுதல் |
| முடிவு என்ன? | பயன் மற்றும் பரிசுத்தமாகுதல் | மரணம் மற்றும் மகிமை | பாவம் அல்லது வெற்றி |
| கிடைக்கும் பலன் என்ன? | நித்தியம் | நித்தியம் | நித்தியம் |

எவ்வாறு சோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என்று அவர்களுக்கு ஆறுதலும் ஆலோசனையும் அளித்திருக்கிறார்.
வேதாகமத்திலே இவ்வாறு கூறப்பட்டுள்ளது...

1தேவனுக்கும் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கும் ஊழியக்காரனாகிய யாக்கோபு, சிதறியிருக்கிற பன்னிரண்டு கோத்திரங்களுக்கும் வாழ்த்துதல் சொல்லி எழுதுகிறதாவது: 2என் சகோதரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, 3உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமான எண்ணுங்கள். 4நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது.

ஆகையால் சோதனை நிச்சயம் வருமென்ற அறிந்திருக்கிறோம் - எப்பொழுது வரும் என்பதுதான் கேள்வியை தவிர வரும் என்பதில் எந்த ஐயமும் இல்லை நம்முடைய முதல் வெளிப்பாடு உவகையாக இருக்க வேண்டும்.தெளிவாக புரிந்துகொள்ள வேண்டும் என்றால் நம்முடைய குழந்தைகள் அல்லது நாம் வளர்ந்து பள்ளிக்கு படிக்க செல்லும்போது ஒவ்வொரு வரையரைக்காலத்திலும் பரீட்சை வைப்பவர்கள். அதிலே நாம் படிப்புத்திறனில் என்ன அடைத்திருக்கிறோம் என்பதை அறிவதற்கு பயன்படம். தேர்வுக்கு முழுவதுமாக படித்து அணைத்து கேள்விகளுக்கும் விடையளிக்க உறுதியாக இருக்கிறோம். முறையாக படித்து பரிட்சைக்கு எழுதுவது சாதாரணமான காரியமல்ல.

முறையாக தயார்படுத்தி தங்களுடைய படிப்பில் ஒவ்வொரு முறையும் வளர்ச்சியடைந்துள்ளார்களா என்று சரிபார்க்க தேர்வுகள் உதவும்.

ஏசாயா 43:1-3, [1]இப்போதும் யாக்கோபே, உன்னைச் சிருஷ்டித்தவரும், இஸ்ரவேலே உன்னை உருவாக்கினவருமாகிய கர்த்தர் சொல்லுகிறதாவது: பயப்படாதே; உன்னை மீட்டுக்கொண்டேன்; உன்னைப் பேர்சொல்லி அழைத்தேன்; நீ என்னுடையவன். [2]நீ தண்ணீர்களைக் கடக்கும்போது நான் உன்னோடு இருப்பேன்; நீ ஆறுகளைக் கடக்கும்போது அவைகள் உன்மேல் புரளுவதில்லை; நீ அக்கினியில் நடக்கும்போது வேகாதிருப்பாய்; அக்கினிஜுவாலை உன்பேரில் பற்றாது. [3]நான் இஸ்ரவேலின் பரிசுத்தரும், உன் இரட்சகருமாயிருக்கிற உன் தேவனாகிய கர்த்தர்; உன்னை மீட்கும்பொருளாக எகிப்தையும், உனக்கு ஈடாக எத்தியோப்பியாவையும் சேபாசையும் கொடுத்தேன்.
ஆகையால், நாம் எல்லோரும் சோதனைகளில் கடந்து செல்கிறோம் அல்லது கடந்து போயிருப்போம் அல்லது அதில் தற்போது அகப்பட்டிருப்போம் அல்லது அகப்படவிருப்போம்.



யாக்கோபு இந்த சோதனைகளை மேற்கொள்வதற்கு என்ன ஆலோசனை கூறுகிறார்?

**1. யாக்கோபு 1:19-20**

**<u>சோதனையை மேற்கொள்ள தேவையான குணங்கள்:</u>**

> அதிகாரம் 1:19-20 19ஆகையால், என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயுமிருக்கக்கடவர்கள்; 20மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாதே.

அவர் சகோதர சகோதிரிகளை, பேசுவதை குறைக்கவும் தேவனிடத்திலும் மற்றவர்களிடத்திலும் கேட்பதற்கு தீவிரமாயும் இருக்க வேண்டும் என்று கூறுகிறார். நாம் எல்லாக் காரியங்களை குறித்து பேசுபவர்களாக இருக்கிறோம். நாம் கடினமான நேரத்தில் பேசுவதில் பொறுமையாக இருக்கவேண்டும் என்கிறார். ஒருவர் நல்ல விதமான பேசு முடியவில்லை என்றால் அவர்கள் பேசாமல் இருப்பதே மேல் என்கிறார். எரிகோ பட்டணத்தை இஸ்ரவேல் ஜனங்கள் கைப்பற்றியபோது ஆண்டவர் அவர்களை ஏழு நாள் பேசக்கூடாது என்று சொன்னார் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.
சாலேமொன் நீதிமொழிகள் கடைசி அதிகாரத்தில் இப்படியாய் எழுதியிருக்கிறார்.

> நீதிமொழிகள் 29:20 தன் வார்த்தைகளில் பதறுகிற மனுஷனைக் கண்டாயானால், அவனை நம்புவதைப்பார்க்கிலும் மூடனை நம்பலாம்.

**<u>2. கேட்பதற்கும் கவனிப்பதற்கும் தீவிரமாயுமிருங்கள்</u>**

கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுங்கள் அப்பொழுது நீங்கள் விசுவாசத்திலே கட்டப்படுவீர்கள்.

> ரோமர் 10:17, ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்.

**<u>3. கோபிக்கிறதர்க்கு தாமதமாயுமிருங்கள் கோபம் ஒரு மனிதனை அழித்துவிடும்;</u>**

கோபத்தில் உங்களால் நிதானமாக அல்லது சரியான முறையில் சிந்திக்க முடியாது. தேவனிடம் கோபித்து கொண்டு தங்களுடைய ஆசிரிவாதங்களை இழந்த மக்களுமுண்டு. உங்களுடைய சமாதானத்தையும் இதுந்து போவீர்கள்.

எபேசியர் 4: 26-27, 26நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள், சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது; 27பிசாசுக்கு இடங்கொடாமலும் இருங்கள்.

நீதிமொழிகள் 16:32 பலவானைப்பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன்; பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன்.

**4. முன் உதாரணங்களாக கடந்து சென்றவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ளும் சில காரியங்கள்.**

யாக்கோபு 5:10

10என் சகோதரரே, கர்த்தருடைய நாமத்தினாலே பேசின தீர்க்கதரிசிகளைத் துன்பப்படுதலுக்கும் நீடிய பொறுமைக்கும் திருஷ்டாந்தமாக வைத்துக்கொள்ளுங்கள்.

11இதோ, பொறுமையாயிருக்கிறவர்களைப் பாக்கியவான்களென்கிறோமே! யோபின் பொறுமையைக்குறித்துக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்; கர்ததருடைய செயலின் முடிவையும் கண்டிருக்கிறீர்கள்; கர்த்தர் மிகுந்த உருக்கமும் இரக்கமுமுள்ளவராயிருக்கிறாரே.

சோதனைகளிலிருந்து விடாமுயற்சியை கற்றுக்கொள்ள வேண்டும். ஒரு விசை யோபுவினுடைய சரித்திரத்தை பார்ப்போம். எல்லா சோதனைகளையும் வேதனிடத்திலுள்ள விசுவாசத்தின் மூலம் மேற்கொண்டான். அதேபோல நாமும் நம்முடைய சோதனை மத்தியிலும் தேவனிடத்தில் விசுவாசமாய் இருக்கவேண்டும்.

அப்போஸ்தலனாகிய பேதுரு, அவருடைய நடபடிகளில் இவ்வாறு எழுதி இருக்கிறார்,

1 பேதுரு 1:6-7, 6இதிலே நீங்கள் மிகவும் சந்தோஷப்படுகிறீர்கள்; என்றாலும், துன்பப்படவேண்டியது அவசியமானதால், இப்பொழுது கொஞ்சக்காலம் பலவிதமான சோதனைகளினாலே துக்கப்படுகிறீர்கள். 7அழிந்துபோகிற பொன் அக்கினியினாலே சோதிக்கப்படும்; அதைப்பார்க்கிலும் அதிக விலையேறப்பெற்றதாயிருக்கிற உங்கள் விசுவாசம் சோதிக்கப்பட்டு, இயேசுகிறிஸ்து வெளிப்படும்போது உங்களுக்குப் புகழ்ச்சியும் கனமும் மகிமையுமுண்டாகக் காணப்படும்.



மீண்டுமாக யாக்கோபு இதைப்பற்றி என்ன சொல்லியிருக்கிறார் என்று பார்ப்போம். யாக்கோபு 1:2-4

2என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, 3உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். 4நீங்கள் ஒன்றிலும் குறைவுள்ளவர்களாயிராமல், பூரணராயும் நிறைவுள்ளவர்களாயும் இருக்கும்படி, பொறுமையானது பூரண கிரியை செய்யக்கடவது.

ஆதலால், சோதனைகளின்போது சந்தோஷமாய் இருக்ககடவோம். அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம். (ரோமர் 8:28)

உங்கள் விசுவாசம் பரீட்சிக்கப்படுகிறது; பரீட்சிக்கப்படும்போது நீங்கள் பொறுமையாய் இருக்கவேண்டியது அவசியம் ஏனென்றால் முடிவு என்ன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

நீங்கள் பொறுமையினால் உங்களை வளர்த்து கொள்ளும்போதும் விடாமுயற்சியினால் சோதனையை மேற்கொள்ளும்போதும் நீங்கள் பூரணராகவும் ஒன்றிலும் குறைவற்றவர்களாகவும் இருப்பீர்கள். விசுவாசத்தினின்று பல சோதனைகளை சந்தித்த ரோமாபுரியிலுள்ள சபைக்கு பவுல் எழுதயிருக்கிறார். ரோமர் 5:3-5,

3அதுமாத்திரமல்ல, உபத்திரவம் பொறுமையையும், பொறுமை பரீட்சையையும், பரீட்சை நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று நாங்கள் அறிந்து, 4உபத்திரவங்களிலேயும் மேன்மைபாராட்டுகிறோம். 5மேலும் நமக்க அருளப்பட்ட பரிசுத்த ஆவியினாலே தேவ அன்பு
நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது.

ஆகையால், நாம் தைரியத்தோடே நமக்கு ஏற்படுகிற எல்லாவித சோதனைகளையும் சந்தோஷமாக சந்திக்க முற்படுவோம்!! அதன் மூலம் தேவன் நம்மில் பூரணமாய் கிரியை செய்யவும் நாம் அவருடைய கிரியையின் பூரணர்களாய் எந்தவித குறைவுமின்றி இருக்க முடியும்.



# 3

# ஞானம்

**யாக்கோபு 1:5-8**

உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்து கொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்; சந்தேகப்-படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக. இருமன-முள்ளவன் தன் வழிகளிலெல்லாம் நிலையற்றவனாயிருக்கிறான்.

முதலாவதாக நாம் புரிந்துகொள்ள வேண்டிய காரியம், பெரும் சோதனைகளை சந்தித்து, துன்பப்படுத்தப்பட்டு சிதறிப்போன கிறிஸ்தவர்களுக்கு யாக்கோபு இக்கடிதத்தை எழுதுகிறார். அப்படிப்பட்டவர்களை உற்சாகப்படுத்தும் விதமாக, சோதனைகளை ஒரு பெரிய சிலாக்கியமாக நினைத்து சந்தோஷப்பட வேண்டும் என்று ஊக்குவித்து எழுதுகிறார். தேவனிடத்திலிருந்து ஞானத்தை பெறாமல் சோதனைகளை மனமகிழ்ச்சியோடு எதிர்கொள்ள முடியாது. அதனால் தேவனிடத்தில் அதிக ஞானத்தை பெறும்படிக்கு ஒருவன் ஞானத்தில் குறையுள்ளவனாயிருந்தால் அவரிடத்தில் கேட்கக்கடவன் என்று கூறுகிறார். ஒவ்வொருவரும் ஞானத்தை பெற்றிருக்கிறோம் ஆனால் அதிலே குறைவுள்ளவர்களாயிருந்தால் அவரிடத்தில் கேட்கக்கடவீர்கள்!!

**ஞானம்** என்பது அனுபவம், அறிவு, சரியாக நியாயந்தீர்த்தல், விவேகம்.

**அறிவு** என்பது அனுபவம், தர்க்க அறிவு அல்லது காரியானுமானம், மற்றும் பரிச்சயம் ஆகியவற்றினால் சுதந்தரிக்கப்பட்ட தகவல்கள். (நான்கு சக்கர வாகனத்தில் பிரேக் பெடல், வேகத்தை விலைவு படுத்தும் பொறி ஆகியவற்றின் வேலை என்ன என்பதை அறிந்திருப்பீர்கள்.)

**புரிதல்** என்பது புரிந்துகொள்ளும் திறன் அல்லது உணர்வாற்றல். சேகரித்த தகவர்களை இணைத்துஅனுமானித்து ஒரு காரியத்தை உணர்வது.



**ஞானம்** என்பது அறிவை பயன்படுத்துதல்; புரிந்து அறிவை உபயோகித்தல். அறிவை பயன்படுத்தும் அனுபவங்கள் உங்களை விவேகி/ஞானியாக்கும்.
(நான்கு சக்கர வாகனத்தில் பிரேக்கை சரியான நேரத்தில் உபயோகிப்பது)

**இரண்டு விதமான ஞானம்**
உலக பிரகாரமான ஞானம் மற்றும் பரலோக ஞானம்

**உலக பிரகாரமன ஞானம்:**
**யாக்கோபு 3:13-16**

> உங்களில் ஞானியும் விவேகியுமாயிருக்கிறவன் எவனோ, அவன் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே தன் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்கக்கடவன்.



> உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்தீர்களானால், நீங்கள் பெருமை பாராட்டாதிருங்கள்; சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய் சொல்லாமலுமிருங்கள். இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமாயிராமல், லௌகிக சம்பந்தமானதும், ஜென்மசுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது. வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச்செய்கைகளுமுண்டு.

நம்மால் உலக ஞானத்தை பெற முடியும் ஆனால் அவை துர்ச்செயல்கள் நிறைந்ததும், தேவனுக்கு விரோதமாக செயல்படக்கூடியதுமாயிருக்கிறது.

1. **ஆரம்பம்** - பூமியிலிருந்து உண்டாகுபவை
   1 கொரிந்தியர் 1:20,
   ஞானி எங்கே? வேதபாரகன் எங்கே? இப்பிரபஞ்சத் தர்க்கசாஸ்திரி எங்கே? இவ்வுலகத்தின் ஞானத்தை தேவன் பைத்தியமாக்கவில்லையா?

இவ்வித ஞானமானது உலக தரத்திற்கேற்ப உலக அனுபவத்தால் வருபவை. இவை பிசாசினால் தூண்டப்பட்டு உணர்ச்சிகளால் வழிநடத்தப்படுகிறது!!

2. **இயல்பு** - சிற்றின்பத்தை சார்ந்தது

இவை முழுவதும் இருதயத்திலே கசப்பு நிறைந்தும், பொறாமையும், மற்றும் தன் நலன் சார்ந்த காரியங்களை மட்டும் மையமாக கொண்டவை. ஆளுமை, பதவி மற்றும் உரிமைகளை செருக்குடன் பேசத்தூண்டும்.

3. பலன்

இந்த வகையான ஞானத்தின் பெரும் விளைவு ''குழப்பம்'' (யாக்கோபு 3:16)

- ✯ குழப்பம்
- ✯ துர்ச்செயல்கள் தேவனிடத்திலிருந்து நம்மை பிரிக்கும்.

**பரலோக ஞானம் -** யாக்கோபு 3:17-18,



பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது. நீதியாகிய கனியானது சமாதானத்தை நடப்பிக்கிறவர்களாலே சமாதானத்திலே விதைக்கப்படுகிறது.

1. **ஆரம்பம் - தேவனிடத்திலிருந்து** யாக்கோபு 1:17, நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது; அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு வேற்றுமையின் நிழலுமில்லை.

2. **ஜெபத்தின் மூலம் பெற்றுகெள்ளலாம்** யாக்கோபு 1:5-8 நாம் ஞானத்தின் குறைவுள்ளவர்களாயிருந்தால் தேவனிடத்தில் கேட்க



வேண்டும்.

3. **இயல்பு**

இது பரிசுத்தமும் தேவனுடைய சித்தத்தை செய்யகூடியதாய் இருக்கிறது.

**சமாதானம் நாடுதல்:**

ரோமல் 12:18, கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள்.

எபேசியர் 4:15 அன்புடன் சத்தியத்தைக் கைகொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களா-யிருக்கும்படியாக அப்படிச் செய்தார்.

**மென்மை:**

2 தீமோத்தேயு 2:24-25, கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணு-கிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதகசமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்கவேண்டும். எதிர்பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாகவும்,

**ஆர்வமாய் விட்டுக்கொடுத்தல்: (சத்தியத்தை விட்டுகொடுகாமல்)**

ரோமர் 14:1, விசுவாசத்தில் பலவீனமுள்ளவனைச் சேர்த்துக்கொள்ளுங்கள்; ஆனாலும் அவனுடைய மன ஐயங்களைக் குற்றமாய் நிர்ணயிக்காமலிருங்கள்.

ரோமர் 14:19-21, ஆனபடியால் சமாதானத்துக்கடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும் நாடக்கடவோம். போஜனத்தினிமித்தம் வேதனுடைய கிரியையை அழித்துப்போடாதே. எந்தப் பதார்த்தமும் சுத்தமுள்ளதுதான்; ஆனாலும் இடறலுண்டாகப் புசிக்கிறவனுக்கு அது தீமையாயிருக்கும். மாம்சம் புசிக்கிறதும், மதுபானம் பண்ணுகிறதும், மற்றெதையாகிலும் செய்கிறதும், உன் சகோதரன் இடறுகிறதற்காவது, தவறுகிறதற்காவது

பலவீனப்படுகிறதற்காவது ஏதுவாயிருந்தால், அவைகளில் ஒன்றையும் செய்யாமலிருப்பதே நன்மையாயிருக்கும்.

**இரக்கத்தில் நிறைந்தது:**

யாக்கோபு 2:13, ஏனென்றால், இரக்கஞ்செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும்; நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மைபாராட்டும்.

மற்றவர்களை மன்னிப்பதற்கு முந்திகொள்ளுங்கள்

**நல்ல கனிகள்:**

யாக்கோபு 1:22, அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ் சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்.

யாக்கோபு 2:26, அப்படியே, ஆவியில்லாத சரீரம் செத்ததாயிருக்கிறதுபோல, கிரியைகளில்லாத விசுவாசமும் செத்ததாயிருக்கிறது.

**பட்சபாதமற்றது:**

யாக்கோபு 2:1-13, இதை பற்றின காரியங்களை இந்த புத்தகத்திலிருந்து பின்பு நாம் கற்றுக்கொள்ளலாம்.

**பாசாங்கு செய்யாமல்/நடிக்காமல்:**

பாசாங்க செய்யாமல் / நடிக்காமல் உண்மையாய் வாழ்தல். நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து பெருமைக்கு அடுத்தபடியாக மிகவும் அதிகமாக கண்டித்து பிரசங்கித்தது இந்த பாசாங்கு செய்தல் / நடித்தலை குறித்தே; பரிசுத்தவானாக இல்லாதபோதும் பரிசுத்தமாய் இருப்பதை போன்று நடித்தல். நாம் ஆண்டவரை பிரியப்படுத்தவே வாழ வேண்டும், மனிதர்களை பிரியப்படுத்த அல்ல.

**4. கனி / பலன்-**

- ✯ சமாதானத்தை கொடுக்கும்; குழப்பத்தை அகற்றும்
- ✯ நேர்மைப்படுதும்; தீயவற்றை புறந்துள்ளும்

**இயேசு கிறிஸ்துவை தவிர பெரும் ஞானியாக வாழ்ந்தவரிடமிருந்து**



**நாம் கற்றுக்கொள்ளக்கூடியவை**

**சலொமோன் இராஜா**

நீதிமொழிகள் 3:13, ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள்.

நீதிமொழிகள் 24:13-14, என் மகனே, தேனைச்சாப்பிடு, அது நல்லது; கூட்டிலிருந்து ஒழுகும் தேன் உன் வாய்க்கு இன்பமாயிருக்கும். அப்படியே ஞானத்தை அறிந்துகொள்வது உன் ஆத்துமாவுக்கு இன்பமாயிருக்கும்; அதைப் பெற்றுக்கொண்டால், அது முடிவில் உதவும், உன் நம்பிக்கை வீண்போகாது.

நீ

திமொழகள் 9:10, கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; பரிசுத்தரின் அறிவே அறிவு.

**சாலொமோன் இராஜா எவ்வாறு இந்த ஞானத்தை பெற்றுக்கொண்டார்?**

1 **இராஜாக்கள் 3:5-9,**

கிபியோனிலே கர்த்தர் சாலொமோனுக்கு இராத்திரியில் சொப்பனத்திலே தரிசனமாகி: நீ விரும்புகிறதை என்னிடத்தில் கேள் என்று தேவன் சொன்னார். அதற்குச் சாலொமோன் என் தகப்பனாகிய தாவீது என்னும் உமது அடியான் உம்மைப்பற்றி உண்மையும் நீதியும் மன நேர்மையுமாய் உமக்கு முன்பாக நடந்தபடியே தேவரீர் அவருக்குப் பெரிய கிருபைசெய்து, அந்தப் பெரிய கிருபையை அவருக்குக் காத்து, இந்நாளில் இருக்கிறபடியே அவருடைய சிங்காசனத்தில் வீற்றிருக்கிற ஒரு குமாரனை அவருக்குத் தந்தீர். இப்போதும் என் தேவனாகிய கர்த்தாவே, தேவரீர் உமது அடியேனை என் தகப்பனாகிய தாவீதின் ஸ்தானத்திலே ராஜாவாக்கினீரே, நானோவென்றால் போக்கு வரவு அறியாத சிறுபிள்ளையாயிருக்கிறேன். நீர் தெரிந்துகொண்டதும் ஏராளத்தினால் எண்ணிக்கைக்கு அடங்காததும் இலக்கத்திற்கு உட்படாததுமான திரளான ஜனங்களாகிய உமது ஜனத்தின் நடுவில் அடியேன் இருக்கிறேன். ஆகையால் உமது ஜனங்களை நியாயம்

விசாரிக்கவும், நன்மை தீமை இன்னதென்று வகையறுக்கவும், அடியேனுக்கு ஞானமுள்ள இருதயத்தைத் தந்தருளும்; ஏராளமாயிருக்கிற இந்த உமது ஜனங்களை நியாயம் விசாரிக்க யாராலே ஆகும் என்றான்.

தேவன் நமக்கு அறிவை மாத்திரம் தந்தருளவில்லை அதோடு கூட ஐஸ்வரியத்தையும், கனத்தையும் ஞானத்தையும் கொடுத்திருக்கிறார்.

**தேவனிடத்திலிருந்து ஞானத்தை பெறுவதற்கு சாலொமோன் இராஜா எங்கே கற்றுக்கொண்டார்?**

நீதிமொழிகள் 4:3-7

நதன் என் தகப்பனுக்குப் பிரியமான குமாரனும், என் தாய்க்கு மிகவும் அருமையான ஒரே பிள்ளையுமானவன். அவர் எனக்குப் போதித்துச் சொன்னது: உன் இருதயம் என் வார்த்தைகளைக் காத்துக்கொள்ளக்கடவது; என் கட்டளைகளைக் கைக்கொள், அப்பொழுது பிழைப்பாய். ஞானத்தைச் சம்பாதி, புத்தியையும் சம்பாதி; என் வாயின் வார்த்தைகளை மறவாமலும் விட்டு விலகாமலும் இரு. அதை விடாதே, அது உன்னைத் தற்காக்கும்: அதின்மேல் பிரியமாயிரு, அது உன்னைக் காத்துக்கொள்ளும். ஞானமே முக்கியம், ஞானத்தைச் சம்பாதி; என்னத்தைச் சம்பாதித்தாலும் புத்தியைச் சம்பாதித்துக்கொள்.

**இதை நாம் எப்படி பெறுவது?** உபாகமம் 4:6,

ஆகையால் அவைகளைக் கைக்கொண்டு நடவுங்கள்; ஜனங்களின் கண்களுக்குமுன்பாகவும் இதுவே உங்களுக்கு ஞானமும் விவேகமுமாய் இருக்கும்; அவர்கள் இந்தக் கட்டளைகளையெல்லாம் கேட்டு, இந்தப் பெரிய ஜாதியே ஞானமும் விவேகமுள்ள ஜனங்கள் என்பார்கள்.

**பழைய ஏற்பாடு நியாயப்பிரமாணத்தை கைக்கொள்வதால் ஞானியாகலாம். ஆனால் புதிய உடன்படிக்கையில் இயேசு கிறிஸ்துவை கொண்டிருப்பதே தேவனுடைய ஞானமாம்.**



1 கொரிந்தியர் 1:30

அந்தப்படி, நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள். எழுதியிருக்கிறபடி, மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்தே மேம்மை பாராட்டத்தக்கதாக,

நீதிமொழிகள் 8:12,

ஞானமாகிய நான் விவேகத்தோடே வாசம் பண்ணி, நல்யுக்தியான அறிவுகளைக் கண்டடைகிறேன்.

1 கொரிந்தியர் 1:24,

ஆகிலும் யூதரானாலும் கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ அவர்களுக்குக் கிறிஸ்துதேவபெலனும் தேவஞானமுமாயிருக்கிறார்.

கொலோசெயர் 2:2-3,

அவர்களுடைய இருதயங்கள் தேற்றப்பட்டு, அவர்கள் அன்பினால் இணைக்கப்பட்டு, பிதாவாகிய தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் உரிய இரகசியத்தை அறிந்துகொள்ளுகிற உணர்வின் பூரண நிச்சயத்தினுடைய எல்லா ஐசுவரியத்திற்கும் உரியவர்களாகவேண்டுமென்றே இப்படி விரும்புகிறேன். அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது.

**நாம் இதை அறிக்கையிட்டு ஜெபம் செய்வோம்.** எபேசியர் 1:17,

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத் தந்தருளவேண்டுமென்றும், வேண்டிக்கொள்ளுகிறேன், ஆமென்!

# தூண்டுதல்

## யாக்கோபு 1:12-18

4



[12]சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான்; அவன் உத்தமனென்று
விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு
வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப்பெறுவான்.
[13]சோதிக்கப்படுகிறேன் என்ற சொல்லாதிருப்பானான; தேவன்
பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர்
சோதிக்கிறவருமல்ல. [14]அவனவன் தன்தன் சுய இச்சையினாலே
இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான். [15]பின்பு



இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப்
பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது,
மரணத்தைப் பிறப்பிக்கும். [16]என் பிரியமான
சகோதரரே, மோசம்போகாதிருங்கள்.
[17]நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த
வரமும் பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின்
பிதாவினிடத்திலிருந்து இறங்கிவருகிறது;
அவரிடத்தில் யாதொரு மாறுதலும் யாதொரு
வேற்றுமையின் நிழலுமில்லை. [18]அவர்
சித்தங்கொண்டு தம்முடைய சிருஷ்டிகளில்
நாம் முதற்பலன்களாவதற்கு நம்மைச் சத்திய
சனத்தினாலே ஜெநிப்பித்தார்.


**ஒழுக்கம்:** விதிகளுக்கு ஏற்ப பயிற்சி செய்து அதன்படி நடத்தல்; துரப்பணம் அல்லது நாமே தண்டனைக்குள்ளாக்கப்பட்டு அதை சரி செய்து பயிற்சி பெறுவது.

**சோதனை :** தற்காலிகமாக அல்லது சோதனை நடவடிக்கை மூலம் முடிவுகளை அறிந்து கொள்ளுதல்; ஆராய்ச்சி அல்லது பரிசோதனை.

**தேர்வு / சோதனை:** தரம், செயல்திறன், அல்லது ஒரு காரியத்தின் நம்பகத்தன்மை, முக்கியமாக அவை பரவலான பயன்பாட்டிற்கு கொண்டு செல்வதற்கு முன் ஒரு செயல்முறையை நாம் நிறுவவேண்டும்.

**தூண்டுதல் :** ஆவலை தூண்டுவதாக செயல்: மயக்கம் அல்லது வசீகரிக்கும்: அல்லது தூண்டும், வசீகரிக்கும், மயக்கும் ஒரு காரியம்.

- ஒழுக்கம் நம்மை நேசிக்க கூடிய ஒருவரிடத்திலிருந்து வருவது, தேவன்!





● வெளியிலிருந்து வரும் சோதனைகள் அல்லது தேர்வுகள் தேவனிடத்தில், சாத்தானிடத்தில், அல்லது உலகத்திலிருந்து நம்மை நோக்கி வருபவை.

● தூண்டுதல், நம்மிடத்திலிருந்து வருபவை அல்லது உருவாகுபவை. நான் ஒழுங்குபடுத்தலுக்கு உட்பட்டிருக்கிறேனா? அல்லது சோதனை நடுவில் இருக்கிறேனா? அல்லது தூண்டப்படுகிறேனா?

## நிஎவ்வாறு மற்றும் ஏன் நாம் தூண்டப்படுகிறோம்?

i) நம்முடைய தீய எண்ணங்களே நம்மைங தூண்டுதலுக்கு இழுக்கிறது.

சுய திருப்தி மற்றும் சுய நலம் இவை இரண்டும் எல்லாவித பாவத்துக்கும் ஆதாரமாயிருக்கிறது. நாம் நம்முடைய குழந்தைகளிடம் சுயநலமாய் இருக்க கற்றுகொடுப்பதில்லை மாறாக பெருந்தன்மையுடைய பண்புகளை கற்றுக்கொடுக்கவேண்டும். பாருங்கள், ஒரு வயது நிரம்பிய குழந்தை தன்னுடைய விளையாட்டு பொருளை மற்றொரு குழந்தையிடம் பகிர்ந்து கொள்ள விரும்பாது. யாரும் சொல்லி



கொடுக்காதபோதிலும் அக்குழந்தை அப்படி செய்யும்.

**யாக்கோபு 1:14-16,** [14]*அவனவன் தன்தன் சுய இச்சையினாலே இழுக்கப்பட்டு, சிக்குண்டு, சோதிக்கப்படுகிறான்.*

*1 யோவான் 2:16 ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள்*

| நம்மை நாமே கேட்க வேண்டியவை | ஒழுக்கம் | சோதனை/ தேர்வு | தூண்டுதல்கள் (சபலம் - Tepltations) |
|---|---|---|---|
| **யார் மூலக்காரணம்?** | ஆண்டவர் | தேவன், சாத்தான், | நாம், சாத்தான் |
| **காரணம் என்ன?** | என்னுடைய கீழ்படியாமை | தேவனை பின்பற்றல் | வெளிப்பாடு மற்றும் பெருமை |
| **நான் எப்படி பதிலளிக்க வேண்டும்?** | மனந்திரும்புதல் | விடாமுயற்சி | எதிர்த்துநில் |
| **செய்யகூடாதது** | நாமாக ஒளி உருவாக்குதல் | தயக்கம்/ ஒடுங்குதல் | விழுதல் |
| **முடிவு என்ன?** | பயன் மற்றும் பரிசுத்தமாகுதல் | மரணம் மற்றும் மகிமை | பாவம் அல்லது வெற்றி |
| **கிடைக்கும் பலன் என்ன?** | நித்தியம் | நித்தியம் | நித்தியம் |

*[15]பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும், பாவம் பூரணமாகும்போது, மரணத்தைப் பிறப்பிக்கும். [16]என் பிரியமான சகோதரரே, மோசம் போகாதிருங்கள்.*

*உலகத்தினாலுண்டானவைகள்.*

ஒரு முறை நம்முடைய மனதை உலக காரியங்களில் செலுத்தினோம் என்றால் நம்முடைய கவனத்தை

முழுமையாக இழந்துவிடுவோம். அதனால் தான், நாம் மாம்ச வாழ்க்கையின்படி அல்லாமல் ஆவிக்கேற்றபடி வாழ்வதற்கு கட்டளையிடப்பட்டிருக்கிறோம்.

**ரோமர் 8:5-6,** [5]அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள், ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். [6]மாம்சசிந்தை மரணம்; ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்.

ii) பணத்தின் மீதான ஆசை மற்றும் ஐஸ்வரியவானாக வேண்டும்

**1 திமோத்தேயு 6:9,** ஐசுவரியவான்களாக விரும்புகிறவர்கள் சோதனையிலும் கண்ணியிலும், மனுஷரைக் கேட்டிலும் அழிவிலும் அமிழ்த்துகிற மதிகேடும் சேதமுமான பலவித இச்சைகளிலும் விழுகிறார்கள். கிட்டத்தட்ட ஆயிரக்கணக்கில் குலுக்குச்சீட்டில் வெற்றி பெற்றவர்கள் அரசிடமிருந்து துண்டு பிரசுரம் செய்கிறார்கள், ஏன்? பணம் சம்பாதிப்பதற்காக அநேகம் பேர் தங்களுடைய வாழ்க்கையையும் சுகத்தையும் இழந்துவிட்டார்கள். ஒரு மனிதர் தன்னுடைய வாழ்க்கை முழுவதும் சொத்து சம்பாதிப்பதற்காக தன்னுடைய குடும்பத்தையோ, உடல் நலத்தையோ கவனம் செலுத்தாமல் பணத்தின் பின்னே ஓடிக்கொண்டிருந்தார். பின் அவர் தான் சேர்த்து வைத்த எல்லா பணத்தையும் திரட்டி தன்னுடைய சுகத்தையும் குடும்பத்தையும் கையாளுவதற்கு முயற்சி செய்து கொண்டிருந்தார் என்று ஒரு பிரபலமான கதை ஒன்று உண்டு. ஆகவே, நிறைய மனச்சிக்கல் கொண்ட சரீர சுகவீனங்கள் மக்கள் பணக்காரனாக வேண்டும் என்கிற எண்ணத்தில் மாத்திரமே வருகிறது.

iii) பகைஞன், சாத்தானின் தூண்டல். நாம் விசுவாசத்தில் தோல்வி டைய முயற்சிக்கிறான்.





**1 தெசலோனிக்கேயர் 3:5,** ஆகையால், நான் இனிப்பொறுத்திருக்கக்கூடாமல், எங்கள் வேலை வீணாய்ப் போகத்தக்கதாகச் சோதனைக்காரண் உங்களைச் சோதனைக்குட்படுத்தினதுண்டோவென்று, உங்கள் விசுவாசத்தை அறியும்படிக்கு, அவனை அனுப்பினேன்.

**லூக்கா 22:32,** நானோ என் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்: நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்.

iv) சோதனை / தூண்டுதல் தேவனிடத்திலிருந்து வருகிறதில்லை.

**யாக்கோபு 1:13,** சோதிக்கப்படுகிற எவனும், நான் தேவனால் சோதிக்கப்படுகிறேன் என்று சொல்லாதிருப்பானாக; தேவன் பொல்லாங்கினால் சோதிக்கப்படுகிறவரல்ல, ஒருவனையும் அவர் சோதிக்கிறவருமல்ல.

**எவ்வாறு நாம் சோதனையை மேற்க்கொள்ள வேண்டும்?**

இயேசு, இந்த பூமியில் வாழ்ந்தபோது பாவமில்லாதிருந்தும் சோதிக்கப்பட்டார். தூண்டுதல் ஒரு பாவம் இல்லை ஆனால் அது விளைவிக்கிற காரியம்தான் பாவத்தை வருவிக்கும்.

**எபிரேசர் 4:15,** நம்முடைய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்.

1. **தேவனிடத்தில் உங்களை ஒப்புக்கொடுங்கள்.**

**யாக்கோபு 4:7,** ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களை விட்டு ஓடிப்போவான்.



**ரோமர் 6;11-13,** [11]அப்படியே நீங்களும், உங்களை பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக்கொள்ளுங்கள். 12ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப்படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக. [13]நீங்கள் உங்கள் அவயவங்கள் அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்ள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாக தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள்.

**கலாத்தியர் 5:16,** பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்.

**2. இயேசுவின்மேல் உங்கள் கண்கள் நோக்கமாயிருக்கக்கடவது.**
**எபிரேயர் 4:15,** நம்முஜடய பலவீனங்களைக்குறித்துப் பரிதபிக்கக்கூடாத பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கிருக்கிறார்.

**எபிரேயர் 2:18,** ஆதலால், அவர்தாமே சோதிக்கப்பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவிசெய்ய வல்லவராயிருக்கிறார்.
கொலோசெயர் 3:2, பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்.

**3.. அவர் வார்த்தைகளினால் நிறைந்திருங்கள்!‘**
**சங்கீதம்** 119:11, நான் உமக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்யாதபடிக்கு, உமது வாக்கை என்னிருதயத்தில் வைத்து வைத்தேன்.
இயேசு மூன்று இடங்களில் சோதிக்கப்பட்டபோது, எழுதியிருக்கிறபடி அவர் இந்த வாக்கியங்களை சொன்னார். (மத்தேயு 4:4, 7 & 11)



**4. ஜெபம்பண்ணுங்கள், அப்பொழுது சோதனைக்குட்படமாட்டீர்கள்.**
**மத்தேயு 26:41,** நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்.

**மத்தேயு 6:13,** எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், ராஜ்யமும் வல்லமையும், மகிமையும் என்றென்றைக்கும் உம்முடையவைகளே, ஆமென், என்பதே.

**லூக்கா 9:23,** பின்பு அவர் எல்லாரையும் நோக்கி: ஒருவன் என் பின்னே வர விரும்பினால், அவன் தன்னைத் தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக்கொண்டு, என்னைப் பின்பற்றக்கடவன்.

**5. பிடிப்பினை சாத்தானிடம் கொடுத்துவிடக்கூடாது.**
**1 கொரிந்தியர் 7:5,** உபவாசத்திற்கும் ஜெபத்திற்கும் தடையிராதபடிக்கு இருவரும் சிலகாலம் பிரிந்திருக்கவேண்டுமென்று சம்மதித்தாலன்றி, ஒருவரைவிட்டு ஒருவர் பிரியாதிருங்கள்; உங்களுக்கு விரதத்துவம் இல்லாமையால் சாத்தான் உங்களைத் தூண்டிவிடாதபடிக்கு, மறுபடியும் கூடி வாழுங்கள்.

**எபேசியர் 4:26,** நீங்கள் கோபங்கொண்டாலும் பாவஞ்செய்யாதிருங்கள், சூரியன் அஸ்தமிக்கிறதற்கு முன்னாக உங்கள் எரிச்சல் தணியக்கடவது;
ஆறுதல் - முடிவுரை

**1 கொரிந்தியர் 10:13,** மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்.

5

# பார்க்கும் விதம்

**யாக்கோபு 4:1-10**

வரியவான் தான் தாழ்த்தப்பட்டதைக்குறித்து மேன்மைபாராட்டக்கடவன்; ஏனெனில் அவன் புல்லின் பூவைப் போல் ஒழிந்துபோவான். சூரியன் குடும் வெய்யிலுடன் உதித்து, புல்லை உலர்த்தும்போது, அதின் பூ உதிர்ந்து, அதின் அழகான வடிவு அழிந்துபோம்; ஐசுவரியவானும் அப்படியே தன் வழிகளில் வாடிப்போவான்.

இயேசு கிறிஸ்துவின் ஞானத்தை பெற்றிருந்தோமானால், நாம் வாழ்வைக்காணும் கோணம் மாறும். இந்த மாத்தரம் நிகழும்பொது நாம் பிறரை உலக தரத்தால் அளவிடாமல் தேவனுடைய தரத்தைக் கொண்டே அளவிடுவோம்.

தேவன் பேரில் நம்பிக்கையாய் இருக்கிற ஏழை ஜனங்கள் உலக பார்வைக்கு ஐஸ்வர்யவான்களாய் இல்லாவிட்டாலும் இயேசு கிறிஸ்துவுக்குள் தாங்கள் ஐஸ்வரியவான்களாய் இருக்கிறோம்



என்று உணர வேண்டும், ஏன்னென்றால் வரும்நாட்களில் தேவனே அவர்களுடைய நம்பிக்கையாய் இருப்பார் என்றும் அவர்கள் தேவனிடத்தில் ஐஸ்வர்யவான்களாய் இருக்கிற மனநிறைவு அவர்களுக்கு வேண்டும் என்பதற்காக அவர்களை உற்சாகப்படுத்த விரும்புகிறார்.

**2 கொரிந்தியர் 8:9,**

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையை அறிந்திருக்கிறீர்களே; அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரரானாரே.

## செல்வ செழிப்பாக இருப்பது தவறா?

இன்றைய கிறிஸ்தவ மக்களிடையே தவறான கருத்து உண்டு, அதாவது ஒருவர் பணக்காரராக இருந்தால் அவர் கிறிஸ்தவர் அல்ல என்றும் ஒருவர் ஏழையாக இருந்தால் பரிசுத்தவான் என்று நினைகிறார்கள். இவ்விரண்டுமே தவறு.

அதிக செல்வம் உடையவர்களாக இருப்பது பிரச்சனை அல்ல ஆனால் அந்த செல்வமே உங்களை ஆளுகை செய்ய ஆரம்பித்தால் பிரச்சனை ஆகிவிடும். நீங்கள் பணம் வைத்திருப்பது பிரச்சனை அல்ல அந்த பணம் உங்களை ஆட்கொள்வதுதான் பிரச்சனை.

**பணத்தை வைத்து கொண்டு உங்களால் தேவனுக்கு ஊழியம் செய்யமுடியுமா?**

**வறுமையிலிருந்து கொண்டு உங்களால் தேவனுக்கு ஊழியம் செய்ய முடியுமா?**

ஆமாம், இவ்விரண்டுமே சாத்தியம். உங்களுடைய அழைப்பையும் நோக்கத்தையும் அறிந்து கொண்டீர்களானால் இவ்விரண்டுமே சாத்தியம்தான். நோக்கமில்லாத செழிப்பு அநேக மக்களுடைய வாழ்க்கையை சீரழித்திருக்கிறது.
புதிய உடன்படிக்கை விசுவாசிகளான நாம் தெளிவாக புரிந்துகொள்ள வேண்டிய காரியம், உலக செல்வம் தேவனுடைய ஆசிர்வாதத்துக்கான அறிகுறியல்ல என்பதே. ஆமாம், பழைய உடன்படிக்கையில், ஐஸ்வரியம் தேவனிடத்திலிருந்து பெற்றவையாக கருதப்பட்டது. ஆனால், புதிய உடன்படிக்கையில் தேவனுடைய ஆசீர்வாதம் என்பது உலக வாழ்வு அல்ல நித்ய வாழ்வை பெறுவதே.

**பழைய உடன்படிக்கையின் ஆசிர்வாதம் உலகபிரகாரமானவை**
**புதிய உடன்படிக்கையின் ஆசிர்வாதமோ நித்தியம்.**

வேதத்தை விசுவாசிக்கும் கிறிஸ்தவர்கள், பூமியில் செல்வ செழிப்பாக இருப்பது தேவனிடத்திலிருந்து வந்த ஆசீர்வாதம் என்கிற ஒரு தவறான வலையில் சிக்கிக்கொள்கிறார்கள், செழிப்பை முன்வைத்து போதிக்கிற அடிப்பட்ட தவறான போதனைகள் அநேகரை அழித்துவிடுகிறது.

இயேசு கிறிஸ்துவும் அவருடைய சீஷர்களும் பூமியிலிருக்கும்போது ஐஸ்வரியவான்களாய் இருக்கவில்லை. மற்றும் அவர் உயிர்த்தெழுந்தபோது அவருடைய சீஷர்களை பெரும் தனவான்களாய் அல்லது கோடீஸ்வரராய் மாற்றவில்லை!!

**1. நாமெல்லோரும் தேவனுடைய சாயலிலே படைக்கப்பட்டிருக்கிறோம்.**
ஏழையும் பணக்காரனும் அனைவருமே தேவனுடைய சாயலிலே படைக்கப்பட்டிருக்கிறார்கள். நாம் ஏழையாக இருந்தாலும் பணக்காரனாக இருந்தாலும் அவருடைய நாமம் மகிமைப்படும்படியாக அவர் நமக்கு ஐஸ்வரியத்தை கொடுத்ததிருக்கிறார். எல்லா மனிதர்களும் அவருடைய சாயலிலே உருவாக்கப்பட்டிருக்கிறார்கள்.

**2. தேவனே எல்லா ஆசிர்வதஙகளுக்கும் ஆதாரமாயிருக்கிறார்.**
எல்லாம் அவரிடத்திலிருந்து வருகிறது, அவரே எல்லாவற்றிற்கும் ஆதாரம்.



**1 கொரிந்தியர் 4:7,**

> அன்றியும் உன்னை விசேஷித்தவனாகும்படி செய்கிறவர் யார்? உனக்க உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக்கொள்ளாதது யாது? நீ பெற்றுக்கொண்டவனானால் பெற்றக்கொள்ளாதவன்போல் ஏன் மேன்மைபாராட்டுகிறாய்?

நாம் எல்லாவற்றையும் அவரிடத்திலிருந்து பரிசாக பெற்றிருக்கிறோம்!! ஆனால் மக்கள் தாங்கள் வாழும் வாழ்க்கையே பரிசாக பெற்றிருக்கிறோம் என்பதை உணர்வதில்லை.

**3. நீங்கள் இருக்கும் நிலை தேவனிடத்திலிருந்து வந்தது.**
அவருடைய நற்கிரியைகளை செய்வதற்காக நாம் எல்லோரும் படைக்கப்பட்டிருக்கிறோம்.

**எபேசியர் 2:10,**

> ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.

**தானியேல் 4:20-21,**

> [20]நீர் கண்ட விருட்சம் வளர்ந்து பலத்து, வானத்தின் எல்லைபரியந்தம் காணப்படத்தக்கதாக அதின் உயரம் வானபரியந்தம் எட்டினது. [21]அதின் இலைகள் நேர்த்தியும், அதின்கனி மிகுதியுமாயிருந்தது; எல்லா ஜீவனுக்கும் அதில் ஆகாரம் உண்டாயிருந்தது; அதின்கீழே வெளியின் மிருகங்கள் தங்கினது, அதின் கொப்புகளில் ஆகாயத்துப்பட்சிகள் தாபரித்தது.

**4. தேவன் நாம் ஒவ்வொருவருக்கும் பிரத்தியேகமாக ஒரு நோக்கம் வைத்திருக்கிறார்.**
தேவன், ஒரு சிலரை உன்னத நோக்கத்திற்கும் ஒரு சிலரை சாதாரண நோக்கத்திற்கும் படைத்திருக்கிறார். ஆகையால், ஏன இப்படி செய்தீர்? என்ற அவரை கேள்வி கேட்பதற்கு நமக்கு எந்த அதிகாரமுமில்லை.

**தானியேல் 4:34-35**
அந்த நாட்கள் சென்றபின்பு, நேபுகாத்நேச்சாராகிய நான் என் கண்கள் வானத்துக்கு ஏறெடுத்தேன்; என் புத்தி எனக்குத் திரும்பி

வந்தது; அப்பொழுது நான் உன்னதமானவரை ஸ்தோத்திரித்து, என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவரைப் புகழ்ந்து மகிமைப்படுத்தினேன்; அவருடைய கர்த்தத்துவமே நித்திய கர்த்தத்துவம், அவருடைய ராஜ்யமே தலைமுறை தலைமுறையாக நிற்கும். பூமியின் குடிகள் எல்லாம் ஒன்றுமில்லையென்று எண்ணப்படுகிறார்கள்; அவர் தமது சித்தத்தின்படியே வானத்தின் சேனையையும் பூமியின் குடிகளையும் நடத்துகிறார், அவருடைய கையைத் தடுத்து, அவரை நோக்கி: என்ன செய்கிறிரென்று சொல்லத்தக்கவன் ஒருவனும் இல்லை என்றேன்.

**ரோமர் 9:20-21,**

அப்படியானால், மனுஷனே, தேவனோடு எதிர்த்துத் தர்க்கிக்கிற நீ யார்? உருவாக்கப்பட்ட வஸ்து உருவாக்கினவனை நோக்கி: நீ என்னை ஏன் இப்படி உண்டாக்கினாயென்று சொல்லலாமா? மிதியிட்ட ஒரே களிமண்ணினாலே குயவன் ஒரு பாத்திரத்தைக் கனமான காரியத்துக்கும், ஒரு பாத்திரத்தைக் கனவீனமாக காரியத்துக்கும் பண்ணுகிறதற்கு மண்ணின்மேல் அவனுக்கு அதிகாரம் இல்லையோ?

**2 தீமோத்தேயு 2:20-21,**

ஒரு பெரிய வீட்டிலே பொன்னும் வெள்ளியுமான பாத்திரங்களுமல்லாமல் மரமும் மண்ணுமான பாத்திரங்களுமுண்டு; அவைகளில் சில கனத்திற்கும் சில கனவீனத்திற்குமானவைகள். ஆகையால் ஒருவன் இவைகளைவிட்டு, தன்னைச் சுத்திகரித்துக்கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும் எஜமானுக்கு உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான்.

ஆதலால், நாம் இன்ன இடத்திலிருந்து வந்தோம், எந்த நிலைமையில் இருக்கிறோம் என்பது தேவனிடத்திலிருந்து வந்த காரியம். அதனால், அவர் நம்மை அழைத்த காரியத்திற்காக அவருக்கு நாம் உண்மையுள்ளவர்களாய் இருக்கவேண்டும்.



**மத்தேயு 25:14-30ல்** தாலந்து பற்றிய ஒரு உவமையை நினைத்துகொள்ளுங்கள். இயேசு, ஒருவனுக்கு 5ம் மற்றவனுக்கு 2ம் மற்றொருவனுக்கு 1மாய் பகிர்ந்தளித்திருக்கிறார். அவர்கள் நல்ல மனிதர்களாகவும் உண்மையுள்ளவர்களாகவும் இருக்கிறார்களா என்ற ஒரே ஒரு காரியத்தில் மாத்திரம் நியாயந்தீர்கிறார்.

தங்களுடைய சொத்துகயைம் உடைமைகளையும் இழந்து மிகவும் வறுமையில் விசுவாச சோதனையில் வாழ்ந்து கொண்டிருக்கிற, சிதறியிருக்கிற அநேக யூத சகோதரர்களுக்கு யாக்கோபு அவ்வாறாக எழுதுகிறார். உங்களுடைய வறுமையினிமித்தம் உயர்வாக எண்ணுங்கள் ஏனென்றால் பரலோகத்திலே நித்திய ஐஸ்வரியவானகளாய் இருப்பீர்கள் என்று அவர்களை பார்த்து சொல்லுகிறார்.

**யாக்கோபு 1:9**

தாழ்ந்த சகோதரன் தான் உயர்த்தப்பட்டதைக்குறித்து மேன்மைபாராட்டக்கடவன். (பிலிப்பு)

ஏன்னென்றால் உண்மையான ஐஸ்வரியம் பரலோகத்தில் இருக்கிறது ஆதலால், அவர் அந்த நம்பிக்கையோடே வாழ வேண்டும். ஐஸ்வரியவான்களை பற்றி பேசும்போது அந்த ஐஸ்வரியத்தை கொண்டிருக்கிற நாம் மிகவும் தாழ்மையுள்ளவர்களாய் இருக்க வேண்டும். ஏன்னென்றால் ஐஸ்வரியம் நிலையானது அல்ல என்று கூறிகிறார்.

**யாக்கோபு 1:10,**

ஐசுவரியவான் தான் தாழ்த்தப்பட்டதைக்குறித்து மேன்மைபாராட்டக்கடவன்; ஏனெனில் அவன் புல்லின் பூவைப்போல் ஒழிந்துபோவான்.

ஆகவே, ஐஸ்வரியவான் தன்னை எப்பொழுதும் தாழ்த்தி கொள்ளவேண்டும் மற்றும் எல்லாவற்றையும் இழந்துபோனாலும் அவன் சந்தோஷமாய் இருக்க வேண்டும். ஏனென்றால், அவனுடைய உலக வாழ்க்கையைவிட, நித்திய வாழ்வும் மதிப்பும் மிக முக்கியமானதாக கருதப்படுகிறது.

**மத்தேயு 6:19-21**

பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து

வைக்கவேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். பரலோகத்திலே உங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.

நாம் பூமியில் அல்ல பலலோகத்திலே பொக்கிஷங்களை சேர்த்து வைக்க வேண்டும் என்று இயேசு நமக்கு கட்டளையிட்டிருக்கிறார். ஆகவே, நீங்கள் ஐஸ்வரியவானாயிருந்தால் பரலோகத்திலே பொக்கிஷங்களை சேர்க்கும்படியாய் உங்கள் பொக்கிஷங்களை நற்காரியங்களுக்கு பயன்படுத்துங்கள்.

நாம், அன்று பணக்காரனாய் இருந்து இன்று ஒன்றுமில்லாமல் வாழும் பல ஐஸ்வரியமுள்ள மனிதர்களை காண்கிறோம். நம்முடைய சொந்த வாழ்க்கையில், தங்களுடைய செல்வம் எல்லாவற்றையும் இழந்தவர்களை நாம் கண்டிருக்கிறோம்.

2 கோடிக்கு மேல் குலுக்கல் பரிசுச் சீட்டு வென்றவர்களுள் சுமார் 21 பேர் இன்று அரசாங்கத்தின் உதவித்தொகை மூலமே வாழ்க்கை நடத்துகிறார்கள் என்று ஆய்வு கூறுகிறது.

**யாக்கோபு** 1:11,

சூரியன் கடும் வெய்யிலுடன் உதித்து, புல்லை உலர்த்தும்போது,
அதின் பூ உதிர்ந்து, அதின் அழகான வடிவு அழிந்துபோம்;



ஐசுவரியவானும் **அப்படியே தன் வழிகளில் வாடிப்போவான்.** செல்வம் நிலையானது அல்ல, யாக்கோபு அதை காலையில் மலர்ந்து பின்பு களையாக மாறும் பூக்களுக்கு ஒப்பிடுகிறார். நமக்கு லண்டனில் இருப்பது போல, எருசலேமில் தென்பகுதி கடலிலிருந்து வரும் சூடு காற்றினால் அந்த பூக்கள் சீக்கிரமாய் உலர்ந்துபோம். அவர் எருசலேமில் வாழ்ந்தவர் என்பதால் அவருக்கு நன்றாக தெரியும்.

அவருடைய கடைசி வாக்கியத்தை பின்தொடர்ந்து பார்க்கும்போது; ஐஸ்வரியவான்கள் தங்களுடைய செல்வத்திநிமித்தம் திருப்தி அடையமாட்டார்கள், அவர்கள் மேலும் அதை பின்தொடர்ந்து போய்கொண்டே இருப்பார்கள்.

1 **தீமோத்தேயு** 6:10,

**பண ஆசை எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது;** சிலர் அதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக் குத்திக்கொண்டிருக்கிறார்கள்.

பணம் ஒரு பிரச்சனை அல்ல ஆனால் அதையே நேசிப்பது தான் பிரச்சனை. ஒருமுறை செல்வத்தை நோக்கி நாம் பின்தொடர்ந்தோமானால் பின்பு நம்முடைய விசுவாசத்திலும் தேவனை நோக்கும் காரியத்திலேயும் அமிழ்ந்து போய்விடுவோம்.

2 **தீமோத்தேயு** 3:1-2

[1]மேலும், கடைசிநாட்களில் கொடியகாலங்கள் வருமென்று அறிவாயாக. [2]எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், **பணப்பிரியராயும்,** வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய் தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும்,

இயேசு, பணம் மற்றும் தேவனை பின்தொடர்வதில் மிகவும் ஆணித்தரமாக இருந்தார்.

**லூக்கா** 16:13,

எந்த ஊழியக்காரனும் இரண்டு எஜமான்களுக்கு

ஊழியஞ்செய்யக்கூடாது, ஒருவனைப் பகைத்து மற்றவனைச் சிநேகிப்பான், அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றவனை, அசட்டைபண்ணுவான். தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியஞ்செய்ய உங்களாலே கூடாது என்றார்.

## எப்படி நாம் வாழ்கிறோம்?

**1 தீமோத்தேயு 6:17-19**

இவ்வுலகத்திலே ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாயிராமலும், நிலையற்ற ஐசுவரியத்தின் மேல் நம்பிக்கை வையாமலும், நாம் அனுபவக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச் சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைக்கவும், நன்மை செய்யவும், நற்கிரியைகளில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களும், உதாரகுணமுள்ளவர்களுமாயிருக்கவும், நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்ளும்படி வருங்காலத்திற்காகத் தங்களுக்கு நல்ல ஆதாரத்தைப் பொக்கிஷமாக வைக்கவும் அவர்களுக்குக் கட்டளையிடு,

ஆதலால், நாம் செல்வத்தை நம்பி அதை பின்தொடராமல் ஜீவனுள்ள தேவனை பின்தொடருவோம்!

கடைசியாக, இந்த வேத வசனத்தின் மூலம் உங்களை உற்சாகப்படுத்த விரும்புகிறேன்.

**பிலிப்பியர் 4:11-13,**

[11]என் குறைச்சலினால் நான் இப்படிச்
சொல்லுகிறதில்லை; ஏனெனில் நான் எந்த
நிலைமையிலிருந்தாலும் மனரம்மியமாயிருக்கக்
கற்றுக்கொண்டேன். [12]தாழ்ந்திருக்கவும்
எனக்குத் தெரியும், வாழ்ந்திருக்கவும் எனக்குத்
தெரியும்; எவ்விடத்திலும் எல்லாவற்றிலும்
திருப்தியாயிருக்கவும் பட்டினியாயிருக்கவும்,
பரிபூரணமடையவும் குறைவுபடவும்
போதிக்கப்பட்டேன். [13]என்னைப் பெலப்படுத்துகிற
கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய
எனக்குப் பெலனுண்டு.

# கேட்பவரா அல்லது செய்பவரா?

6



## யாக்கோபு 1:21–25

21 ஆகையால், நீங்கள் எல்லாவித
அழுக்கையும் கொடிய
துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு,
உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும்
உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க
வல்லமையுள்ளதாயுமிருக்கிற
வசனத்தைச் சாந்தமாய்
ஏற்றுக்கொள்ளுங்கள். 22 அல்லாமலும்,
நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத்
திருவசனத்தைக் கேட்கிறவர்களாய்
மாத்திரமல்ல, அதின்படி
செய்கிறவர்களாயும் இருங்கள்.
23 என்னத்தினாலெனில், ஒருவன்
திருவசனத்தைக் கேட்டும் அதின்படி
செய்யாதவனானால், கண்ணாடியிலே
தன் சுபாவ முகத்தைப் பார்க்கிற
மனுஷனுக்கு ஒப்பாயிருப்பான்;
24 அவன் தன்னைத்தானே
பார்த்து, அவ்விடம்விட்டுப்
போனவுடனே, தன்சாயல்
இன்னதென்பதை மறந்துவிடுவான்.
25 சுயாதீனப்பிரமாணமாகிய
பூரணப்பிரமாணத்தை
உற்றுப்பார்த்து, அதிலே
நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை
மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற
கிரியை செய்கிறவனாயிருந்து, தன்
செய்கையில் பாக்கியவானாயிருப்பான்.

### முதலாவது வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள்

**சாந்தம் பலவீனம் அல்ல**

அகராதியின்படி சாந்தம் என்பது : ஒரு அமைதியான மற்றும் மென்மையான தன்மை: பிறரோடு போராட அல்லது வாக்குவாதம் செய்ய விருப்பம் இல்லாத தன்மை.

விவிலிய பயன்பாட்டில், சாந்தம் என்பது கனிவு, பரிவு, விரோதம் இல்லாத தன்மை.

**மத்தேயு 5:5**, சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்.

II **கொரிந்தியர்** 10:1(a) பவுலாகிய நான் கிறிஸ்துவின் சாந்தத்தையும் தயவையும் முன்னிட்டு உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.

**யோவான் 13:5**, பின்பு பாத்திரத்தில் தண்ணீரை வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார்.

**லூக்கா 23:34**, அப்பொழுது இயேசு: பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார். அவருடைய வஸ்திரங்களை அவர்கள் பங்கிட்டுச் சீட்டுப்போட்டார்கள்.

### வார்த்தை விதைக்கப்பட வேண்டும்!

தேவனுடைய வார்த்தையை கேட்பது மாத்திரமல்ல, விதைக்க வேண்டும் நீங்கள் ஒரு குறிப்பிட்ட தலைப்பின்கீழ் விரிவுரையை கேட்க சென்றால், அவைகளை கேட்டு அது உண்மைஎன்று நம்புகிறீர்கள்; ஆனாலும் அது உங்கள் வாழ்க்கை முறையை வழி மாற்ற முடியாது. ஆனால் தேவனுடைய வார்த்தையோ உயிருள்ளதும் செயல்படக்கூடியதுமாயிருக்கிறது மற்றும் வேறு எந்த விரிவுரையும் இது போல இருக்க முடியாது.

அது உங்கள் இருதயங்களில் விதைக்கப்படவேண்டும் .

தேவனை பற்றிய அறிவு பரிசேயர்களுக்கு இருந்தும் தேவனை அறியாமல் இருக்கிறார்கள் என்பதே இதற்கு சிறந்த உதாரணம் .

அவர்கள் வேதத்தை முற்றிலும் ஆய்வு செய்வதிலும் வரப்போகிற மேசியாவை குறித்து பிரசிங்கிப்பதிலும் தங்களுடைய வாழ்க்கையை கழித்தார்கள். ஆனால் அவர் வந்தபோதோ அவரை முழுமையாக தவறவிட்டார்கள்.

**வேறு சில வார்த்தைகளை கேட்பதற்கும் தேவனுடைய வார்த்தையை கேட்பதற்கும் என்ன வேறுபாடு?**

வேறு சில வார்த்தைகள் பொதுவான அறிவை தருமானால் தேவனுடைய வார்த்தை அப்படி அல்ல.

சிரசின் அறிவு தகவல்களை கொடுக்கும்.

இருதயத்தின் அறிவோ மாற்றத்தை கொடுக்கும்.

I **கொரிந்தியர்** 8:1, விக்கிரகங்களுக்கு படைக்கப் பட்டவைகளைக்குறித்த விஷயத்தில், நம்மெல்லாருக்கும் அறிவு உண்டென்று நமக்குத் தெரியுமே. அறிவு இறுமாப்பை உண்டாக்கும், அன்போ பக்திவிருத்தியை உண்டாக்கும்.

ஒரு நல்ல உதாரணம், ஒருவருடைய பணப்பற்றாக்குறையை கேள்விப்படுகிறீர்கள் என்று வைத்து கொள்வோம் ஆனால் நீங்கள் அவருக்கு உதவி செய்ய முன்வரவில்லை அல்லது உங்களிடம் உதவி செய்ய போதிய வசதி இல்லை. மாறாக அந்த எண்ணம் உங்கள் மனதிலே நீடித்திருக்கும்.

ஆனாலும் திரும்பவும் அப்படி ஒரு தேவையை நீங்கள் அறியும் போது மற்றவர்கள் யாராவது உதவி செய்யட்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள், அப்பொழுதும் ஏன் ஒருவர் கூட அவருடைய தேவையை சந்திக்கவில்லை என்றுதான் நியாந்தீர்கிறீர்களே தவிர நீங்களும் ஒன்றும் செய்யவில்லை!!

நீங்கள் உங்களை கண்ணாடியில் பார்ப்பதுபோல மற்றொரு அற்புதமான உதாரணத்தையும் யாக்கோபு கொடுத்ததிருக்கிறார்

**தேவனுடைய வார்த்தையானது நீங்கள் உங்களுடைய முகத்தை ஒளியிலே கண்ணாடியில் பார்ப்பதற்கு சமம். நீங்கள் எண்ணத்தை காண்கிறீர்கள்?**

**நீங்கள் உங்களில் பார்க்கும் குறைகள் பாவங்கள் என்ன??**

**எப்படி அவற்றை திருத்தி கொள்வீர்கள்?**



எப்பொழுதும் மனுஷர் தங்கள் குறைகளை கண்ணாடியிலே சரி செய்ய முயற்சிக்கிறார்கள் ஆனால் சுயத்திலே அல்ல. கேட்டது போல் இருக்கிறதா?

எனவே நாம் கேட்கும் போது சொல்லியிருக்கிறபடி கட்டளையைப் பெற்று கொண்டோம், இல்லாவிட்டால் என்ன நடக்கும்? உங்களையே நீங்கள் ஏமாற்றி கொள்வீர்கள்!!

தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ளும் சூழ்நிலை ஏற்படும்போது போது யார் காப்பாற்ற முடியும்?

தேவனுடைய வார்த்தை உங்களை மாற்ற வேண்டும் என்று சங்கீதம் 119:11 மற்றும் யோவான் 17:17ல் சொல்லப்பட்டியிருக்கிறது. நீங்கள் ஆலயத்திற்கு வந்து அமர்ந்து போதனைகளை வருஷக்காலமாய் கேட்டும் சத்தியத்தினால் உணராதவர்களாய் உங்களை மாற்றி கொள்ளவில்லை என்றால் உங்களை நீங்களே ஏமாற்றிக்கொள்கிறீர்கள். நீங்கள் வேதத்தை முழுமையாக வாசித்து அதை அறிந்து தெரிந்து கொண்டு அவற்றை உங்கள் வாழ்க்கை நடைமுறையில் கொண்டு வராவிட்டால் நீங்களே உங்களை வஞ்சிக்கிறீர்கள் என்று பொருள்.

இந்த மாதிரியான ஏமாற்று வேலைகளை பக்திமான்களாய் தங்களை காட்டிக்கொள்ளும் மக்களிடையே காணலாம். மேலும் தங்கள் மனதில் தேவனைப் பற்றிய உண்மையான அறிவு பெற்றதுமன்றி தெரிந்த மட்டும் போதும் என்று நினைக்கிறார்கள். வேதாகம அறிவு அநேக போதகர்கள் அல்லது பிரசிங்கிமார்களை உருவாக்க கூடாது மாறாக மனிதர்களை தேறினவர்களாய் மாற்ற கூடியதாய் இருக்கிறது.

II தீமோத்தேயு 3:17, வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது; தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படி, மேலே சொன்னபடி ஒரு மனிதனுடைய மனதில் இருக்கும் சத்தியம் அவனுடைய சுபாவத்தை மாற்றாது அவனுடைய வாழ்க்கையில் தேவனை பிரதிபளிக்காது.

தேவனை பற்றி அறிந்திருந்தாலும் தங்களுடைய வாழ்க்கையில் பிரதிபளிக்காமல் தங்களைத்தாங்களே ஏமாற்றிக்கொண்ட இரண்டு காரியங்களை உதாரணமாக சொல்லுகிறேன்

**சிம்சோன்:**
இஸ்ரவேல் தேசத்தாரில் மிகவும் பராக்கிரமசாலியான சிம்சோன் என்பவன் தேவனால் அபிஷேகம்

பண்ணபட்டவன். இவன் தெலீலாள் என்பவளை அநேகந்தரம் முட்டாளாக்கி தான் மிகவும் பாதுகாப்பாக இருக்கிறோம் என்று நினைத்துகொண்டிருந்தான். இறுதியில் அவன் தன் இருதயத்தையெல்லாம் அவளுக்கு வெளிப்படுத்தினதைத் தெலீலாள் கண்டபோது அவன் உறங்கிக்கொண்டிருக்கும் போது எதிரிகளிடத்திலே காட்டிகொடுத்தாள்.

எதிரிகள் வந்து அவனுடைய தலை மயிரை கத்தரித்துப்போட்டார்கள்.

பெலிஸ்த்தியர்கள் உன்னை தேடித்திரிகிறார்கள் என்று அவள் அவனை கூப்பிட்டு சொன்னதை அவன் அறியவில்லை. அவன் விழித்துக்கொண்ட போது தேவன் அவனை விட்டு விலகிப் போனார் என்பதை அவன் அறியாமல் எப்பவும் போல எதிராளிகளை அசைத்துவிடலாம் என்று தன் மனதிலே சிந்தித்துக்கொண்டிருந்தான். நியாயாதிபதிகள் 16:20.

அவன் ஆலையிலே அரைத்து கொண்டிருக்கும்போது மிகவும் மோசமாக தன்னைத்தான் ஏமாற்றி கொண்டதை நினைத்து பாடம் ஒன்றை கற்றிருப்பான் என்று உறுதியாக என்னால் சொல்ல முடியும்.

**வீட்டைக் கட்டுபவர்:**

**லூக்கா 6:46-49ல்,** செய்பவர்கள் செய்யாதவர்கள் - இவர்களை பற்றின ஒரு வேறுபாட்டை இயேசு கற்பித்து கொடுத்திருக்கிறார்:

46 **என்னை ஆண்டவரே! ஆண்டவரே!** என்று நீங்கள் சொல்லியும், நான் சொல்லுகிறபடி நீங்கள் செய்யாமற்போகிறதென்ன?

47 என்னிடத்தில் வந்து, என் வார்த்தைகளைக் கேட்டு, அவைகளின்படி செய்கிறவன் யாருக்கு ஒப்பாயிருக்கிறானென்று உங்களுக்குக் காண்பிப்பேன்.

48 ஆழமாய்த் தோண்டி, கற்பாறையின் மேல் அஸ்திபாரம்போட்டு, வீடுகட்டுகிற மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறான்; பெருவெள்ளம் வந்து, நீரோட்டம் அந்த வீட்டின்மேல் மோதியும், அதை அசைக்கக்கூடாமற்போயிற்று; ஏனென்றால் அது கன்மலையின்மேல் அஸ்திபாரம் போடப்பட்டிருந்தது.

49 என் வார்த்தைகளைக் கேட்டும் அவைகளின்படி செய்யாதவனோ அஸ்திபாரமில்லாமல் மண்ணின்மேல் வீடுகட்டினவனுக்கு ஒப்பாயிருக்கிறான்; நீரோட்டம் அதின் மேல் மோதினவுடனே அது விழுந்தது; விழுந்து, முழுவதும் அழிந்தது என்றார்.

வெற்றி மற்றும் தோல்விக்கான வேறுபாடு நம்முடைய கேட்கும்



அல்லது செய்யும் திறனில் தான் உள்ளது.
இரண்டு பேர் கட்டுகிற வீடு அவர்கள் கட்டித்தீர்ந்த பின்பு முடிவில் வேறுவிதமாக காணப்படும்.

உறுதியான அஸ்திபாரத்தில் எவன் தன் வீட்டை கட்டுகிறானோ அவன் தேவனுடைய சத்தத்தை கேட்டு அதன்படி கட்டுகிறான். மற்றவன் அஸ்திபாரமில்லாமல் கட்டுகிறான்.

நமக்கு முன்பாக இருக்கிற காரியங்களை இயேசு ஒருவரே அறிந்திருக்கிறார். ஆகவே, அவர் சொல்வதை கேட்காமல் நம்முடைய இஷ்டத்தின்படி செய்வோமானால் நமக்கு நாமே தோல்விகளையும் அழிவுகளையும் உருவாக்கி கொள்கிறவர்களாய் இருப்போம்.

இயேசுவை பின்பற்றுகிறவர்களுக்கு அவர் சொல்வதை விட வேறு எந்த முடிவான அதிகாரமும் இல்லை.

சில சமயங்களில் **"புயல்கள்"** நமக்கு எதிராக புறப்பட்டு வரும் என்பதை இயேசு தெளிவாக சொல்லியிருக்கிறார். அதிலிருந்து தப்பித்து கொள்ளவே முடியாது. ஆயினும் அவற்றை எப்படி எதிர்கொண்டு ஜெயம் பெறுவீர்கள் என்பது நீங்கள் கிறிஸ்துவின் வார்த்தையை "கேட்டு அதற்கு கீழ்ப்படிகிறீர்கள் என்பதை பொறுத்தே தீர்மானிக்க முடியும்.

ஆகவே உங்களுடைய நிரந்தர வாழ்விடம் எங்கே கட்டப்படயிருக்கிறது? நிலையான அஸ்திபாரமாகிய இயேசுவின் மேலேயா? அல்லது உங்கள் விருப்பத்தின்படியா?

ஆகவே யாக்கோபு யூத விசுவாசிகளிடத்தில் அவர்கள் எதை விசுவாசிக்கிறார்களோ அதை அவர்கள் வாழ்வில் பிரதிபளிக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருக்கிறார்.

இறுதியாக, இயேசு கிறிஸ்து ஏழு சபைகளுக்கு கடிதங்களை எழுதின போது, கடைசி கடிதம் லவோதிக்கேயா சபைக்கு அனுப்பப்பட்டது. சபை மூப்பர்கள் அந்த கடிதத்தில் சொல்லப்பட்ட காரியங்கள் அனைத்தும் சரி என்று ஏற்றுக்கொண்டார்கள்.

வெளிபடுத்தின விசேஷம் 3:17, நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல், நான் ஐசுவரியவானென்றும், திரவியசம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும் சொல்லுகிறபடியால்;

மற்ற சபைகளுக்கு அல்ல, ஒருவேளை இயேசு கிறிஸ்து நம்முடைய சபைக்கு ஒரு கடிதம் எழுதுவாரானால் என்ன



எழுதுவார் எப்படி எழுதுவார் என்பதை ஆராய்ந்து பார்ப்போம்.
அதனால், தன்னைத்தான் ஏமாற்றிக்கொள்வதை எப்படி தவிர்ப்பீர்கள்?
யாக்கோபு 1:25, சுயாதீனப்பிரமாணமாகிய பூரணப்பிரமாணத்தை உற்றுப்பார்த்து, அதிலே நிலைத்திருக்கிறவனே கேட்கிறதை மறக்கிறவனாயிராமல், அதற்கேற்ற கிரியை செய்கிறவனாயிருந்து, தன் செய்கையில் பாக்கியவானாயிருப்பான்.

**வார்த்தையை நினைவில் கொள்ளுதல்,**

**வார்த்தையின்படி செய்தல், மற்றும்**



**வார்த்தையில் தொடர்ந்து நிலைத்திருத்தல்;**
இவையே நம்முடைய சுபாவங்களை மாற்றி சுய ஏமாற்றத்தை எதிர்கொள்ள செய்கிறது. கண்ணாடியைப் போல, தேவனுடைய வார்த்தையானது உண்மையை எப்பொழுதும் காண்பிக்க கூடியதாய் இருக்கிறது.

இதற்கு கீழ்ப்படிவீர்களா?

# 7



# நாவை பழக்குதல்

**யாக்கோபு 1:26-27,**

[26]உங்களில் ஒருவன் தன்
நாவை அடக்காமல், தன்
இருதயத்தை வஞ்சித்து, தன்னை
தேவபக்தியுள்ளவனென்று
எண்ணினால் அவனுடைய
தேவபக்தி வீணாயிருக்கும். [27]திக்கற்ற
பிள்ளைகளும் விதவைகளும் படுகிற
உபத்திரவத்திலே அவர்களை
விசாரிக்கிறதும், உலகத்தால்
கறைபடாதபடிக்குத் தன்னைக்



காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்குமுன்பாக மாசில்லாத
சுத்தமான பக்தியாயிருக்கிறது.

**யாக்கோபு 3:1 - 12,**

[1]என் சகோதரரே, அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து,
உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக. [2]நாம் எல்லாரும்
அநேக விஷயங்களில் தவறுகிறோம்; ஒருவன் சொல்தவறாதவனானால்
அவன் பூரணபுருஷனும், தன் சரீரமுழுவதையும் கடிவாளத்தினாலே
அடக்கிக்கொள்ளக்கூடியவனுமாயிருக்கிறான். [3]பாருங்கள், குதிரைகள்
நமக்குக் கீழ்ப்படியும்படிக்கு அவைகளின் வாய்களில் கடிவாளம்போட்டு,
அவைகளுடைய முழுச்சரீரத்தையும் திருப்பி நடத்துகிறோம். [4]கப்பல்களையும்
பாருங்கள், அவைகள் மகா பெரியவைகளாயிருந்தாலும், கடுங்காற்றுகளால்
அடிபட்டாலும், அவைகளை நடத்துகிறவன் போகும்படி யோசிக்கும் இடம்
எதுவோ அவ்விடத்திற்கு நேராக மிகவும் சிறிதான சுக்கானாலே திருப்பப்படும்.

[5]அப்படியே, நாவானதும் சிறிய அவயவமாயிருந்தும் பெருமையானவைகளைப்
பேசும். பாருங்கள், சிறிய நெருப்பு எவ்வளவு பெரிய காட்டைக்
கொளுத்திவிடுகிறது! [6]நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்;
நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி,
ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால்
கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது! [7]சகலவிதமான மிருகங்கள்,
பறவைகள், ஊரும்பிராணிகள், நீர்வாழும் ஜெந்துக்கள் ஆகிய இவைகளின்
சுபாவம் மனுஷசுபாவத்தால் அடக்கப்படும், அடக்கப்பட்டதுமுண்டு. [8]நாவை
அடக்க ஒரு மனுஷனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும்
சாவுக்கேதுவான விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது. [9]அதினாலே நாம் பிதாவாகிய
தேவனைத் துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட
மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம். [10]துதித்தலும் சபித்தலும்
ஒரேவாயிலிருந்து புறப்படுகிறது. என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது.
[11]ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா?
[12]என் சகோதரரே, அத்திமரம் ஒலிவப்பழங்களையும், திராட்சச்செடி
அத்திப்பழங்களையும் கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீரூற்றுத்
தித்திப்பான ஜலத்தைக் கொடுக்கமாட்டாது.

முதலாவதாக, நீங்கள் உங்கள் நாவை அடக்கவில்லை என்றால் உங்கள் மதம் பயனற்றது. உங்களுடைய மதம் பயனற்றதுமில்லாமல் உங்களை

நீங்களே வஞ்சிக்கிறவர்களாயிருப்பீர்கள். கடைசி பாடத்தை நினைவில் கொள்ளுங்கள், முடிவில் நாம் நம்மை ஏமாற்றிகொள்பவர்களாக இருப்போம் என்று யாக்கோபு எச்சரித்திருக்கிறார், இங்கே இரண்டாவது முறையாக அவர் நம்மை ஏமாற்றுதலை குறித்து கவனமாயிருக்க எச்சரிக்கிறார்.

முரண்பாடான கருத்தை முன் வைக்கிறார், என்னவென்றால் திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதிலுமே உங்களுடைய பக்தியை காட்ட வேண்டும் என்று சொல்லுகிறார்.

நீங்கள் எவ்வாறு உங்கள் நாவை காத்துகொள்கிறீர்களோ அதுவே நீங்கள் எந்த மாதிரியான கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ்கிறீர்கள் என்று காட்டும்!

**யாக்கோபு** 3:2ல் சிதறியிருக்கிற சகோதரர்களுக்கு இவ்வாறாக எழுதுகிறார். நாம் எல்லோரும் தவறுகிறோம் அல்லது இடறிவிழுகிறோம்.!

கொஞ்ச காரியங்களில் அல்ல ஆனால் அநேக காரியங்களில்!!

நான், நம்முடைய சபையின் தலைவனாயிருந்தும் சில நேரங்களில், சில இடங்களில் நான் பேச கூடாத சில காரியங்களை பேசினதை குறித்து அநேகந்தரம் வருத்தப்பட்டிருக்கிறேன். இன்னும் கற்றுகொண்டிருக்கிறேன்!!





1. குதிரைகளின் வாய் கடிவாளத்தினால் கட்டப்பட்டிருக்கிறது.



2. கப்பல்கள் சுக்கான் என்னும் திசை திருப்பக்கட்டையினால் கட்டுப்படுத்தப்படுகிறது.



3. சிறு நெருப்பு தழலினால் ஒரு காடே பற்றி எரிந்து விடும்.



என்னுடைய அனுபவத்திலே, நாவடக்கம் இல்லாமல்

நான் பேசின சில காரியங்கள் எனக்கும் மற்றவர்களுக்கும் வலியை ஏற்படுத்தியிருக்கிறது. நான் வளர்ந்துகொண்டேதான் இருக்கிறேன் ஆனால் ஒரு காரியம், என் பயணம் தேவனோடு முன்னேறி கொண்டிருக்கிறது என்று நான் சொல்ல முடியும்.

ஒவ்வொரு முறையும் இந்த வேதபாடத்தை வாசிக்கும்போதெல்லாம் தெய்வ பயத்தை உணரும்படியாய் எனக்குள் ஒருவித நடுக்கம் ஏற்படும். ஒரு சாதாரண கிறிஸ்தவனின் ஒழுக்கத்தைவிட என்னுடையது சற்று அதிகம். ஏனென்றால், நான் வேதத்தை போதிக்கிறவன். ஒவ்வொரு நாளையும் கடக்கும் போது அற்புதமான மற்றும் உன்னதமான பொறுப்பை உடையவனாக பரிசுத்த வேதத்தை போதிக்கிறவனாக என்னை நான் பார்க்கின்றேன்.

ஒரு நபரிடம் சொல்ல கூடாத ஒரு காரியம் அல்லது விஷயத்தை சொன்னதின் மூலம் சில விஷயங்களை உங்க வாழ்க்கையில் நீங்கள் கற்றிருப்பீர்கள்!

யாக்கோபு, நம்முடைய நாவை அடக்குவதற்கு இங்கே மூன்று உதாரணங்களை கூறுகிறார்.

ஆகவே, நம்முடைய நாவை அடக்க கையாளும் முறையில் நாம் எவ்வாறு கவனமாக இருக்க வேண்டும்.

"மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத்தீர்ப்புநாளிலே கணக்கொப்புவிக்கவேண்டும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்." **(மத்தேயு 12:36).**

**யாக்கோபு 3:6 - 8,** [6]நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்;
நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி,
ஆயுள் சக்கரத்தைக் கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால்
கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது! [7]சகலவிதமான மிருகங்கள், பறவைகள்,
ஊரும்பிராணிகள், நீர்வாழும் ஜெந்துக்கள் ஆகிய இவைகளின் சுபாவம்
மனுஷசுபாவத்தால் அடக்கப்படும், அடக்கப்பட்டதுமுண்டு. [8]நாவை அடக்க ஒரு
மனுஷனாலும் கூடாது; அது அடங்காத பொல்லாங்குள்ளதும் சாவுக்கேதுவான
விஷம் நிறைந்ததுமாயிருக்கிறது.

உங்கள் மொத்த சரீரத்தையும் நாவானது தீட்டுப்படுத்திவிடும், பாருங்கள் அது



எவ்வளவு முக்கியமானது என்று?

**மத்தேயு15:11ல்,** இயேசு கற்பித்திருக்கிறார், வாய்க்குள்ளே போகிறது மனுஷனைத் தீட்டுப்படுத்தாது; **<u>வாயிலிருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார்.</u>**

**நம்முடைய நாவு உண்மையிலே நாம் யார் என்று காட்டிக்கொடுத்துவிடும்.**
**உங்கள் நாவு நீங்கள் யார் என்று வெளிப்படுத்துகிறது?**

- **நீடிய பொறுமையுள்ளவர்கள்**
- **அன்பானவர்கள்**
- **சகலத்தையும் தாங்கக்கூடியவர்கள்**
- **சகலத்தையும் நம்பக்கூடியவர்கள்**
- **சகலத்தையும் சகிப்பவர்கள்**
- **உண்மையில் களிகூர்பவர்கள்**

உங்கள் நாவு அதை வெளிப்படுத்துகிறதா?

- மரியாதையில்லா தன்மை அற்றவர்கள்
- இருமாப்பாயிராதவர்கள்
- பொறாமை குணம் அற்றவர்கள்
- தூண்டல் குணம் இல்லாதவர்கள்
- தீய எண்ணங்கள் உடையவர்கள் அல்ல

உடல் நலக்குறைவுள்ளவர்கள் மருத்துவரிடம் போகும் போது முதலில் உங்க நாவை காண்பிக்க சொல்லுவார்கள், அதேபோல நீங்கள் ஒரு கிறிஸ்தவனாக இருந்தால் உங்கள் நாவிலே காண்பியுங்கள்!!



மனிதன் ஒவ்வொரு வகையான உயிரினங்களையும்

பழக்கிவைத்திருக்கிறான்: பறவைகள், விலங்குகள், பாம்புகள் மற்றும் கடல்வாழ் உயிரினங்கள்.
மேலும் யாக்கோபு சொல்லுகிறார், உங்கள் நாவானது இரண்டு நோக்கங்களுக்காக பயன்படுத்த முடியாது. வாசிக்கிறவர்கள் புரிந்து கொள்ளும் விதமாக இங்கே இரண்டுவிதமான உதாரணங்களை தருகிறார்.

யாக்கோபு 3:9-12, [9]அதினாலே நாம் பிதாவாகிய தேவனைத் துதிக்கிறோம்; தேவனுடைய சாயலின்படி உண்டாக்கப்பட்ட மனுஷரை அதினாலேயே சபிக்கிறோம். [10]துதித்தலும் சபித்தலும் ஒரேவாயிலிருந்து புறப்படுகிறது.

என் சகோதரரே, இப்படியிருக்கலாகாது. [11]ஒரே ஊற்றுக்கண்ணிலிருந்து தித்திப்பும் கசப்புமான தண்ணீர் சுரக்குமா? [12]என் சகோதரரே, அத்திமரம் ஒலிவப்பழங்களையும், திராட்சச்செடி அத்திப்பழங்களையும் கொடுக்குமா? அப்படியே உவர்ப்பான நீரூற்றுத் தித்திப்பான ஜலத்தைக் கொடுக்கமாட்டாது. ஒரே நாவினால் எவ்வாறு சபிக்கவும் ஆசீர்வதிக்கவும் முடியும்?

அசீர்வதிப்பதற்க்கும் சபிப்பதற்க்கும் நீங்கள் தீர்க்கதரிசியாயிருக்க வேண்டாம், ஒவ்வொரு வார்த்தையும் விலையுயர்ந்தது.

**பக்கத்தில் யாரும் இல்லாத போது,**

- உங்கள் கணவன் அல்லது மனைவியிடம் எப்படி பேசுவீர்கள்?
- உங்கள் குழந்தைகளிடம் எப்படி பேசுவீர்கள்?
- மற்றவர்களை பற்றி எப்படி பேசுவீர்கள்?

### உங்கள் வார்த்தைகள் மற்றவர்களுடைய விதியை மாற்றிவிடும்.

அவர்களுக்கு உங்களை தெரிந்தாலும் தெரியாவிட்டாலும், ஏன்?
எல்லோரும் தேவனுடைய சாயலில் படைக்கப் பட்டிருக்கிறோம். ஆகவே, அவர்கள் தேவனை அறிந்தாலும் அறியாவிட்டாலும் நாம் நம்மை நேசிப்பவர்களிடம் எப்படி பேசுவோமோ அப்படியே அவர்களிடமும் பேச வேண்டும்.

**உதாரணம் ஒன்று:**
ஒரு நீரூற்று ஒரே நேரத்தில் உப்பு தண்ணீரையும் மதுரமான தண்ணீரையும்



தர முடியாது. ஒன்று மதுரம் அல்லது உப்பு தண்ணீரை தர வேண்டும்.

**உதாரணம் இரண்டு:**
அத்தி மரம் ஒலிவ பழங்களை கொடுக்கமுடியாது. அதுபோல, திராட்சை செடி அத்திபழங்களை கொடுக்க முடியாது. மரமானது தன்னுடைய வகையான கனிகளை மாத்திரமே கொடுக்க முடியும்.

**லூக்கா 6:45,** நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான்; பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக்காட்டுகிறான் இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும்.

### நாம் எப்படி இதை கையாள வேண்டும்?

**சங்கீதம் 39:1,** "என் நாவினால் பாவஞ்செய்யாதபடிக்கு நான் என் வழிகளைக் காத்து, துன்மார்க்கன் எனக்கு முன்பாக இருக்குமட்டும் என் வாயைக் கடிவாளத்தால் அடக்கிவைப்பேன் என்றேன்."

நாம் ஜெபிப்போம், சங்கீதக்காரன் ஜெபித்தது போல நாம் ஜெபிப்போம்.

**சங்கீதம் 141:3,**

**கர்த்தாவே, என் வாய்க்குக் காவல் வையும்;**
**என் உதடுகளின் வாசலைக் காத்துக்கொள்ளும்.**

8



யாக்கோபு 1:27-2:13

# வேற்றுமை - பாரபட்சம் - பாகுபாடு



27 திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்குமுன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது.

1என் சகோதரரே, மகிமையுள்ள நம்முடைய கர்த்தராகிய
இயேசுகிறிஸ்துவின்மேலுள்ள விசுவாசத்தைப் பட்சபாதத்தோடே
பற்றிகொள்ளாதிருப்பீர்களாக பற்றிக்கொள்ளாதிருப்பீர்களாக.
2ஏனெனில், பொன்மோதிரமும் மினுக்குள்ள வஸ்திரம் தரித்திருக்கிற
ஒருமனுஷனும், கந்தையான வஸ்திரம் தரித்திருக்கிற ஒரு
தரித்திரனும் உங்கள் ஆலயத்தில் வரும்போது, 3மினுக்குள்ள
வஸ்திரந்தரித்தவனைக் கண்ணோக்கி: நீர் இந்த நல்ல இடத்தில்
உட்காரும் என்றும்; தரித்திரனைப் பார்த்து: நீ அங்கே நில்லு,
அல்லது இங்கே என் பாதபடியண்டையிலே உட்காரு என்றும்
நீங்கள் சொன்னால், 4உங்களுக்குள்ளே பேதகம்பண்ணி, தாகத
சிந்தனைகளோடே நிதானிக்கிறவர்களாயிருப்பீர்களல்லவா? 5என்
பிரியமான சகோதரரே, கேளுங்கள்; தேவன் இவ்வுலகத்தின்
தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில்
அன்புகூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம்பண்ணின ராஜ்யத்தைச்
சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்துகொள்ளவில்லையா? 6நீங்களோ
தரித்திரரைக் கனவீனம்பண்ணுகிறீர்கள். ஐசுவரியவான்களல்லவோ
உங்களை ஒடுக்குகிறார்கள்? அவர்களல்லவோ உங்களை
நியாயாசனங்களுக்கு முன்பாக இழுக்கிறார்கள்? 7உங்களுக்குத்
தரிக்கப்பட்ட நல்ல நாமத்தை அவர்களால்லவோ தூஷிக்கிறார்கள்?
8உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப் பிறனிடத்திலும்
அன்புகூருவாயாக என்று வேதவாக்கியம் சொல்லுகிற ராஜரீக
பிரமானத்தை நீங்கள் நிறைவேற்றினால் நன்மைசெய்வீர்கள்.
9பட்சபாதமுள்ளவர்களாயிருப்பீர்களானால், பாவஞ்செய்து,
மீறினவர்களென்று நியாயப்பிரமாணத்தால் தீர்க்கப்படுவீர்கள்.
10எப்படியெனில், ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும்
கைக்கொண்டிருந்ததும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும்
குற்றவாளியாயிருப்பான். 11ஏனென்றால், விபசாரஞ்செய்யாதிருப்பாயாக
என்று சொன்னவர் கொலைசெய்யாதிருப்பாயாக என்றும்

சொன்னார்; ஆதலால், நீ
விபசாரஞ்செய்யாமலிருந்தும்
கொலைசெய்தாயானால்
நியாயப்பிரமாணத்தை
மீறினவனாவாய்.
12சுயாதீனப்பிரமாணத்தினால்
நியாயத்தீர்ப்படையப்போகிறவர்களாய்
அதற்கேற்றபடி பேசி, அதற்கேற்றபடி
செய்யுங்கள். 13ஏனென்றால் இரக்கஞ்
செய்யாதவனுக்கு இரக்கமில்லாத
நியாயத்தீர்ப்புக் கிடைக்கும்;
நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம்
மேன்மைபாராட்டும்.

இந்த பாடத்தை முழுமையாக பார்க்க முடியாவிட்டாலும் தோற்றத்தை அடிப்படையாக கொண்டு வேற்றுமை அல்லது பாரபட்சம் அல்லது பாகுபாடு போன்ற சில முக்கியமான காரியங்கள் பற்றி பார்க்கலாம்.

முன்னாக நாம் பார்த்த பாடத்தோடு அதாவது ஏழைகளும், திக்கற்ற பிள்ளைகளும், விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதுதன் உண்மையான பக்தி என்பதை கடைசி வசனத்தை நாம் தொடர்புப்படுத்தி பார்க்கலாம். இந்த உலகம் பார்க்கிறபடியல்ல, தேவனுக்கும் பிதாவுக்கும் முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது.


**வேற்றுமை:**

இந்த வேதப்பகுதி வேற்றுமையையும் நியாயத்தீர்ப்பையும் ஒருங்கிணைக்கிறது. ஆகவே, நாம் இதை பிரித்து பார்க்க முடியாது. தேவனுடைய ஒரு குணாதியசயம் இன்றைய சபைகளிலே முற்றிலுமாக புறக்கணிக்கப்படுகிறது, என்னவென்றால் அவரிடத்தில் வேற்றுமை இல்லை. நாம் தேவனைப் பற்றி நினைக்கும்போது நாம் அவருடைய நீதி, ஞானம், சர்வ வல்லமையுள்ள தேவன், எங்கும் வியாபித்திருக்கும் தேவன், எல்லாவற்றையும் அறிந்த தேவன், மற்றும் என்றும் மாறாதவர். அவருடைய அன்பு, இரக்கம், கிருபை, உண்மையுள்ளவர், நித்தியமானவர், மற்றும் சகலத்தையும் ஆள்பவர் என்று அவரைப் பற்றி பேசுகிறோம். தேவன் யாரிடமும் வேற்றுமை பார்ப்பதில்லை அவர் நாம் எல்லோரையும் ஒரே மாதிரியாக நடத்துகிறார். ஆனால், நாமோ மற்றவர்களின் தோற்றம், அவர்கள் வைத்திருக்கும் வாகனங்கள், அந்தஸ்த்து மற்றும் அவர்களின் வெளித்தோற்றத்தை கொண்டும் அவர்களை நடத்துகிறோம். இந்த காரியங்கள் எல்லாம் தேவனுக்கு முன்பாக ஒன்றுமே இல்லை.

யாக்கோபு சிதறியிருக்கிற யூத சகோதரர்களுக்கு எழுதும்போது அவர்கள் பழைய ஏற்பாட்டை நன்க அறிந்திருந்தார்கள். இப்பொழுது நம்முடைய கைகளில் நாம்



வைத்திருக்கும் புதிய ஏற்பாடு அப்போது அவர்களிடத்தில் இல்லை. ஆகவே,. அவர்கள் என்னத்தை அறிந்திருக்கிறார்கள், அதை யாக்கோபு எவ்வாறு நினைவுப்படுத்துகிறார் என்று நாம் புரிந்துகொள்வோம்.



**யாத்திராகமம் 23:3,** வியாச்சியத்திலே தரித்திரனுடைய முகத்தைப் பாராயாக.

**யாத்திராகமம் 23:6,** ‘‘உன்னிடத்திலிருக்கிற எளியவனுடைய வியாச்சியத்தில் அவனுடைய நியாயத்தைப் புரட்டாயாக.

**லேவியராகமம் 19:15,** ‘நியாயவிசாரணையில் அநியாயம் செய்யாதிருங்கள்; சிறியவனுக்கு முகதாட்சிணியம் செய்யாமலும், பெரியவனுடைய முகத்துக்கு அஞ்சாமலும், நீதியாகப் பிறனுக்கு நியாயந்தீர்ப்பாயாக.

**உபாகமம் 1:17,** நியாயத்திலே முகதாட்சிணியம் பாராமல பெரியவனுக்குச் செவிகொடுப்பதுபோலச் சிறியவனுக்கும் செவிகொடுக்கப்படவீர்கள்; மனிதன் முகத்திற்குப் பயப்படாதீர்களாக; நியாயத்தீர்ப்பு தேவனுடையது;

உங்களுக்குக் கடினமாயிருக்கும் காரியத்தை என்னிடத்தில் கொண்டுவாருங்கள்; நான் அதைக் கேட்பேன் எனறு சொல்லி,'

**உபாகமம் 16:19** நியாயத்தைப் புரட்டாதிருப்பாயாக; முகதாட்சிணியம் பண்ணாமலும், பரிதானம் வாங்காமலும் இருப்பாயாக; பரிதானம் ஞானிகளின் கண்களைக் குருடாக்கி, நீதிமான்களின் நியாயங்களைத் தாறுமாறாக்கும்.

**உபாகமம் 10:17**, உங்கள் தேவனாகிய கர்த்தர் தேவாதி தேவனும், கர்த்தாதி கர்த்தரும், மகத்துவமும் வல்லமையும் பயங்கரமுமான தேவனுமாயிருக்கிறார்; அவர் பட்சபாதம் பண்ணுகிறவரும் அல்ல, பரிதானம் வாங்குகிறவரும் அல்ல.
என்ன ஒரு அருமையான வசனம், அது அவருடைய பண்புகளையும் மற்றும் எவ்வளவு பெரிய அற்புதமான வல்லமையான தேவனை நாம் பெற்றிருக்கிறோம், அவரிடத்தில் வேற்றுமை இல்லை.

புதிய ஏற்பாட்டில் நிறைய இடங்களில் நமக்குள் வேற்றுமை இருக்ககூடாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பேதுருவும் பவுலும் தங்களுடைய நிருபங்களை எழுதும் போது இரட்சிப்புக்குரிய சர்ச்சைகளிலும் மற்றும் ஆவிக்குரிய சர்ச்சைகளிலும் அதிக கவனம் வைத்தார்கள். பவுல் ஊழியர்களின் நிலையை குறித்து எபேசியர் 6 மற்றும் கொலோசெயர் 3ல் குறிப்பிட்டுள்ளார்.

பொருளாதாரம் மற்றும் சமூக நிலைமை குறித்து ஒரு வெளித்தோற்றத்தில் அதைக் கவனம் செலுத்தி தன்னுடைய கடிதத்தி எழுதியிருக்கிறார். எதைப்பற்றி நாம் சபைகளில் பேசுகிறதில்லையோ அதைப்பற்றி யாக்கோபு பேசுகிறார். நான உங்களிடம் ஒரு கேள்வி கேட்கிறேன். கனிள் வேற்றுமை காண்பவரா?

இந்த பூமியில் எல்லோரும் வேற்றுமை காண்பவர்கள்தான்.

ஒருபிலபலமான மனிதனை எதிர்கொள்ளும்போது எவ்வாறு நீங்கள் செயல்படுவீர்கள்?

நாம் எல்லோரும், தன்னைத்தானே சுயமாய் பாடம் எடுக்கும் தலைமுறையாளர்கள்!!

## சபையில் எவ்வாறு வேற்றுமை காண்கிறீர்கள்?

எவ்வாறு ஒரு பணக்கார தொழிலதிபரை சபையில் வரவேற்கிறோம்? பல பணக்கார பெண்கள் இயேசு கிறிஸ்துவின் ஊழியத்திற்கு தேவையான உதவிகளை வழங்கியிருக்கிறார்கள். லூக்கா (18:1-3) ஆகவே, பிரச்சனை



செழிப்பிலோ அல்லது செழிப்பான மனிதரோ அல்ல அதை எவ்வாறு வரவேற்கிறோம் மற்றும் அவர்ளை எவ்வாறு நடத்துகிறோம் என்பதில் அடங்கியிருக்கிறது.

**எது உங்களை ஈர்க்கிறது?**

- அவர்கள் ஓட்டும் வாகனம்
- அவர்களது சொத்து அல்லது அவர்கள் வாழும் வீடு
- அவர்கள் அணியும் உடை
- அவர்கள் கல்வி
- அவர்களது சமுதாய நிலைபாடு
- அவர்களது ஆபரணங்கள்

கற்பனை செய்து கொள்ளுங்கள், வாழ்க்கையில் ஏதோ ஒரு நிலையில் பிரபலமான ஒரு மனிதர் சபையில் உங்கள் பக்கத்தில் வந்து உட்கார்ந்தால் நீங்கள் எவ்வாறு செயல்படுவீர்கள்?

கற்பனை செய்து கொள்ளுங்கள், ஒரு மனிதர் அவலட்சணமாக உடையை அணிந்து கொண்டு சபையில் உங்கள் பக்கத்தில் வந்து உட்கார்ந்தால் நீங்கள் எவ்வாறு செயல்படுவீர்கள்?

தனிப்பட்டமுறையில் இந்த கேள்வியை கேட்கும்போது சிலருக்கு உண்மை வெளியில் வந்துவிடுமோ என்கிற சங்கடமான நிலை ஏற்படுகிறது!!

யாக்கோபு இதை முழுவதுமாக வைத்து ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை மகிமையுள்ள ஆண்டவர் என்று கூறிகிறார். அப்படியானால், தேவன் எவ்வாறு அவர்களை நடத்துவார்?

தேவன், எந்த ஒரு மனிதனுடைய தகுதி அல்லது செல்வத்தின் அடிப்படையில் ஈர்க்கப்படுகிறவர் அல்ல. தேவனுக்கு முன்பாக இது ஒன்றுமே இல்லை. இந்த உலகத்தில் இருக்கும் உங்களையும் என்னையும் உள்ளார்ந்த மனிதர்களாய் நம்முடைய குணங்கள் எவ்வாறு இருக்கிறது என்று பார்த்து நியந்தீர்க்கிறார்.

**ஏசாயா 2:22ல்** சொல்லியிருகிறது போல, நாசியிலே சுவாசமுள்ள மனுஷனை நம்புவதைவிட்டுவிடுங்கள்; எண்ணப்படுவதற்கு அவன் எம்மாத்திரம்.

ஆகவே, யாக்கோபு 2 காரியங்களை சுட்டிக்காட்டுகிறார். ஒன்று, ஒரு மனிதன் செல்வந்தனாய இருப்பதை வைத்து அவனை உயர்வாக நடத்துவதும், இரண்டாவது மற்றொருவன் ஏழையாய் இருப்பதனால் அவன் தரித்திரத்தில் இருக்கிறானென்று அவனை இழிவாக நடத்தக்கூடாது.

தேவன் நம் எல்லோரையும் ஒரே மாதிரியான நடத்துவது போல நாமும் அப்படி செய்வதற்கு கற்றுகொள்ளவேண்டும்.

### எவ்வாறு பாரபட்சம் காட்டுவதை அறியமுடியும்?

| சாதகம் | எதிர்ப்பு |
|---|---|
| நல்ல கருத்துகள் உயர்த்தி காண்பித்தல் | நல்ல கருத்துகள் புறக்கணித்தல் |
| கெட்ட கருத்துகள் புறக்கணித்தல் | நல்ல கருத்துகள் உயர்த்தி காண்பித்தல் |
| அரிதான குற்றங்கள் | அரிதான வரவுகள்/நன்மைகள் |
| விருப்பு | வெறுப்பு |
| விருப்பத்தின் பங்கு | வெறுப்பின் பங்க |
| வலிமையான உணர்வுடையது | பலவீனமான உணர்வுடையது |
| வெகுமதி அளித்தல் | தண்டனை அளித்தல் |

### எதற்காக பாரபட்சம் பார்க்க வேண்டும்?

1. ஒருவேளை நாம் பலனை அல்லது தயவை திரும்ப எதிர்பார்க்கிறோமா?
2. ஏனென்றால் அவர்கள் உயர் நிலைளில் தொடர்புடையவர்கள் என்பதால்
3. மனிதர்களின் விருப்பு மற்றும் வெறுப்பு



வேற்றுமையின் பாதிப்பு மிகவும் பாழாக்கும் தன்மையுடையது. முக்கியமாக, ஒரு தலைவர் ஒரு சிறிய குழுவிற்கு மாத்திரம் சாதகமாக இருந்தால் அந்த மொத்த நிறுவனமே பெரும் பாதிப்புக்குள்ளாகிவிடும். அந்த சிறிய குழு இனம், மொழி, நிறம், பால்வேறுபாடு போன்றவைகளால பாரபட்சம் பார்க்கப்படுமேயானால், மற்ற அநேக மக்கள்தங்களுடைய சந்தோஷத்தை இழந்துவிடுவார்களா.

சபைகளில் இது ஒரு பெரிய தாக்கத்தை ஏற்படுத்துகிறது. முக்கியமாக, சபை போதகர் தனக்கு வேண்டப்பட்ட ஒருவரி சில முக்கியமான காரியங்களை செய்ய சொல்வது. குழுக்குளின் தலைவர்கள் பாரபட்சம் பார்க்க உதவும்



தூண்டல்களை தவிர்க்க வேண்டும். அதுதான் தலைமை துவத்துக்கு சிறந்த குறுக்குவழி என்று சொல்லலாம்.

பணக்காரர்களுக்கு சாதகமாக நடந்து கொள்வது ஆபத்து நிறைந்ததும் படுகுழிக்குள் விழுவது போலாகும் என்று யாக்கோபு சொல்லுகிறார்.

**வசனம் 6,** ஐசுவரியவான்களல்லவோ உங்களை ஒடுக்குகிறார்கள்?

**வசனம் 6,** அவர்களல்லவோ உங்களை நியாயாசனங்களுக்கு முன்பாக இழுக்கிறார்கள்?

**வசனம் 7,** உங்களுக்குத் தரிக்கப்பட்ட நல்ல நாமத்தை அவர்களல்லவோ தூஷிக்கிறார்கள்?

ஆகையால், வேறுவிதமாக சொன்னால் சபைகளில் தலைவர்கள் ஏழைகள் இருவரும் பணக்காரர்நிமித்தம் சர்ச்சைகுள்ளாக்கப்படுகிறார்கள்.

அநேக செல்வந்தர்களால் அநேக சபைகள் பாழாய் போனதை நாமே கண்டிருக்கிறோம்.

**வசனம் 5,** யாக்கோபு சொல்லுகிறார், தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும், தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம் பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும்



தெரிந்துகொள்ளவில்லையா?

கடைசி பாடத்தில், நம்முடைய நாவுகளை உபயோகிப்பதில் நாம் மிகவும் கவனமாக இருக்கவேண்டும். ஏனென்றால், அதே நாவைக் கொண்டு தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டவர்களை சபிக்கவோ ஆசீர்வதிக்கவோ முடியாது என்று பார்த்தோம்.

அதே போல இந்த பாடத்தில் மற்றவர்களை வெளித்தொற்றத்தை கொண்டு நியாயந்தீர்க்க கூடாது என்று கட்டளையிடப்பட்டிருக்கிறோம்.

சாமுவேல், இஸ்ரவேலுக்கு அடுத்து ராஜாவை அபிஷேகம் பண்ணுவதற்கு புறப்பட்டபோது தேவன் அவரிடம் வெளித்தோற்றத்தை பார்க்கவேண்டாம் என்று சொல்லி ஆடு மேய்ப்பவனான தாவீதை தேர்ந்தெடுத்தார். தாவீதை அபிஷேகம் பண்ணும்போது அவனுடைய தகப்பன் கூட அங்கே இருப்பதற்கு அழைக்கப்படவில்லை.

**1 சாமுவேல் 16:7,** கர்த்தர் சாமுவேலை நோக்கி: நீ இவனுடைய முகத்தையும், இவனுடைய சரீரவளர்ச்சியையும் பார்க்கவேண்டாம்; நான் இவனைப் புறக்கணித்தேன்; மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார்.''

- சபைகளாக இந்த பகுதியை நாம் எவ்வாறு பார்க்கிறோம்?
- இயேசு நமது சபைக்குள் வரும்போது தன்னுடைய வீட்டில் இருப்பது போல உணர்வாரா?

கட்டளைகளில் ஒரு கட்டளையை, இயேசு கிறிஸ்து நம்மை செய்ய சொன்னதை நம்மில் அநேக கிறிஸ்தவர்கள் கொஞ்சமும் கூட கண்டுகொள்கிறதில்லை.

**யோவான் 7:24** தோற்றத்தின்படி தீர்ப்பு செய்யாமல், நீதியின்படி தீர்ப்பு செய்யுங்கள் என்றார்.

**மத்தேயு 7:1-5,** 1நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு
மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். 2ஏனெனில், நீங்கள்
மற்றவர்களைக் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்;
நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும்



அளக்கப்படும். 3நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல், உன்
சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன? 4இதோ, உன்
கண்ணில் உத்திரம் இருக்கையில் உன் சகோதரனை நோக்கி: நான் உன்
கண்ணிலிருக்கிகற துரம்பை எடுத்துப்போடட்டும் என்று நீ சொல்வதெப்படி?
5மாயக்காரனே! முன்பு என் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு; பின்பு
உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகைபார்ப்பாய்.

## இந்த வேத பகுதியின் சுருக்கம்:

**வசனம் 1,** வேற்றுமை, மகிமையுள்ள நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின்மேலுள்ள விசுவாசத்தை மறுத்து பேசுகிறது.

**வசனம் 2-4,** வேற்றுமையானது, தகாத சிந்தனைகளை நிதானிக்கிறவர்களாய் காண்பிக்கிறது.

**வசனம் 5,** தேவன் தரித்திரரை தெரிந்து கொண்டார் என்று வேற்றுமை சுட்டிகாட்டுகிறது.

**வசனம் 6,** தேவனுடைய சாயலில் படைக்கப்பட்டவர்களை வேற்றுமை கனவீனம்பண்ணுகிறது.

**வசனம் 6,** வேற்றுமை உங்களை கீழே விழப்பண்ணும்.

**வசனம் 9,** வேற்றுமை உங்களை பாவியாக்கும்.



# இரக்கம் & நியாயத்தீர்ப்பு



**யாக்கோபு 2:8-13**

## 9

8உன்னிடத்தில் நீ அன்புகூருகிறதுபோலப்
பிறனிடத்திலும் அன்புகூருவாயாக
என்று தேவவாக்கியம் சொல்லுகிற
ராஜரீக பிரமாணத்தை நீங்கள்
நிறைவேற்றினால் நன்மைசெய்வீர்கள்.
9பட்சபாதமுள்ளவர்களாயிருப்பீர்களானால்,
பாவஞ்செய்து, மீறினவர்களென்று
நியாயப்பிரமாணத்தால் தீர்க்கப்படுவீர்கள்.
10எப்படியெனில், ஒருவன் நியாயப்பிரமாணம்
முழுவதையும் கைக்கொண்டிருந்தும்,
ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும்
குற்றவாளியாயிருப்பான். 11ஏனென்றால்,
விபசாரஞ்செய்யாதிருப்பாயாக
என்று சொன்னவர் கொலை
செய்யாதிருப்பாயாக என்று சொன்னார்;
ஆதலால், நீ விபசாரஞ்செய்யாமலிருந்தும்
கொலைசெய்தாயானால் நியாயப்பபிரமாணத்தை
மீறினவனாவாய். 12சுயாதீனப்பிரமாணத்தினால்
நியாயத்தீர்ப்படையப்போகிறவர்களாய் அதற்கேற்றபடி
பேசி, அதற்கேற்றபடி செய்யுங்கள். 13ஏனென்றால், இரக்கஞ்
செய்யாதவனுக்கு இரக்கமில்லாத நியாயத்தீர்ப்புக் கிடைக்கும்;
நியாயத்தீர்ப்புக்கு முன்பாக இரக்கம் மேன்மைபாராட்டும்.

**யாக்கோபு 3:1** என் சகோதரரே, அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக.

**யாக்கோபு 4:11-12,** 11சகோதரரே, ஒருவருக்கொருவர் விரோமாய்ப்
பேசாதிருங்கள்; சகோதரனுக்கு விரோதமாய்ப் பேசி, தன் சகோதரனைக் குற்றப்படுத்துகிறவன் நியாயப்பிரமாணத்திற்கு விரோதமாய்ப்பேசி நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்துகிறான்; நியாயப்பிரமாணத்தைக்

குற்றப்படுத்துவாயானால், நீ நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவனாயிராமல், அதற்கு நியாயாதிபதியாயிருப்பாய். [12]நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிடுகிறவர் ஒருவரே, அவரே இரட்சிக்கவும் அழிக்கவும் வல்லவர்; மற்றவனைக் குற்றப்படுத்துகிறதற்கு நீ யார்?

கடைசி பாடத்தில் வேற்றுமையை பற்றி அதிக விளக்கமான பார்த்தோம். எது நம்மை வேற்றுமை பார்க்க தூண்டியது? நம்முடைய கண்களினாலே நியாயந்த்தீர்க்கிரதினாலே அல்ல நம்முடைய வாயிலிருந்து புறப்படுகிற வார்த்தைகளினாலே ஆகும்.

முதலாவதாக, கிருபை மற்றும் இரக்கம் என்றால் என்ன என்பதை பார்ப்போம்.



**இரக்கம்**: நம்முடைய பாவங்களுக்கு தண்டனையை அனுபவிக்க நாம் தகுதியுள்ளவர்களாயிருந்தும் தேவன் நம்மை தண்டிக்கிறதில்லை.

**கிருபை**: ஆசீர்வாதத்தை பெறுவதற்கு நாம் தகுதியற்றவர்களாயிருந்தும் தேவன் நம்மை ஆசீர்வதிக்கிறார்.



இரக்கம் என்பது நியாத்தீர்ப்பிலிருந்து விடுதலை. கிருபை என்பது நம்மை போன்றவர்களுக்கு தேவன் காட்டும் நீடிய இரக்கம் அல்லது அன்பு. இரக்கம் நம்முடைய பின்னிலைமையை கையாளுகிறது. கிருபையானது பரிசுத்தமான வாழ்க்கையை வாழ உதவுகிறது மற்றும் நம்பிக்கையானது வரும் நாட்களில் நாம் சர்வவல்லமையுள்ளவரோடு நித்திய வாழ்வை வாழ்வதற்கு ஏதுவாயிருக்கிறது.

நாம் எல்லோரும் பாவம் செய்திருக்கிறோம்! எந்த ஒரு மாமிசமும் அவர் முன்பாக நிற்பதற்கு நான் தகுதியுடையவன் என்று பெருமைபாராட்ட முடியாது.

**ரோமர் 3:23**, எல்லாரும் பாவஞ்செய்து, தேவமகிமையற்றவர்களாகி,

**1 யோவான் 1:8**, நமக்குப் பாவமில்லையென்போமானால் நம்மை நாமே



வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது.

நாம் எல்லோரும் நித்திய பாதாளத்திற்குள்ளும் எரிகிற அக்கினி கடல்களுக்குள்ளும் தண்டனையை அனுபவிப்பதற்கு பாத்திரவான்களாய் இருக்கிறோம்.

ரோமர் 6:23, பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்.

**வெளிபடுத்தின விசேஷம் 20:12-15**,
[12]மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்.

[13]சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது; மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள்.
[14]அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம்.
[15]ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான்.

அதனால், ஜனங்கள் இந்த தண்டனையிலிருந்து தப்பும்படியாய் தேவனுடைய சமூகத்தில் வேண்டுதல் செய்து அவருடைய இரக்கத்திற்காக கெஞ்சினார்கள் என்பதை தாவீது தன்னுடைய சங்கீதத்திலே அவர்களுடைய விண்ணப்பத்தை அழகாக சுருக்கி எழுதியிருக்கிறார்.



**சங்கீதம் 51: 1-2,** [1]தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நிங்கள் என்னைச் சுத்திகரியும், [2]என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும். தேவன் அவர்களுடைய இருதயத்தின் கதறலுக்கு மறு உத்தரவு கொடுத்ததுமல்லாமல், இயேசு கிறிஸ்துவை சிலுவையிலே நம்முடைய பாவங்களுக்காக அவரை மரணத்திற்கு ஒப்புக்கொடுத்தார்.

**ஏசாயா 53: 5-6,** [5]நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். [6]நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித்திரிந்து, அவனவன் தன்தன் வழியிலே போனோம்; கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்.

**தீத்து 2:14,** அவர் நம்மைச் சகல அக்கிரமங்களினின்று மீட்டுக்கொண்டு, தமக்குரிய சொந்த ஜனங்களாகவும், நற்கிரியைகளைச் செய்ய பக்தி வைராக்கியமுள்ளவர்களாகவும் நம்மைச் சுத்திகரிக்கும்படி, நமக்காகத் தம்மைத்தாமே ஒப்புக்கொடுத்தார்.

**1 யோவான் 1:9,** நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

ஆகவே ஆண்டவருடைய இரக்கதினாலேயன்றி, நாம் ஒவ்வரும் வாழ்ந்துகொண்டிருக்கும் இந்த வாழ்க்கையை வாழ்வதற்கு பாத்திரவானகளல்லவே.

அப்படிப்பட்ட இரக்கத்தை பெற்ற நமக்கு மற்றவர்களிடம் அதேபோல இரக்கம் பாராட்டுதல் நம்முடைய கடமையாயிருக்கிறதல்லவா?

**யோவான் 8, விபசாரத்தில் பிடிப்பட்ட ஸ்திரீ.**

**உபாகமம் 22:22** சொல்லுகிறது இரண்டு பேரும் சாக வேண்டும், ஆனால் இவளை மாத்திரம் கொண்டு வந்தீர்கள், அவன் எங்கே?

இயேசு என்ன சொன்னர் என்று கேட்டீர்களா? இவள் மேல் சுமத்தப்பட்ட குற்றம் உண்மையாயிருந்தது. அவள் விபச்சாரம் என்னும் பாவத்தை செய்தாள். தேவன் மோசே மூலமாய் அவளுக்கு சாவை கட்டளையிட்டிருக்கிறாரே.

ஆனால், தேவனுடைய குமாரனாகிய இயேசு அவளை நோக்கி: ''நானும் உன்னை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறதில்லை'' என்றார்.

எப்படி அவரால் இப்படி ஒரு காரியத்தை அவளிடம் கூற முடியும்? தேவன் தன்னுடைய கட்டனைகளை மீறுகிறவரானால், நமக்கு பெரும் பிரச்சனை உண்டு.

**தேவன் அநீதியுள்ளவரா? முற்றிலுமான இல்லை!**

தேவன், விபச்சாரம் என்னும் பாவத்திற்கு அவருடைய நியாயப்பிரமாணத்தின்படி முழுமையான தண்டனையை கட்டளையாயிருந்தது. ஆனால், அவளோ அவளுக்குரிய தண்டனையை சகிக்கமாட்டாள் அதனால் அவளை விட்டுவிட்டார் மனுஷ குமாரன் அவளுக்கு பதிலாக பலியானார்.



அந்த கூட்டத்தில், இயேசு கிறிஸ்து ஒருவர் மாத்திரமே பூரண நீதியுள்ளவரும் அவளை மரணத்திற்கு நியாயந்தீர்க்கிறதர்க்கும் அல்லது மன்னிக்கிறதர்க்கும் பாத்திரர்.

இதுவே, எல்லா இடங்களிலும் சிதறியிருக்கிற சகோதரகளுக்கு யாக்கோபு எழுதியிருக்கிறார். இரக்கம் நியாயத்தீர்ப்பை வெற்றிகொள்ளும்!!

வில்லியம் ட்டிண்டேல்(ன்) வேதாகமத்திலிருந்து பொழிப்புரையாக மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட வசனத்தை நான் உங்களுக்கு கொடுக்கிறேன்.

**(William Tyndale's Translation)**
**(James 2:12, You will be judged on whether or not you are doing what Christ wants you to/ So watch you do and what you think:**
**James 3:1, Dear brithers, dno't be too eager to tell other their fealts, for as all make many mistakes; and when we teachers, who should know better, dio wrong, our punishment will be greater than it would be for other.)**

**யாக்கோபு** 2:12, சுயாதீனப்பிரமாணத்தினால் நியாயத்தீர்ப்படையப் போகிறவர்களாய் அதற்கேற்றபடி பேசி, அதற்கேற்றபடி செய்யுங்கள்.

**யாக்கோபு** 3:1, சகோதரரே, எல்லாரும் அநேக விஷயங்களில் தவறுகிறோம்; நாம் அநேக தவறுகளை செய்பவர்களாதலால், மற்றவர்களுடைய தவறுகளை சுட்டிக்காண்பிப்பதில் ஆர்வமுள்ளவர்களாயிராமல் அதிக ஆக்கினையை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக.
நாம் யாரையும் நியாயந்தீர்க்க கூடாது என்று இந்த பகுதியிலிருந்து நமக்கு தெளிவாக புரியவேண்டும். ஒருவரை நியாயந்தீர்த்தல் மற்றும் சரிசெய்தலுக்கிடையேயான சமநிலையை கண்டுபிடிக்கவேண்டும்.

நீதியாய் நியாயந்தீர்க்க வேண்டும் என்ற இயேசு கிறிஸ்து நமக்கு கட்டளையிட்டிருக்கிறார்.



**யோவான்** 7:24, தோற்றத்தின்படி தீர்ப்பு செய்யாமல், நீதியின்படி தீர்ப்பு செய்யுங்கள் என்றார்.

நாம் முன்பாக பார்த்த பாடத்தின்படி இந்தக் கட்டளையை அநேக கிறிஸ்தவர்கள் பின்பற்றுவதில்லை. பவுல் ரோமாபுரிக்கு எழுதும்போது, அவர்கள் ஒருவருக்கொருவர் தங்களுடைய பின்னணியை பார்த்து நியாயத்தீர்க்கிறார்கள் என்று குறிப்பிட்டுள்ளார். நாம் அறிந்தபடி யூத மற்றும் புறஜாதி விசுவாசிகள் தங்களுடைய பாரம்பரியங்களை உயர் தரமாக வைத்துக்கொண்டு மற்றவர்களை இழிவுப்படுத்துகிறார்கள்.

**ரோமர்** 2:1-4, [1]ஆகையால், மற்றவர்களைக் குற்றவாளியாகத் தீர்க்கிறவனே,
நீ யாரானாலும் சரி, போக்குச்சொல்ல உனக்கு இடமில்லை; நீ குற்றமாகத்
தீர்க்கிறவைகள் எவைகளோ, அவைகளை நீயே செய்கிறபடியால், நீ
மற்றவர்களைக்குறித்துச்
சொல்லுகிற தீர்ப்பினாலே
உன்னைத்தானே
குற்றவாளியாகத்
தீர்க்கிறாய்.
[2]இப்படிப்பட்டவைகளைச்
செய்கிறவர்களுக்குத்
தேவனுடைய நியாயத்தீர்ப்பு
சத்தியத்தின்படியே
இருக்கிறதென்று
அறிந்திருக்கிறோம்.
[3]இப்படிப்பட்டவைகளைச்
செய்கிறவர்களைக்
குற்றவாளிகளென்று
தீர்த்தும், அவைகளையே
செய்கிறவனே,
நீ தேவனுடைய
நியாயத்தீர்ப்புக்குத்
தப்பிக்கொள்ளலாமென்று
நினைக்கிறாயா? [4]அல்லது
தேவதயவு நீ குணப்படும்படி
உன்னை ஏவுகிறதென்று

அறியாமல், அவருடைய தயவு பொறுமை நீடியசாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டைபண்ணுகிறாயோ?

ஆகவே, அன்றாட வாழ்க்கையில் அவர்களுடைய கிரியைகளின் கனிகளை தெளிவாக நாம் பார்க்க வேண்டியிருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும் போது அதை முழுவதுமாக தன்னுடைய நிருபத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**1 தீமோத்தேயு 5:24-25,** [24]சிலருடைய பாவங்கள் வெளியரங்கமாயிருந்து, நியாயத்தீர்ப்புக்கு முந்திக்கொள்ளும்; சிலருடைய பாவங்கள் அவர்களைப் பின்தொடரும். [25]அப்படியே சிலருடைய நற்கிரியைகளும் வெளியரங்கமாயிருக்கும்; அப்படி இராதவைகளும் மறைந்திருக்கமாட்டாது.
பிறகு, என்னுடைய வாழ்க்கையை நான் எவ்வாறு வாழ்வேன்?

**2 தெசலோனிக்கேயர்** 3:6, மேலும், சகோதரரே, எங்களிடத்தில் ஏற்றுக்கொண்ட முறைமையின்படி நடவாமல், ஒழுங்கற்று நடக்கிற எந்தச் சகோதரரையும் நீங்கள் விட்டு விலகவேண்டுமென்று, நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்திலே, உங்களுக்குக் கட்டளையிடுகிறோம்.

ஒழுங்கற்ற வாழ்க்கையை நடத்தும் மனிதர்களிடமிருந்து நாம் விலக வேண்டும் என்று தேவனுடைய வார்த்தை சொல்லுகிறது.

**2 தெசலோனிக்கேயர் 3:14-15,** [14]மேலும், இந்த நிருபத்தில் சொல்லிய எங்கள் வசனத்துக்கு ஒருவன் கீழ்ப்படியாமற்போனால், அவனைக் குறித்துக்கொண்டு, அவன் வெட்கப்படும்படிக்கு அவனுடனே கலவாதிருங்கள். [15]ஆனாலும் அவனைச் சத்துருவாக எண்ணாமல், சகோதரனாக எண்ணி, அவனுக்குப் புத்திசொல்லுங்கள்.

ஆகையால், அவனோடு நெருக்கமாக பழகாமலும், அவனை சத்துருவாக எண்ணாமலும் இருங்கள். தேவனுடைய வார்த்தை, நம்மை சபிக்கிறவர்களை ஆசீர்வதிக்கவும் நம்மை விரோதிக்கிறவர்களை சிநேகிக்கவும் கட்டளையிடுகிறது. சிலர் தங்களுடைய சில பழக்க வழக்கத்திற்கு அடிமையாவதால், ஆண்டவரோடு ஐக்கியமாவதற்க்கு



முடியாமல் போகிறது. அவர்களால் அதைவிட்டு மீண்டு வர முடியாமல் சிரமப்படும்போது உங்களுடைய அன்பான வார்த்தைகளினாலும் நடத்தைகளினாலும் அவர்களை திரும்பவும் ஆண்டவரிடம் கொண்டு சேர்க்க முடியும்.

**ஆண்டவர் ஒருவரே நியாயந்தீர்க்க வேண்டும்!!**

**யாக்கோபு 4:11-12,** [11]சகோதரரே, ஒருவருக்கொருவர் விரோதமாய்ப் பேசாதிருங்கள்; சகோதரனுக்கு விரோதமாய்ப் பேசி, தன் சகோதரனைக் குற்றப்படுத்துகிறவன் நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்துகிறான்; நியாயப்பிரமாணத்தைக் குற்றப்படுத்துவாயானால், நீ நியாயப்பிரமாணத்தின்படி செய்கிறவனாயிராமல், அதற்கு நியாயாதிபதியாயிருப்பாய். [12]நியாயப்பிரமாணத்தைக் கட்டளையிடுகிறவர் ஒருவரே, அவரே இரட்சிக்கவும் அழிக்கவும் வல்லவர்; மற்றவனைக் குற்றபப்படுத்துகிறதற்கு நீ யார்?

**தேவன் ஒருவரே நமக்கு எல்லாவற்றையும் அளித்தவர்.**

**ரோமர் 14:1-4,** [1]விசுவாசத்தில் பலவீனமுள்ளவனைச் சேர்த்துக்கொள்ளுங்கள்; ஆனாலும் அவனுடைய மன ஐயங்களைக் குற்றமாய் நிர்ணயிக்காமலிருங்கள். [2]ஒருவன் எந்தப் பதார்த்தத்தையும் புசிக்கலாமென்று நம்புகிறான்; பலவீனனோ மரக்கறிகளை மாத்திரம் புசிக்கிறான். [3]புசிக்கிறவன் புசியாதிருக்கிறவனை அற்பமாயெண்ணாதிருப்பானாக; புசியாதிருக்கிறவனும் புசிக்கிறவனைக் குற்றவாளியாகத் தீர்க்காதிருப்பானாக; தேவன் அவனை ஏற்றுக்கொண்டாரே. [4]மற்றொருவனுடைய வேலைக்காரனைக் குற்றவாளியாகத் தீர்க்கிறதற்கு நீ யார்? அவன் நின்றாலும் விழுந்தாலும் அவனுடைய எஜமானுக்கே அவன் உத்தரவாதி; அவன் நிலைநிறுத்தப்படுவான்; தேவன் அவனை நிலைநிறுத்த வல்லவராயிருக்கிறாரே.

**தேவன் மாத்திரமே நம்மை நியாயந்தீர்க்க வல்லவராயிருக்கிறார்!**



# 10

## யாக்கோபு 2:14-26

# விசுவாசம் மற்றும் கிரியைகள்

14 என் சகோதரரே, ஒருவன் தனக்கு விசுவாசமுண்டென்று
சொல்லியும், கிரியைகளில்லாதவனானால் அவனுக்குப்
பிரயோஜனமென்ன? அந்த விசுவாசம் அவனை இரட்சிக்குமா?
15ஒரு சகோதரனாவது சகோதரியாவது வஸ்திரமில்லாமலும்
அநுதின ஆகாரமில்லாமலும் இருக்கும்போது, 16உங்களில்
ஒருவன் அவர்களை நோக்கி: நீங்கள் சமாதானத்தோடே போங்கள்,



குளிர்காய்ந்து பசியாறுங்களென்று
சொல்லியும், சரீரத்திற்கு
வேண்டியவைகளை அவர்களுக்குக்
கொடாவிட்டால் பிரயோஜனமென்ன?
17அப்படியே விசுவாசமும்
கிரியைகளில்லாதிருந்தால்
தன்னிலேதானே செத்ததாயிருக்கும்.
18ஒருவன்: உனக்கு விசுவாசமுண்டு,
எனக்குக் கிரியைகளுண்டு;
கிரியைகளில்லாமல் என் விசுவாசத்தை
எனக்குக்காண்பி, நான் என்
விசுவாசத்தை என் கிரியைகளினாலே
உனக்குக் காண்பிப்பேன் என்பானே.
19தேவன் ஒருவர் உண்டென்று
விசுவாசிக்கிறாய், அப்படிச் செய்கிறது
நல்லதுதான்; பிசாசுகளும் விசுவாசித்து,
நடுங்குகின்றன. 20வீணான மனுஷனே,
கிரியைகளில்லாத விசுவாசம்
செத்ததென்று நீ அறியவேண்டுமோ?
21நம்முடைய பிதாவாகிய ஆபிரகாம்
தன் குமாரன் ஈசாக்கைப்
பலிபீடத்தின்மேல் செலுத்தினபோது,
கிரியைகளினாலே அல்லவோ
நீதிமானாக்கப்பட்டான்? 22விசுவாசம்
அவனுடைய கிரியைகளோடேகூட
முயற்சிசெய்து, கிரியைகளினாலே
விசுவாசம் பூரணப்பட்டதென்று
காண்கிறாயே. 23அப்படியே ஆபிரகாம்
தேவனை விசுவாசித்தான், அது
அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது
என்கிற வேதவாக்கியம்
நிறைவேறிற்று; அவன் தேவனுடைய
சிநேகிதனென்னப்பட்டான்.
24ஆதலால், மனுஷன் விசுவாசத்திலே
மத்திரமல்ல, கிரியைகளினாலேயும்
நீதிமானாக்கப்படுகிறானென்று
நீங்கள் காண்கிறீர்களே. 25அந்தப்படி
ராகாப் என்னும் வேசியும் தூதர்களை
ஏற்றுக்கொண்டு வேறுவழியாய்
அனுப்பிவிட்டபோது, கிரியைகளினாலே
அல்லவோ நீதியுள்ளவளாக்கப்பட்டாள்?
26அப்படியே, ஆவியில்லாத சரீரம்
செத்ததாயிருக்கிறதுபோல,
கிரியைகளில்லாத விசுவாசமும்
செத்தாயிருக்கிறது.

யாக்கோபின் புத்தகத்திலே இந்த பாடத்தை பற்றி அதிகமாக பேசபட்டிருகிரதுமல்லாமல் அநேக கருத்து வேறுபாடுகளை கிறிஸ்தவ மக்கள் மற்றும் கிறிஸ்தவ நாடுகளிலே கொண்டுவந்திருக்கிறது.

முதலாவதாக, யாக்கோபு உங்களுடைய கிரியை உங்களை இரட்சிக்கவில்லை என்று வாதாடுகிறார். அதேசமயம் உங்களுடைய கிரியை உங்களை இரட்சிப்பதில்லை என்று தெளிவாக விளக்குகிறார். இந்த அடிப்படையில்தான் இந்தக் கடிதம் எழுதப்பட்டது என்று மனதில் தெளிவாக நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

**வசனம் 18** ஒருவன்: உனக்கு விசுவாசமுண்டு, எனக்குக் கிரியைகளுண்டு; கிரியைகளில்லாமல் உன் விசுவாசத்தை எனக்குக்காண்பி, நான் என் விசுவாசத்தை என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன் என்பானே.

இங்கே, நல்ல செயல்களை மாத்திரம் காண்பிக்கவேண்டும் என்று அவர் சொல்லாமல், விசுவாசத்தை கிரியைகளோடு காண்பிக்க வேண்டும் என்று சொல்லுகிறார்.

ஆகையால், உங்களுக்கு விசுவாசம் இருக்குமென்று நீங்கள் சொல்வீர்களாகில் உங்களுடைய விசுவாசத்தை உங்கள் நற்கிரியைகளினால் காண்பிக்கவேண்டும்.


காரணம், பார்த்தவுடன் நீங்கள் கிறிஸ்தவரா இல்லையா? என்று ஒருவருக்கும் தெரியாது. உங்களுடைய வெளித்தோற்றத்தை கொண்டு நீங்க சிலுவை அணிந்தவரா அல்லது பனியன் அல்லது மீன் அடையாளத்தை உங்க வாகனங்களில் வைத்திருப்பவரா? என்று நான் பேசவில்லை. உண்மையிலேயே, அப்படிப்பட்டவர்கள் இதை ஒரு பெரிய விஷயமாக எடுத்து கொண்டு கிறிஸ்துவத்தை துரதிர்ஷ்டவசமாக நாசம் செய்திருக்கிறார்கள்.

ஒருவர் பசியோடு உங்களிடத்தில் வந்தால், போய் நன்றாக பசியாறுங்கள் என்று யாராவது சொல்லமுடியுமா?

ஒருவர் வஸ்திரமில்லாமல் உங்களிடத்தில் வந்தால், போய் நன்றாக் உடுத்திக்கொள் என்று யாரவது சொல்லமுடியுமா?

ஒருவர் உங்களிடத்தில் வந்து, எனக்கு குளிர்கிறது என்று சொன்னால் போய் நன்றாக குளிர்காய்ந்து கொள்ளுங்கள் என்று யாராவது சொல்லமுடியுமா?

ஒருவர் தேவையோடு இருப்பதை






பார்க்கும்போது நீங்கள் என்ன செய்வீர்கள் என்பது நீங்கள் தேவன் பேரில் வைத்திருக்கும் விசுவாசத்தை கொண்டு தீர்மானிக்க முடியும்!!

**வசனம் 19** தேவன் ஒருவர் உண்டென்று விசுவாசிக்கிறாய், அப்படிச செய்கிறது நல்லதுதான்; பிசாசுகளும் விசுவாசித்து, நடுங்குகின்றன.

சாத்தான், தேவன் ஒருவர் உண்டென்று நம்புவது மாத்திரம் அல்ல, அவருடைய வார்த்தைக்கு நடுங்குகிறான். அப்படியென்றால் அவன் விசுவாசியா?

வெறுமென, விசுவாசிக்கிறேன் என்று சொல்வது உண்மையான விசுவாசம் அல்ல. ஆனால், அது கிரியைகளினால் நிரூபிக்க படவேண்டும்.

**இரண்டு உதாரணங்கள்:**

1. தேவனுடைய பலிபீடத்தில் ஆபிரகாம் ஈசாக்கை காணிக்கையா படைத்தான்.

2. ராகாப் என்னும் வேசி உளவாளிகளுக்கு உதவி செய்தாள்.

கடைசியாக, உங்களுக்கு விசுவாசத்தோடு கிரியைகளில்லை என்றால் உங்களுடைய சரீரமும் செத்ததாயிருக்கிறது என்று யாக்கோபு சொல்லுகிறார்.

**நீங்கள் எப்படி?**
விசுவாசத்தின் மூலம் உங்கள் செயலில் கிரியைகளை நடப்பிக்கிறீர்கள் என்றோ அல்லது சபைக்கு போவதால் மாத்திரம் நீங்கள் கிறிஸ்தவர் என்று உங்களில் யாராவது சொல்லமுடியுமா?



11

# பெருமை மற்றும் பொறாமை

## யாக்கோபு 4:1–10

[1] உங்களுக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும் எதினாலே வருகிறது; உங்கள் அவயவங்களில் போர் செய்கிற இச்சைகளினாலல்லவா? [2] நீங்கள் இச்சித்தும் உங்களுக்குக் கிடைக்கவில்லை; நீங்கள் கொலைசெய்தும், பொறாமையுள்ளவர்களாயிருந்தும், அடையக்கூடாமற்போகிறீர்கள்; நீங்கள் சண்டையும் யுத்தமும் பண்ணியும், நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குச் சித்திக்கிறதில்லை. [3]நீங்கள விண்ணப்பம் பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்கவேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள். [4]விபசாரரே, விபசாரிகளே, உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான். [5]நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையாயிருக்கிறாரென்று நினைக்கிறீர்களா? [6]அவர் அதிகமான கிருபையை அளிக்கிறாரே. ஆதலால் தேவன் பெருமையுள்ளவர்களுக்கு எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறாரென்று சொல்லியிருக்கிறது. [7]ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான். [8]தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்தகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள். [9]நீங்கள் துயரப்பட்டுத் துக்கித்து



அழுங்கள்; உங்கள் நகைப்பு துக்கிப்பாகவும், உங்கள் சந்தோஷம் சஞ்சலமாகவும் மாறக்கடவும். [10]கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்.

யாக்கோபு தன் கடிதத்தை அடுத்த நிலைக்கு கொண்டு சென்று தாழ்மைப்படுவதற்கும் மற்றும் பொறாமைக்கொள்ளாத படிக்கும் எந்த மாதிரியான காரியங்களை நீக்கவேண்டும் என்று சுட்டிக்காட்டினார். இந்த கடிதம் எருசலேமிலிருந்து எல்லா இடங்களுக்கும் சிதறிபோன கிறிஸ்தவர்களுக்கு எழுதிய கடிதம் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.

உங்களுடைய எல்லா பிரச்சனைகளுக்கும் முக்கிய மூல ஆதாரம் என்னவென்றால் உங்கள் சரீரத்திலுள்ள அங்கங்களில் போர் செய்கிற இச்சைகளினால்தானே.

வசனம் 1. **உங்களுக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும் எதினாலே வருகிறது; உங்கள் அவயவங்களில் போர் செய்கிற இச்சைகளினாலல்லவா?**

பொருளாசை என்பது இருதயம் சம்பந்தப்பட்டது அதனால் தான் பழைய உடன்படிக்கைகளில் ஒன்பதாவது கட்டளையை நாம் வைத்து கொண்டாலும் பத்தாவது கட்டளையை நாம் வைத்துக்கொள்ள முடியாது. எல்லா கட்டளைகளும் வெளியரங்கமாய் செய்யப்படும் செயல்கள் ஆனால் பத்தாவது கட்டளையோ உள்ளார்ந்த மனம் சம்பந்தப்பட்ட மனப்பான்மை கொண்டது.

ரோமர் 7 ஆம் அதிகாரத்தில் கட்டளைகளை கைக்கொண்டதினால்தான் கண்ட போராட்டங்களையும் தோல்விகளையும் விளக்கமாக சொல்லியிருக்கிறார். கடைசியாக, இயேசு கிறிஸ்துவால் மட்டுமே எல்லா இச்சைகளிலிருந்து அவரை விடுவிக்க முடியும் என்று முடிக்கிறார்.

வசனம் 2, **நீங்கள் இச்சித்தும் உங்களுக்குக் கிடைக்கவில்லை; நீங்கள் கொலைசெய்தும், பொறாமையுள்ளவர்களாயிருந்தும், அடையக்கூடாமற்போகிறீர்கள்; நீங்கள் சண்டையும் யுத்தமும் பண்ணியும், நீங்கள் விண்ணப்பம் பண்ணாமலிருக்கிறதினாலே, உங்களுக்குச் சித்திக்கிறதில்லை.**

**கண்களின் இச்சை:**

(**ஆதியாகமம் 3:6)** அப்பொழுது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும், புத்தியைத் தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று

கண்டு, அதின் கனியைப் பறித்து, புசித்து, தன் புருஷனுக்கும் கொடுத்தாள்; அவனும் புசித்தான்.

அதனால் தான் தேவன நமக்கு கட்டளையிட்டிருக்கிறார் **(யாத்திராகமம் 20:17)**, ''பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக; பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும், அவனுடைய வேலைக்காரியையும், அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும், பின்னும் பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக என்றார்.''

நீங்கள் வாங்கி வைத்திருக்கும் பொருட்களை விட தாங்கள் வைத்திருக்கும் பொருட்கள் சிறந்தது என்று ஒவ்வொரு விளம்பரங்களும் உங்களை மயக்கி வைத்திருக்கிறது. சாத்தான் இயேசுவிடம் இதை முயற்சி செய்தான், **(மத்தேயு 4:8)ல்,** மறுபடியும் பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின்மேல் கொண்டுபோய், உலகத்தின் சகல ராஜ்யங்களையும் அவைகளின் மகிமையையும் அவருக்குக் காண்பித்து:

ஆகவே, உங்களிடத்தில் இல்லை என்றும், ஏனென்றால் நீங்கள் அதை பெற்றுக்கொள்ளும்படியாய் தேவனிடத்தில் போகவில்லை என்றும் யாக்கோபு பரிந்துரைக்கிறார்.

வசனம் 3. **நீங்கள் விண்ணப்பம் பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்கவேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம் பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்.**

இப்பொழுது, நீங்கள் பெற்றுக்கொள்ளாமல் இருப்பதற்கு காரணம் உங்களுடைய குறிக்கோள் தேவனை அடைவது அல்ல உங்களுடைய தேவைகளை சந்திப்பதே என்று யாக்கோபு சொல்லுகிறார்.

மறுபடியும் இக்கடிதம் நம்மையும் நம்முடைய நோக்கத்தையும் நிதானித்து அறிவதற்கு ஏவுகிறது. வெளியரங்கமாய் மற்றவர்களுக்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்பது அல்ல மாறாக நமக்குள் என்ன மாற்றத்தை செய்யவேண்டும் என்பதே.

இயேசு, தேவனை மாத்திரம் நோக்கி கொண்டிருந்தபடியால் அவருடைய சோதனைகளை மேற்கொள்ள முடிந்தது, மற்றும் ''எழுதியிருக்கிறபடி'' என்கிற வார்த்தையை எப்பொழுதும் அவர் சொல்லிக்கொண்டிருந்தார். **(லூக்கா 4:1-12)**

வசனம் 4, **தன் கணவனுடைய எதிரியை சிநேகிக்கிற நேர்மையற்ற மனைவியை போல இருக்கிறாய். உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான். உங்களுடைய முக்கிய குறிக்கோள் என்ன என்று திரும்பவும் யாக்கோபு கேட்கிறார்?**

தேவனை மகிழ்விப்பது நம்முடைய நோக்கமா? அப்படியென்றால் உலகத்தையும் அதின் சந்தோஷத்தையும் சிநேகிக்க முடியாது.

நம்முடைய கணவனின் எதிரியை சிநேகிக்கிறவர்களாக இருப்போம் வேறு வார்த்தையில் சொன்னால் ஒழுக்கங்கெட்டவர்களாயிருப்போம்.

அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய நிருபத்தில் இவ்வாறாக எழுதியிருக்கிறார். **(1 யோவான் 2:15-17)**, [15]உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை.

[16]ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். [17]உலகமும் அதின் இச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்.

ஒன்றை நாம் புரிந்து கொள்ள வேண்டும், எதை நாம் பார்க்கிறோம், எதை நாம் அனுபவிக்கிறோம் என்பது எல்லாம் நிரந்தரம் அல்ல அவை கடந்து போய்விடும். ஆனால் தேவனே நித்திய நித்தியமானவர். ஆகையால், நம்முடைய நோக்கம் நம்மை அல்ல நம்முடைய பலலோக பிதாவை மாத்திரம் மகிழ்விப்பதாக இருக்கவேண்டும்.

## பெருமை:

**பாவத்தின் தோற்றம்,** இந்த பிரபஞ்சத்தில் தோன்றின முதல் பாவம் என்ன என்று பார்ப்போம்!

**ஏசாயா 14:12-15** [12]அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே, நீ வானத்திலிருந்து விழுந்தாயே! ஜாதிகளை ஈனப்படுத்தினவனே, நீ தரையிலே விழ வெட்டப்பட்டாயே! [13]நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்கு மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன்; வடபுறங்களிலுள்ள ஆராதனைக் கூட்டத்தின் பர்வதத்திலே வீற்றிருப்பேன் என்றும், [14]நான் மேகங்களுக்கு மேலாக உன்னதங்களில் ஏறுவேன்; உன்னதமானவருக்கு ஒப்பாவேன்

என்றும் நீ உன் இருதயத்தில் சொன்னாயே. [15]ஆனாலும் நீ அகாதமான பாதாளத்திலே தள்ளுண்டுபோனாய்.

மேற்கண்ட வசனத்தில் ''நான் செய்வேன்'' என்ற வாக்கியம் எத்தனைமுறை தோன்றகிறது என்று நீங்கள் பார்க்கலாம். ஐந்து முறை! பாருங்கள் கலகம் நம் இருதயத்திற்குள் நுழைந்து நம்முடைய சித்தத்தை செய்வதற்கு தேவனை எதிர்க்கிறது. சாத்தான் ''**பெருமையினிமித்தம்**'' தேவனை எதிர்த்தான். எனவே, அவனும் அவனுடைய மார்க்கத்தை சேர்ந்த தூதர்களில் ஒரு பங்கும் தூக்கி எறியப்பட்டார்கள். இதனால் தான் முதல் பாவம் பெருமை வந்தது.! பாரடைஸ் லாஸ்ட் என்கிற கற்பனை கதை ஒன்றை ஜான் மில்டன் என்பவர் சாத்தானுடைய குணங்களை பற்றி சித்தரித்திருக்கிறார். அதில் சாத்தான் பரலோகத்திலிருக்கிற தேவனை வழிபடுவதை அவன் விரும்பாதவனாயும் மற்றும் அவருடைய இடத்தை அவன் அடைய வேண்டும் என்றும் அவருக்கு எதிராக செயல்பட தொடங்கினான்.

அவன் பரலோகத்திலிருந்து தூக்கி எறியப்பட்டும் மனந்திரும்பவில்லை ஆகையால் அவன் ''**பரலோகத்தில் சேவை செய்வதைக் காட்டிலும் நரகத்தில் ஆட்சி செய்வதே மேல்**'' என்று இன்னும் ஏங்கிக்கொண்டிருக்கிறான். சாத்தானுடைய எதிர்ப்பினால் உருவான அடிவேர் தான் இந்த பெருமை. அவன் ஆட்சி செய்ய வேண்டும், உன்னதமானவருடைய இடத்தை அடைய வேண்டும் மற்றும் எல்லாருடைய கவனமும் அவன் மேல் இருக்க வேண்டும் என்பதே அவனுடைய நோக்கம்.

சாத்தானுடைய எதிர்ப்பு மற்றும் அவனுடைய தூதர்களில் மூன்றில் ஒரு பங்கு பரலோகத்திலிருந்து தூக்கி எறியப்பட்டார்கள். பெருமை என்னும் பாவத்திலிருந்து தான் எல்லாவிதமான தீங்கும் அழிவும் முன்னும் பின்னுமாக முளைத்தது. ''**பெருமை தான் எல்லா தீங்குக்கும் வேராயிருக்கிறது.**''

## உலகத்தில் முதல் பாவம் என்ன?

தேவனுடைய வார்த்தைக்கு ஆதாமின் கீழ்படியாமை! அல்லது, ஆதாம் அவனுடைய அடையாளத்திற்கான பொய்யை நம்பினபடியால் அதை அடையாள நெருக்கடி என்று நீங்கள் வைத்து கொள்ளலாம். ஆதாம் பாவம் செய்தபோது ஏதேன் தோட்டத்திலிருந்து வெளியேற்றப்பட்டான் அதேசமயம், தன் மகன் காயீன் தன்னுடைய சகோதரனை கொலை சிதபடியால் தேவன் அவனை சபித்தார். ஏன்? ஆதாமின் பாவம் அவனை மாத்திரம் பாதித்தது ஆனால் காயீனுடைய பாவம் (**ஆதியாகமம் 4:11**) இன்னொருவனை பாதித்தது. ஆகவே, நீங்கள் மற்றவருக்கெதிராக பாவம் செய்தால் தேவன் அதை தீவிரமாக விசாரிப்பார். இங்கே பொறமை தான் பாவமாக இருக்கிறது. பெருமை மற்றும் பொறாமை ஆகிய இரண்டும் அநேக பாவங்களுக்கு முக்கிய வேறாக இருக்கிறது.

(**யாக்கோபு 3:16**)ல் அருமையாக சொல்லப்பட்டிருக்கிறது: வைராக்கியமும் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச்செய்கைகளுமுண்டு.

சமயம் எடுத்து கொண்டு உங்களை பாதித்த நீங்கள் செய்த சில பாவங்களை சிந்தித்து பாருங்கள், கண்டிப்பாக நிறைய பாவங்கள் இருக்கும் என்று நினைக்கிறேன்! இவை ஆதாமின் பாவத்திற்கு கீழ் வருபவை. இப்பொழுது, மற்றவர்களை பாதிக்கும்படி நீங்கள் செய்த பாவங்கள், கண்டிப்பாக இங்கேயும் அநேக பாவங்கள் இருக்கும் என்று நினைகிறேன்.! இவை காயீனுடைய பாவத்திற்கு கீழ் வருபவை. என்னுடைய சொந்த வாழ்க்கையிலிருந்து ஒரு உவமையை உங்களுக்கு காண்பிக்கிறேன். எனக்கு இரண்டு பிள்ளைகள் உண்டு. ஒருவன் உதவியற்ற மற்ற பிள்ளையை அடிக்கும்போது இதை பார்த்து கொண்டிருக்கும் நான் ஒன்றும் செய்யாமல் இருப்பேன் என்று நீங்கள் நினைக்கிறீர்களா? தேவனும் அப்படியே வழக்கு செய்வார்!

## ஆவிக்குரிய பெருமையை எவ்வாறு மேற்கொள்ளுவது?

**i) ஜெபம்**

உங்களுக்கு உதவும்படிக்கும் மற்றும் மற்றவர்களோடு சேர்ந்து ஜெபம் பண்ணுவதற்கும் தேவனிடத்தில் கேளுங்கள். உங்களுக்கு நெருக்கமானவர்களுக்கு உங்களை பற்றின காரியங்களை கூறுவதற்கு முழு சுதந்திரம் நீங்கள் கொடுக்க வேண்டும். அவர்கள் யாராயிருந்தாலும் எந்த நிலைமையில் இருந்தாலும் அவர்கள் உங்களுடைய வாழ்க்கையில் உண்மையாய் சில காரியங்களை வெளிப்படையாய் கூறுபவர்களாக இருக்கவேண்டும்.

**நான் பாவி என்று ஒப்புக்கொள்ளுங்கள்**

உண்மையிலே நான் ஒரு பாவி. நான் மட்டும் அல்ல நானே தான். ஆனால், அந்த ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களை வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல் தன் மார்பிலே அடித்துக்கொண்டு சொன்னான்.

'தேவனே! பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்றான்! (**லூக்கா 18:13**)

''நமக்குப் பாவமில்லையென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம்,'' - (1 **யோவான்** 1:8.)

உங்களுடைய வாழ்க்கையில் ஒவ்வொரு நாளும் தேவனுடைய கிருபையை நீங்கள் பார்க்கவேண்டும். அது உங்களுடைய வாழ்க்கையில் தேவன் யார் என்கிற பிரமிப்பையும் பயபக்தியையும் கொண்டு வருகிறது. ஒரு நிலையில் தேவனுடைய கிருபையை தவிர வேறு ஒன்றுமில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

**ii) எப்பொழுதும் கர்த்தரைக்குறித்து மேன்மைப்பாராட்டுங்கள்**

அப்போஸ்தலனாகிய பவுல் தன்னுடைய வாழ்க்கையில் தேவனுடைய கிருபை பூரணமாக நிறைந்திருக்கிறது என்று அறிந்திருக்கிறார். தாம் அதிகாரப்பூர்வமாக தெரிவித்த சுவிசேஷங்களை தன்னால் அன்றி மற்றும் தன்னுடைய பலத்தினால் அன்றி ஆனால் தேவனுடைய சுத்த கிருபையினால் மாத்திரம் என்று அவருடைய சாதனைகளை தெளிவாக விவரிக்கிறார்.

ஆகிலும் நான் இருக்கிறது தேவகிருபையினாலே இருக்கிறேன்; அவர் எனக்கு அருளிய கிருபை விருதாவாயிருக்கவில்லை; அவர்களெல்லாரிலும் நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டேன், ஆகிலும் நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவகிருபையே அப்படிச் செய்தது. (**1 கொரிந்தியர் 15:10**)'

18புறஜாதியாரை வார்த்தையினாலும் செய்கையினாலும்
கீழ்ப்படியப்பண்ணும்படிக்கு, அற்புத அடையாளங்களின் பலத்தினாலும்,
தேவ ஆவியின் பலத்தினாலும், கிறிஸ்துவானவர் என்னைக்கொண்டு
நடப்பித்தவைகளைச் சொல்வதல்லாமல் வேறொன்றையும் சொல்ல
நான் துணிவதில்லை;
19இப்படி எருசலேம் துவக்கிச் சுற்றிலும்,
இல்லிரிக்கம் தேசம்வரைக்கும், கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப்
பூரணமாய்ப் பிரசங்கித்திருக்கிறேன். -(**ரோமர் 15:18-19**)

ஆகையால், இப்படிப்பட்ட காரியத்திலிருந்து மீளுவதற்கு யாக்கோபு எவ்வாறான கருத்துக்களை தெரிவிக்கிறார்?

**வசனம் 7-10**

7ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து
நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான.
8தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில்
சேருவார். பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்;
இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள்.
9நீங்கள் துயரப்பட்டுத் துக்கித்து அழுங்கள்; உங்கள் நகைப்பு
துக்கிப்பாகவும் உங்கள் சந்தோஷம் சஞ்சலமாகவும் மாறக்கடவது.
10கர்த்தருக்கு முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர்
உங்களை உயர்த்துவார்.

1. **தேவனிடத்தில் உங்களை தாழ்த்துங்கள்.**
2. **பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள்.**
3. **தேவனிடத்தில் சேருங்கள்**
4. **உங்கள் கைகளை சுத்திகரியுங்கள்.**
5. **உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள்.**
5. **இருமனமுள்ளவர்களாய் இராதேயுங்கள்.**
7. **துக்கித்து அழுங்கள்.**
8. **ஜெபம்பண்ணுங்கள்**
9. **தாழ்மைப்படுங்கள்**
10. **உங்கள் சந்தோஷம் மாறக்கடவது.**

ஒவ்வொரு தலைப்புகளை பற்றியும் தனித்தனியாக படிக்கமுடியும். ஆகவே, நம்மை நாமே ஆழமாக சோதித்து அறிந்து பார்ப்போம்.

ஆவியானவர் தாமே நமக்குள் என்ன இருக்கிறது என்பதை வெளிப்படுத்துவாராக.

ஆகவே, நாம் அவர் அண்டை கிட்டிச்சேர்வோம் அப்பொழுது அவர் நம்மிடத்தில் சேருவார்.!!



[13]மேலும், நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப் போய், அங்கே ஒருவருஷம் தங்கி, வியாபாரஞ் செய்து, சம்பாதியம் பண்ணுவோமென்கிறவர்களே, கேளுங்கள். [14]நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே.

உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக்காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப் போலிருக்கிறதே. [15]ஆதலால்: ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்லவேண்டும். 16இப்பொழுது உங்கள் வீம்புகளில் மேன்மைபாராட்டுகிறீர்கள்; இப்படிப்பட்ட மேன்மைபாராட்டல் யாவும் பொல்லாங்காயிருக்கிறது. 17ஆதலால், ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்.

[1]ஐசுவரியவான்களே, கேளுங்கள், உங்கள்மேல் வரும் நிர்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள். [2]உங்கள் ஐசுவரியம் அழிந்து, உங்கள் வஸ்திரங்கள் பொட்டரித்துப்போயின. [3]உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்தது; அவைகளிலுள்ள துரு உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருந்து, அக்கினியைப்போல உங்கள் மாம்சத்தைத் தின்னும். கடைசிநாட்களிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள். [4]இதோ, உங்கள் வயல்களை அறுத்த வேலைக்காரருடைய கூலி உங்களால் அநியாயமாய்ப் பிடிக்கப்பட்டுக் கூக்குரலிடுகிறது; அறுத்தவர்களுடைய, கூக்குரல் சேனைகளுடைய கர்த்தரின் செவிகளில் பட்டது. [5]பூமியிலே நீங்கள் சம்பிரமமாய் வாழ்ந்து, சுகபோகத்தில் உழன்றீர்கள்; கொழுத்தவைகளை அடிக்கும் நாளில் நடக்கிறதுபோல உங்கள் இருதயங்களைப் போஷித்தீர்கள். [6]நீதிமானை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துக் கொலைசெய்தீர்கள்; அவன் உங்களோட எதிர்த்து நிற்கவில்லை.

பொதுவாகவே யூத ஜனங்கள் வியாபாரம் பண்ணுவதில் திறமை வாய்ந்தவர்கள். ஏசாவின் வம்சாவளியினராகிய ஏதொமியர்கள் தங்களுடைய நகரத்திலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். ஜூலியஸ் சீசரிடமிருந்து அதிகாரத்தை பெற்று எருசலேமை ஆளுவதற்கு வெகு சீக்கிரமாக செல்வத்தை பெருக்கிக்கொள்ள தங்களுடைய நிலைமையை எவ்வாறு கையாண்டார்கள் என்பதை நாம் வரலாற்றின் மூலம் அறிந்திருக்கிறோம். இயேசு கிறிஸ்துவில் விசுவாசிகளாயிருக்கிற நாம், ஒரு புதிய இடத்திற்கு போகும்



# 12



யாக்கோபு 4:1-10

# வியாபாரம் மற்றும் செல்வம்

போது பண லாபத்திற்காக மட்டுமே நம்முடைய நோக்கம் செல்வதாக இருக்க கூடாது என்று யாக்கோப்பு சுட்டிக்காட்டுகிறார். எருசலேமில் இருந்த யுதர்களின் வாழ்க்கைக்கு உண்மையாகவே அச்சுறுத்தல் இருந்தது. அவர்கள் தங்களுடைய சொந்த நாட்டை விட்டு சிதறிபோயிருக்கிறபடியால் ஆண்டவர் அவர்களை எங்கே போகவேண்டும் என்று விரும்புகிறார் என்பதை அறிந்துகொள்ள யாக்கோப்பு அவர்களுக்கு கட்டளையிடுகிறார்.

**மேலும், நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப் போய், அங்கே ஒருவருஷம் தங்கி, வியாபாரஞ்செய்து, சம்பாத்தியம்பண்ணுவோமென்கிறவர்களே, கேளுங்கள்.**

ஒரு வியாபாரம் பண்ணுவதற்கு உங்களுடைய நோக்கம் என்னவாக இருக்கும்? வியாபாரத்தில் மட்டும் அல்ல, நிறுவனம் அல்லது மருத்துவமனை அல்லது அரசு நிறுவனம் போன்றவற்றில் நீங்கள் சேவை செய்தாலும் எது உங்களை ஊக்குவிக்கிறது.

**அது லாபத்திற்காக மட்டுமா?**

உலகத்தை சுற்றி பாருங்கள் மக்களுக்கு சேவை செய்வதற்காக அரசாங்கம் எடுத்துக்கொண்ட எல்லா பணியிடங்கள் நிறுவனமாகவும், மற்றும் அந்தந்த துறைக்கு லாபம் சம்பாதிக்கும் மனிதர்களாக மாறிவிட்டனர். ஹிரிவில் தண்ணீர் சப்ளை செய்யும் நிறுவனம் மிக பெரிய லாபத்தை சேர்க்கிறது மற்றும் ஒரு




பெரிய தொகையை தங்களுடைய சிணிளி விற்கு அளிக்கிறது. மற்றும் ஒரு துறை போக்குவரத்து, போக்குவரத்து நிர்வாகிகள் மிகப்பெரிய தொகையை செலுத்தியிருக்கிறபடியால் லண்டனை போல் அநேக நாடுகளில் போக்குவரத்து கட்டணம் அதிகமாக வசூலிக்கப்படுகிறது.

இங்கிலாந்திலுள்ள எல்லா சபை / மன்றங்களின் நிகழ்வுகளை எடுத்துக்கொள்ளலாம். அநேக மன்றங்களின் சிணிளி கள் நம் நாட்டின் பிரதம மந்திரியின் வருமானத்தை விட இரண்டு மடங்கு அதிகமாகவே பணம் செலுத்துகிறார்கள். ஏன்? பேராசை!. சிறிய தொழிலதிபர்களின் சமீபத்திய கணக்கெடுப்பு முடிவுகள்.

**கேள்வி**: சொந்தமாக தொழில் செய்வதற்கு உங்களுடைய வேலையை ஏன் விட்டீர்கள்?

**பதில்**:
1. இலாப நோக்கம்
2. சந்தை வாய்ப்புக்கான அடையாளம் கண்டல்
3. நானே முதலாளி

ஆகவே, நாம் எப்படி செய்ய வேண்டும்?

நித்திய வாழ்வை ஒப்பிடும் போது பூமியில் நாம் வாழும் வாழ்க்கை மிக சிறியது. அது ஒரு மூடுபனியை போல் இருக்கிறது.

உங்களுடைய வாழ்க்கை நாளைய தினம் போல் இருக்கும் என்று எப்படி உங்களுக்கு தெரியும்? உங்களுடைய வாழ்க்கை ஒரு மூடு பனியாய் போல இருக்கிறதே - இருப்பது போல் இருந்து பின்பு மறைந்துவிடும். நீங்கள் என்ன சொல்ல வேண்டும் என்றால் வசனம் 15ல் சொல்லியிருக்கிறது போல "ஆதலால்: ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்லவேண்டும்." நாம் கிறிஸ்தவர்களாய் இருக்கிறபடியால் நம்முடைய திட்டங்களையும் நோக்கத்தையும் முன்னாக தள்ளி நம்முடைய சுய திட்டத்தின்படி நடவாமல் தேவ சித்தத்தை அறிந்து அதன்படி செயல்பட வேண்டும் ஏனென்றால் நாம் வாழ்கின்ற வாழ்க்கை தேவனிடத்திலிருந்து வந்த ஈவு. மற்றும் இந்த வாழ்வு மிக சிறியது இதை வீணடிக்க வேண்டிய அவசியம் இல்லை. மத்திய கிழக்கு நாடுகளில் மக்கள் **"இன்ஷா அல்லா"** என்று சொல்ல தொடங்கினர் அதற்கு **"தேவனுடைய சித்தம்"** என்று அர்த்தம். இதை கிறிஸ்தவர்களை விட முஸ்லிம்கள் தான் அதிகம் உபயோகிக்கின்றனர்.!!

சாலமோன் எழுதிய பிரசங்கி அநேக அதிகாரம் 3 மக்களோடு மிகவும் பிரபலமானது.

நம்முடைய வாழ்க்கையின் நோக்கம்

என்ன? உலக காரியங்கள் மீதா அல்லது நித்தியத்திற்கான மதிப்புகள் நிறைந்ததா என்பதை நாம் பார்க்க வேண்டும்.

மூன்றாவதாக, ஒரு தொழிலை ஆரம்பிப்பதற்கு அவர்கள் சொல்லும் காரணம்,

தாங்களே அதற்கு முதலாளியாகவும் யாருக்கும் பதில் அளிக்க வேண்டியதில்லை மற்றும் மற்றவருக்கு கீழே வேலை செய்ய வேண்டியதில்லை என்பதே.

சுயநலம் இவர்களுடைய வாழ்க்கையில் முக்கிய பங்கு வகிக்கிறது. அவர்களுடைய சாதனையை நினைத்து பெருமை கொள்கிறார்கள் மற்றும் அவர்களுடைய



வழிகளும் தீயதாய் மாறிவிடுகிறது.

16இப்பொழுது உங்கள் வீம்புகளில் மேன்மை பாராட்டுகிறீர்கள்; இப்படிப்பட்ட மேன்மை பாராட்டல் யாவும் பொல்லாங் காயிருக்கிறது.

ஆகவே, இதை எப்படி தவிர்க்க முடியும்? இயேசுவின் வாழ்க்கையை பாருங்கள், யோவான் 6:38, என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான்

வானத்திலிருந்திறங்கிவந்தேன். என்னை அனுப்பினவருடைய சித்தத்தை செய்யவே நான் இங்கு இவன்தேன் என்று தன்னுடைய வாழ்க்கை பணியை குறித்து ஒரே வரியில் சுருக்கி விளக்கினார்.

அதே போல் நாமும் நம்மை அனுப்பினவருடைய சித்தத்தை செய்ய கற்று கொள்வோம்.

யாக்கோபு, தொழில் திறமைகளை உபயோகிப்பதை குறித்தும் அதன் மூலம் நீங்கள் செல்வந்தர்களாவதனால் அடையும் பிரச்சனைகளை குறித்தும் எச்சரிக்கிறார்.

**யாக்கோபு 5:1-3**

1ஐசுவரியவான்களே, கேளுங்கள், உங்கள்மேல் வரும் நிர்பந்தங்களினிமித்தம் அலறி அழுங்கள். 2உங்கள் ஐசுவரியம் அழிந்து, உங்கள் வஸ்திரங்கள் பொட்டரித்துப்போயின. 3உங்கள் பொன்னும் வெள்ளியும் துருப்பிடித்தது; அவைகளிலுள்ள துரு உங்களுக்கு விரோதமாகச் சாட்சியாயிருந்து, அக்கினியைப்போல உங்கள் மாம்சத்தைத் தின்னும். கடைசிநாட்களிலே பொக்கிஷத்தைச் சேர்த்தீர்கள்.

இறப்பிற்கு பின்னும் ஒரு வாழ்க்கை உண்டு. எபிரேயர் 9:27, அன்றியும், ஒரேதரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே, நாம் ஒவ்வொருவருக்கும் நியாயத்தீர்ப்பு உண்டு. இங்கு யாக்கோபு, நாம் நியாயத்தீர்ப்பு நாளை சந்திக்க வேண்டியிருக்கும் என்று சுட்டிக்காட்டுகிறார். நியாயத்தீர்ப்பு நாளன்று பணக்காரரின் செல்வமே அவர்களுக்கு எதிராக சாட்சி கொடுக்கும்.!

உங்களுடைய பொன்னும் வெள்ளியும் உங்களை அறித்துபோடும். நீங்கள் சேர்த்து வைத்திருக்கும் ஒவ்வொரு பொக்கிஷங்களும் எரிகிற அக்கினியை போல உங்கள் மாமிசங்களை தின்றுவிடும். நீங்கள் சேமித்து வைத்த இந்த அறித்துபோன பொக்கிஷங்களே நியாயத்தீர்ப்பின் நாளன்று உங்களுக்கு எதிராக சாட்சி கொடுக்கும்.

**இயேசு தெளிவாக மத்தேயு 6:19-21ல்,**
“ 19பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கவேண்டாம்; இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்; இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். 20பரலோகத்திலே உங்கள் பொக்கிஷங்களைச் சேர்த்து வையுங்கள்; அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை; அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை. 21உங்கள் பொக்கிஷம் எங்கேயிருக்கிறதோ அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.” என்று கற்பித்திருக்கிறார்.

செல்வங்களை சேர்த்து வைப்பது பிரச்சனை அல்ல ஆனால் அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதே முக்கியமான காரியம். உங்களுக்கு கொடுக்கப்பட்டதை வைத்து நீங்கள்

என்ன செய்வீர்கள்?

இந்த செல்வம் அழிய கூடியது. இந்த பூமியில் நாம் பார்க்க கூடியதும் அனுபவிக்க கூடியதும் அழிந்து போகிறதாயிருக்கிறது. செல்வத்தை அடைவதற்கு முக்கியத்துவம் கொடுக்காமல் அதை எவ்வாறு திறம்பட உபயோகப்படுத்தலாம் என்று நினைக்கும் போது பரலோகத்தில் நமக்கு நாமே பொக்கிஷங்களை சேர்த்து வைக்க முடியும்.

நீங்கள் தேவனிடத்தில் துக்கித்து புலம்பி அழுது உங்களுடைய முக்கியத்துவத்தை மாற்றி கொண்டு உங்களுடைய செல்வங்களை சரியாய் உபயோகப்படுத்துங்கள்.

அவர்கள் சம்பாதித்து வைத்திருக்கும் இந்த செல்வமானது உடனே அவர்களுக்கு கிடைத்தவை அல்ல ஏழை வேலைக்காரர்களை ஒடுக்கி பெற்ற அவர்களுடைய கூலியே, யாக்கோபு 5:4-6, 4இதோ, உங்கள் வயல்களை அறுத்த வேலைக்காரருடைய கூலி உங்களால் அநியாயமாப் பிடிக்கப்பட்டுக் கூக்குரலிடுகிறது; அறுத்தவர்களுடைய, கூக்குரல் சேனைகளுடைய கர்த்தரின் செவிகளில் பட்டது. 5பூமியிலே நீங்கள் சம்பிரமமாய் வாழ்ந்து, சுகபோகத்தில் உழன்றீர்கள்; கொழுத்தவைகளை அடிக்கும் நாளில் நடக்கிறதுபோல உங்கள் இருதயங்களைப் போஷித்தீர்கள். 6நீதிமானை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துக் கொலைசெய்தீர்கள்; அவன் உங்களோடே எதிர்த்து நிற்கவில்லை.

அவர்களுக்கு சரியான கூலியை கொடுக்கவில்லை மற்றும் ஆரம்பம் முதல் முடிவு வரை அதாவது விதைக்கிறவனிலிருந்து அறுவடை செய்கிறவன் வரை ஏமாற்றி இருக்கிறார்கள். அவர்களை ஏமாற்ற மட்டும் செய்யவில்லை கொலையும் செய்திருக்கிறார்கள். அவர்கள் ஒன்றும் அறியாத வெகுளியாய் இருந்தபோதிலும் அவர்கள் உங்களுக்கு எதிராக நிற்கவில்லை.

இரண்டாவதாக, நீங்கள் சரியான கூலியை அவர்களுக்கு கொடுப்பதற்கு பதிலாக அவர்களுடைய செல்வத்தை தேவையில்லாத தற்பெருமைக்காக உங்களுடைய விருப்பத்தை





நிறைவேற்றி கொண்டீர்கள். நீங்கள் சரீரத்திலும் செல்வத்திலும் பழுகி பெருகினீர்கள். யாக்கோபு இவர்களை, பலியிடுவதற்காக அடிக்கப்படும் கொழுத்த மிருகங்களோடு ஒப்பிடுகிறார்.

மூன்றாவதாக, அவர்களுடைய அழுகையின் கூக்குரல் நியாயத்தீர்ப்பின் நாளன்று உங்களை நியாயந்தீர்க்க போகும் சேனைகளின் கர்த்தருடைய செவிகளில் பட்டது.

உங்கள் முன்னே இருக்கும் பயங்கரமான பிரச்சனைகளுக்காக வேதனையோடு அழுது புலம்புங்கள். அப்போதுதான் நியாயத்தீர்ப்பின் நாளன்று வருத்தப்படாமல் முன்னதாகவே அவர்கள் தங்களை சரி செய்து கொள்ள முடியும் என்பதற்காக மனந்திரும்புங்கள் என்று யாக்கோபு சொல்லியிருக்கிறார்.

யாக்கோபு சொன்ன இரண்டு காரியங்களுக்கிடையில் முக்கியமாக ஒரு காரியத்தை சொல்லியிருக்கிறார். **யாக்கோபு 4:17**, ஆதலால், ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும். என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் அறிந்திருந்தும் நீங்கள் செய்யாமல் போனால் அது உங்களுடைய பாவமாயிருக்கும்.

இந்த பாடத்திலிருந்து கீழ்கண்ட காரியங்களை நீங்கள் தெரிந்துகொண்டிருப்பீர்கள்.

**1. இலாபத்திற்காக நாம் வேலையோ அல்லது தொழிலோ செய்யாமல் தேவன் அழைத்த அழைப்புக்கேற்றபடி செய்ய வேண்டும்.**
**2. நாம் யாரையும் ஒடுக்குதல் கூடாது.**
**3. இந்த பூமியில் செல்வத்தை சேர்த்தல் கூடாது.**
**4. தீமை தரும் விருப்பங்களுக்கு சுய செலவு செய்தல் கூடாது.**
**5. நம்முடைய செல்வம் நியாயத்தீர்ப்பின் நாளன்று நமக்கு எதிராக சாட்சியாய் நிற்கும்.**
**6. பரலோகத்தில் பொக்கிஷங்களை சேர்க்கும்படியாய் நம்முடைய செல்வங்களை பயன்படுத்தவேண்டும்.**

இப்பொழுது உங்களுக்கு உண்மை என்னவென்று தெரியும் எவ்வாறு உங்களுடைய வாழ்க்கையை வாழ போகிறீர்கள்?

இதை அறிந்த பின்னும் நீங்கள் இதை செய்யாமல் இருந்தால் அது உங்களுக்கு பாவமாயிருக்குமல்லவா?

அவர் விரும்பும் வாழ்க்கையை வாழ்வதற்கு நாம் மனந்திரும்பி தேவனுடைய இரக்கத்திற்காக அவரை நோக்கி பார்ப்போம். ஆமென்!





# 13

யாக்கோபு 5:13-17

# ஜெபம் மற்றும் குணமாதல்



[13]உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணக்கடவன்; ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன்.

[14]உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள்.

[15]அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ் செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும்.

[16]நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.

[17]எலியா என்பவன் நம்மைப்போலப்பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான், அப்பொழுது மூன்றுவருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை.

யாக்கோபின் புத்தகத்திலும் இந்த பகுதியிலும் ஒரு மிக பெரிய சர்ச்சை இருக்கிறது. ரோம கத்தோலிக்க சபை, ஆங்கிலிக்க சபை, மற்றும் பெந்தேகோஸ்தே சபைகளுக்கிடையே நிறைய கருத்து வேறுபாடு இருக்கிறது. ஒரு திறந்த கண்ணோட்டத்தோடு இதை பார்க்கலாம்.

முந்தின வசனங்களில், அதாவது **அதிகாரம் 5 வசனங்கள் (7-10)ல்** சொல்லியிருக்கிறது போலவும், மற்றும் அதிகாரம் ஒன்றில் அப்போஸ்தலனாகிய யாக்கோபு சொன்னது போல இந்த வேத பகுதியை பாடுகளை கொண்டு ஆரம்பித்திருக்கிறார்.

ஆகவே, இந்த பகுதியில் ஜெபத்தை பற்றி குறிப்பிடுகிறார்.!!

**ஆறுதலுக்கான ஜெபம்:**

**[13]உங்களில் ஒருவன் துன்பப்பட்டால் ஜெபம்பண்ணக்கடவன்;**

சுவிசேஷத்திற்காக நீங்கள் பாடுபட்டீர்கள் என்றால் தேவன் உங்களை ஆறுதல் படுத்த வேண்டும் என்று நீங்கள் ஜெபிக்க வேண்டும்.

**1 பேதுரு 5:7** சொல்லியிருக்கிறது போல, அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள்.

பாடுகள் என்பது நம்முடைய விருப்பத்தேர்வு அல்ல அது கிறிஸ்த்தவ வாழ்க்கையில் ஒரு அங்கமாக வகிக்கிறது.

**1 பேதுரு 4:12,** பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக் குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்,

**2 தீமோத்தேயு 3:10-12,** [10]நீயோ என் போதகத்தையும் நடக்கையையும் நோக்கத்தையும் விசுவாசத்தையும்

நீடிய சாந்தத்தையும் அன்பையும் பொறுமையையும், [11]அந்தியோகியா, இக்கோனியா, லீஸ்திரா என்னும் பட்டணங்களில் எனக்கு உண்டான துன்பங்களையும் பாடுகளையும் நன்றாய் அறிந்திருக்கிறாய்; எவ்வளவோ துன்பங்களைச் சகித்தேன்; இவையெல்லாவற்றினின்றும் கர்த்தர் என்னை நீங்கலாக்கிவிட்டார். [12]அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.

**மகிழ்ச்சிக்கான ஜெபம்**
**[13]ஒருவன் மகிழ்ச்சியாயிருந்தால் சங்கீதம் பாடக்கடவன்.**

நீங்கள் உற்சாகமாக இருந்தால் கர்த்தருக்காக ஆர்ப்பரியுங்கள். பாட்டுகளினாலும் சங்கீதங்களினாலும் தேவனுக்கு நன்றி செலுத்துவது எவ்வளவு அற்புதமான காரியம். ஞாயிற்றுக்கிழமை ஆராதனைகளில் உற்சாகமாய் பாடுபவர்களுக்கு மனச்சோர்வு ஏற்படாது என்று மருத்துவ ரீதியாக நிருபிக்கப்பட்டுள்ளது.

**நீதிமொழிகள் 15:13,** மனமகிழ்ச்சி முகமலர்ச்சியைத் தரும்; மனோதுக்கத்தினாலே ஆவி முறிந்துபோம்.

**சங்கீதம் 118:24,** இது கர்த்தர் உண்டு பண்ணின நாள், இதிலே களிகூர்ந்து மகிழக்கடவோம்.

**நீதிமொழிகள் 17:22,** மனமகிழ்ச்சி நல்ல ஔஷதம்; முறிந்த ஆவியோ எலும்புகளை உலரப்பண்ணும்.

**சங்கீதம் 28:7,** கர்த்தர் என் பெலனும் என் கேடகமுமாயிருக்கிறார்; என் இருதயம் அவரை நம்பியிருந்தது; நான் சகாயம் பெற்றேன்; ஆகையால் என் இருதயம் களிகூருகிறது; என் பாட்டினால் அவரைத் துதிப்பேன்.

**பிலிப்பியர் 2:14-15,** நாங்கள் செய்தது வீண் என்கிற இரண்டாம் சிந்தனைக்கு இடங்கொடாமல் எல்லாவற்றையும் உற்சாகமாய் செய்து, கோணலும் மாறுபாடுமான சந்ததியின் நடுவிலே குற்றமற்றவர்களும் கபடற்றவர்களும், தேவனுடைய மாசற்றபிள்ளைகளுமாயிருக்கும்படிக்கு, நல்ல வாழ்க்கை முறைக்கான கண்ணோட்டத்தையும் மற்றும் ஜீவனுள்ள தேவனை பிரதிபலிக்கும்படியாக நீங்கள் ஜனங்களுக்கு மாதிரியாயிருங்கள்.

**1 தெசலோனிக்கேயர் 5: 16-18,**
[16]எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்.
[17]இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்.
[18]எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக்குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

நன்றியறிதல் கொண்ட மனப்பான்மை உடையவர்களாயிருப்போம்.!

**சுகத்திற்கான ஜெபம்**
[14]உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள்.
[15]அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ் செய்தவனானால் அது அவனுக்கு



மன்னிக்கப்படும். [16]நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள்.

நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது.

“கடைசியாக, வியாதிப்பட்டவனிடம் இது பாவத்தினால் வந்தது என்பதை தெரிவிக்க வேண்டும்!”

ஒருவனுடைய வியாதி அவன் செய்த பாவத்தின் பலன் என்று எவ்வாறு நான் அறிவேன்?

கண்டிப்பாக, எல்லா வியாதியும் நம்முடைய பாவத்தினால் வந்தவை அல்ல என்பது உண்மைதான், ஆனால் ஆதாம் பாவத்தில் விபந்தபடியினாலே இவை எல்லாம் ஏற்பட்டது. ஏன்? யோபு மிகவும் வியாதியாயிருந்த போது அவனுடைய பாவத்தினால்தான் வியாதிப்பட்டான் என்று தவறாக சொல்லப்பட்டது.

மற்றொரு எடுத்துக்காட்டு, **யோவான் 9:1-3,** “[1]அவர் அப்புறம் போகையில் பிறவிக்குருடனாகிய ஒரு மனுஷனைக் கண்டார். [2]அப்பொழுது அவருடைய சீஷர்கள் அவரை நோக்கி: ரபீ, இவன் குருடனாய்ப் பிறந்தது யார் செய்த பாவம், இவன்செய்த பாவமோ, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமோ என்று கேட்டார்கள். [3]இயேசு பிரதியுத்தரமாக: அது இவன் செய்த பாவமுமல்ல, இவனைப் பெற்றவர்கள் செய்த பாவமுமல்ல, தேவனுடைய கிரியைகள் இவனிடத்தில் வெளிப்படும்பொருட்டு இப்படிப் பிறந்தான்.”

இந்த பகுதியிலிருந்து ஒருவனுடைய பாவத்தினால் தான் வியாதிபடுகிறான் என்று மற்றவருக்கு சொல்லக்கூடிய நிலையில் நாம் இல்லை. பாவத்தினால் ஏற்படுகிற வியாதிகள் உண்டு என்றாலும் எல்லா வியாதிகளும் பாவத்தினால் உண்டானவை அல்ல!.

மற்றொரு மூல காரணம் சாத்தானாக இருந்தாலும் எல்லா வியாதிக்கும் அவன் தான் காரணம் என்றும் சொல்லிவிட முடியாது. சாத்தான் வியாதிக்கு காரண கர்த்தாவாக இருந்தாலும் வியாதிக்கு அவன் ஆசிரியர் இல்லை என்று வேதபாடம் நமக்கு தெளிவாக சொல்லுகிறது.

சில சமயம் தேவனாகவும் இருக்கக் கூடும். எடுத்துக்காட்டாக, **யாத்திராகமம் 4:11ல், “அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி: மனுஷனுக்கு வாயை உண்டாக்கினவர் யார்? ஊமையனையும் செவிடனையும் பார்வையுள்ளவனையும் குருடனையும் உண்டாக்கினவர் யார்? கர்த்தராகிய நான் அல்லவா??”**


**2 இராஜாக்கள் 15:5 ல்,** நமக்கு நன்றாக தெரிந்த ஒரு கதை, கர்த்தர் அசரியா ராஜாவை வாதித்ததினால், அவன் தன் மரணநாள்மட்டும் குஷ்டரோகியாயிருந்து, மிகவும் கஷ்டப்பட்டான்.

மற்றும் லூக்காவில், யோவான் ஸ்நானகன் பிறப்பை குறித்து தேவனுடைய வார்த்தையை சந்தேகப்பட்டபடியினாலே தேவனுடைய சந்நிதானத்திலிருந்து நேராக ஒரு தேவ தூதன் புறப்பட்டு வந்து சகரியாவை ஊமையாக்கினான்.

**(லூக்கா 1:19-20).**
நாம் சபிக்கப்பட்ட சிருஷ்டிப்பு ஏனென்றால் முதுமை என்பது மனித தன்மைக்கு ஒரு

முக்கிய வியாதியாயிருக்கிறது.

இதனால், சாத்தானை விட மானிடர் நிலையான பாவ வாழ்க்கையில் விழுகிறபடியினால் நாம் வியாதிக்குள்ளாக்கப்பட்டு முடிவில் மரணத்தை அடைகிறோம்.



பாவமே வியாதிக்கு மூலக் காரணமாக இருக்கிறது.

நாம் முதுமை பருவத்தை அடையும் போது நமக்கு சுருக்கங்கள் ஏற்படுகிறது, சில பேருக்கு கண்ணாடி தேவைப்படுகிறது. நம்முடைய தசைகள் வற்றிபோகிறது நாளடைவில் நாம் இறந்துவிடுவோம். மனித இனம் பாவத்தில் விழுந்தது முதல் என்பது நீதிமான்களும் துன்மார்க்கரும் வியாதிகளுக்கும் நோய்களுக்கும் ஆளாக்கப்பட்டனர்.

நான் **"சரீர பலவீனத்தோடு"** முதலாந்தரம் உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தேன் என்று கலாத்தியரிடம் பவுல் அறிக்கைசெய்தார். (**கலாத்தியர் 4:13**). பவுலின் மகன் அடிக்கடி வயிற்று பிரச்சனைகளினால் பாடுபட்டாலும் (1 **தீமோத்தேயு** 5:23) தீமோத்தேயு "விசுவாசத்தில் உத்தம குமாரன்" என்று அழைக்கப்பட்டான் (1 **தீமோத்தேயு** 1:2). மற்றும் எலிசா என்பவன் **"இரட்டிப்பான அபிஷேகத்தினால்"** ஆசீர்வதிக்கப்பட்டிருந்தான். அவனும் பாடு அவபவித்து வியாதிப்பட்டவனாய் மரித்துபோனான். (**2 இராஜாக்கள் 13:14**) கடைசியாக, முக்கியமாக கவனிக்க வேண்டியது என்னவென்றால் இந்த உலகம் சாத்தானுக்கல்ல சதா காலமும் ஆட்சி செய்யும் உன்னதமான தேவனுக்கு கீழ்ப்பட்டிருக்கிறது. அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் வியாதி மற்றும் பாடுகள் மத்தயிலும் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று நிச்சயித்திருக்கிறோம் (**ரோமர் 8:28**).

தேவனுடைய பிள்ளைக்கு, கொடுக்கப்பட்ட இந்த வாழ்நாளில் ஒரு முழுமையான சுகமாயிருந்துவிட முடியாது. ஆனால் வரும் நாட்களில் ஒரு புது சரீரமாக / சிருஷ்டியாக இருந்தால் முடியும். தேவ பிள்ளைகள் இந்த வாழ்வில் பரிபூரண சுகத்தோடு இருப்பார்கள் என்பதல்ல, மறுமையில் சரீர உயிர்த்தெழுதலே அவர்களுடைய விசுவாசம்.

வெளிப்படுத்தின **விசேஷம் 21:4-5, "[4]அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது. [5]சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்தவர்: இதோ, நான் சகலத்தையும் புதிதாக்குகிறேன் என்றார்."**



இந்த நம்பிக்கையில் மாத்திரமே நாம் வாழ வேண்டும்.

ஒருவர் சுகவீனமாயிருந்தால் என்ன செய்ய வேண்டும் என்பதை குறித்து யாக்கோபு என்ன எழுதியிருக்கிறார் என்று பார்க்கலாம். நீங்கள் சுகவீனமாயிருக்கும் போது சபையின் மூப்பர்களை அழைக்க வேண்டும் என்கிறார். ஏனென்றால் **"நான் சுகமாவேன்"** என்கிற விசுவாசம் உங்களுக்கு இல்லாவிட்டால் அல்லது தேவன் பேரில் விசுவாசம் வளர வேண்டும் என்று நீங்கள் நினைத்தால் விசுவாசத்தில் அதிக பலமான ஒருவரை நீங்கள் சார்ந்துகொள்ளலாம். மற்றவரின் விசுவாசம் உங்களை சுகப்படுத்தும்.

இரண்டாவதாக, வியாதியினால் நீங்கள் மறித்து போனால் கவலைப்பட வேண்டாம் தேவன் உங்களை எழுப்புவார் என்று சொல்லுகிறார். தங்களுடைய பாவங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு ஒருவருக்காக மற்றொருவர் ஜெபிப்பதை உற்சாகப்படுத்த வேண்டும். எதிர்பார்த்தபடியே, ஒரு விசுவாசி மற்ற விசுவாசிகளுடன் நல்லிணக்கத்தோடு வாழ வேண்டும்.

உணர்ச்சிபூர்வமான ஜெபம்

ஆர்வத்தோடு ஜெபிக்கிற நீதிமான் தேவனிடத்திலிருந்து அதிகம் பெற்று கொள்வான். ஓய்ந்து விடாமல் உணர்ச்சிபூர்வமாக ஜெபிக்க வேண்டும். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசியான எலியாவை எடுத்துகாட்டாக யாக்கோபு கூறுகிறார். [17]எலியா என்பவன் நம்மைப்போலப்பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான், அப்பொழுது மூன்றுவருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை. [18]மறுபடியும் ஜெபம்பண்ணினான், அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது.

எலியாவினுடைய வாழ்க்கையை நாம் பார்க்கலாம் (1 **இராஜாக்கள் 17-19** and 2 **இராஜாக்கள்** 1) கீலேயாத்தின் குடிகளிலே திஸ்பியனாகிய எலியா என்பவன், தேவனுடைய தீர்க்கதரிசி இவனுடைய பெயருக்கு அர்த்தம் **"என் தேவனே ஆண்டவர்"** என்று பொருள்.

(1 இராஜாக்கள் 17:1) திடீரென்று எலியா, கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து வந்த ஆகாபு ராஜாவுக்கு எதிராக சவால் விடுத்தான். ஆகாபு ராஜா 874 - 853 கி.பி(ல்) வடதிசை பகுதிகளை இராஜ்ஜியபாரம் பண்ணினான்.

ராஜாவினுடைய பொல்லாப்பான காரியத்தினால் தேசம் முழுவதும் வறட்சியை கட்டளையிடுவார் என்று எலியா தீர்க்கதரிசனம் உரைத்தான்.

அப்பொழுது கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு உண்டாகி, கேறித் என்னும் ஆற்றங்கரையில் ஒளிந்து கொண்டிருந்தான் அவன் காகங்களினால் போஷிக்கப்பட்டான்.

அந்த தேசத்திலே வறட்சியும் பஞ்சமும் அதிகமானபடியினாலே எலியா பக்கத்து ஊரிலுள்ள விதவையினிடத்திற்கு வழிநடத்தப்பட்டான். அந்த விதவை எலியாவினுடைய வேண்டுதலுக்கு கீழ்படிந்தபடியால் தேவன் எலியாவுக்கும் அந்த விதவைக்கும் அவளுடைய பிள்ளைக்கும் போதுமான உணவை போஷித்தார். ஆச்சரியமாக, அந்த விதவையின் மாவு பாத்திரமும் எண்ணை குவளையும் குறைந்து போகவேயில்லை.

(1 **இராஜாக்கள் 17:8-16**). இதன் மூலம் ஒரு விசுவாசிக்கு என்ன பாடம் என்றால், தேவனோடு ஐக்கியம் கொண்டவர்களாய் அவருக்கு கீழ்படிந்து நாம் இருப்போம் என்றால் நம்மை அவர் சித்தத்திற்கு ஒப்புகொடுப்போம். அப்படி ஒப்புகொடுக்கும்போது அவர் நம்முடைய தேவைகளை சந்திப்பார் மற்றும் நம்மேல் அவருடைய இரக்கம் என்றும் குறைந்து போகாது.

அடுத்ததாக எலியா, பாகாலை வணங்கும் தீர்க்கதரிசிகளை கர்மேல் மலையின்மீது எதிர்கொண்டு போனான் (1 **இராஜாக்கள் 18:17-40**) பாகாலின் தீர்க்கதரிசிகள் அவர்களுடைய தெய்வங்களை காலை முதல் மாலை வரை வானத்திலிருந்து அக்கினி மழையை பொழியும்படி கதறினார்கள். ஆனால் ஒரு பலனுமில்லை. எலியா கற்களினால் ஒரு பலிபீடத்தை கட்டி சுற்றிலும் வாய்க்காலை வெட்டினான்.

பீடத்தின்மேல் விறகுகளை அடுக்கி பலிகளை அதன்மீது வைத்து தண்ணீரை கொண்டு வரச்சொல்லி அதை பலிகளின் மீது மூன்று முறை ஊற்றினான்.

ஆனாலும் அவர்களுடைய பாகால் பதிலளிக்கவில்லை. எலியா அவர்களை பார்த்து நகைத்ததுமல்லாமல் உங்கள் தெய்வம் உறங்கிகொண்டிருக்கிறதோ இல்லை வேறு வேலையாக சென்றிருக்கலாம் என்று பலவிதமாக கேலிசெய்தான். அவர்கள் தங்களுடைய கைகளில் கீறிகொண்டு அழுதார்கள் ஆனால் ஒரு பதிலும் இல்லை.

**எலியா தேவனை நோக்கி கூப்பிட்டான்.**

அப்பொழுது கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி இறங்கி, அந்தச் சர்வாங்க தகனபலியையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலிலிருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது. அதன்பின்பு 450 பாகால் தீர்க்கதசிரிகளையும் எலியா கொன்று போட்டான். அவன் வெறுமையான பாத்திரமாக அல்லாமல் தேவனுடைய பாத்திரமாக இருந்தபடியால் சகல வல்லமையான காரியங்களையும் செய்தான் என்பதற்கு எலியா ஒரு எடுத்துகாட்டாக இருந்தான்.

பொய்யான தீர்க்கதரிசிகளை மேற்கொண்ட பிறகு, தேசத்தின்மீது மழை பொழிய ஆரம்பித்தது.

(1 **இராஜாக்கள் 18:41-46**). எலியா தேவனிடத்திலிருந்து வெற்றியை பெற்றுக்கொண்ட போதிலும் ஒரு கட்டத்தில் நிலையற்ற விசுவாசமும் மனச்சோர்வும் அவனை ஆட்கொண்டது.

(1 **இராஜாக்கள் 19:1-18**). ஆகாபின் மனைவியாகிய யேசபேல் எலியாவினுடைய பிராணனை வாங்க வகைதேடினாள். இதனால் எலியா தன்னுடைய நிலமையை நினைத்து வருந்தி ஒரு குகையில் தன்னை



ஒளித்துக்கொண்டான். மற்றும் தேவனுடைய தீர்க்கதரிசிகளில் தான் ஒருவன் மாத்திரம் மீந்திருப்பதை நம்பத்தொடங்கினான். அவன் தன் கண்களை கர்த்தருக்கு நேராக ஏறெடுத்தான். பின்பு ஆண்டவர் அவனை நோக்கி கர்த்தர் கடந்துபோகுமட்டாக பர்வதத்தின் மீது நில் என்று கட்டளையிட்டார். அப்பொழுது பலத்த காற்றும் பூமியதிர்ச்சிகளும் அக்கினியும் உண்டாயிற்று ஆனால் எதிலும் கர்த்தர் இருக்கவில்லை. அக்கினிக்குப்பின் அமர்ந்த மெல்லியசத்தம் உண்டாயிற்று இதன்மூலம் எலியா தேவனுடைய சத்தத்தை கேட்டு அவரை அறிந்துகொண்டான்.

எலியா, தான் தனித்து இருக்கிறேன் என்கிற எண்ணத்தையும் மனுஷர் எனக்கு என்ன செய்ய முடியும் என்கிற பயத்தையும் தன்னிடமிருந்து நீக்கிவிட்டான். கர்த்தருடைய சத்தம் கேட்ட போது எலியா சுழல்காற்றிலே பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டான்.

(2 **இராஜாக்கள் 2:1-11**).
எலியா மனுஷனுக்குரிய பலவீனத்தினால் நிறைந்தவனாயிருந்தாலும் கர்த்தருக்காக பலமாய் பயன்படுத்தப்பட்டான்.

ஒருவேளை நான் எலியாவினுடைய தோல்விகளை சுருக்கிசொன்னால்

- தன் பிராணனுக்காக யேசபேலை கண்டு ஓடினான்.
- மனச்சோர்வு அடைந்தான்.
- கர்த்தர் அவன் ஜீவனை எடுத்துகொள்ள வேண்டும் என்றான்.
- தன் நலம் கருதுபவனாயிருந்தான். ஒரு சார்பாய் கீழ்படிந்தான்.

இன்று நீங்களும் நானும் தேவனோடு தொடர்புப்படுத்தி பார்க்கலாம்.

ஆகையால், அவர்கள் தங்களை குறித்து அல்ல, அவர்களில் வாசமாயிருக்கிற தேவன் மேலும் மற்றும் அவர் அவர்களை எவ்வாறு பயன்படுத்த முடியும் என்பதிலும் கவனம் செலுத்த வேண்டும் என்று யாக்கோபு சிதறியிருக்கிற சகோதரர்களை ஊக்கப்படுத்துகிறார்.

**கொரிந்தியர் 4:7**, இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி, இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்.

நாம் மண்பாண்டம் கிறிஸ்து பொக்கிஷமாயிருக்கிறார் என்று நாம் அறிந்து கொள்ள வேண்டும் என்றும்; அவருடைய வழியையும், மகிமையையும், கனத்தையும் நம்மூலம் வெளிப்படுத்த வேண்டுமென்று வேண்டுதல் செய்கிறேன்!!.





14

# நற்செய்தி அறிவித்தல்

**யாக்கோபு 5:19-20**

19சகோதரரே, உங்களில் ஒருவன் சத்தியத்தைவிட்டு விலகி மோசம்போகும்போது, மற்றொருவன் அவனைத்திருப்பினால்,
20தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன்.

எருசலமிலிருந்து சிதறியிருக்கிற தன் உடன் சகோதரர்களுக்கு இந்தக் கடிதத்தை யாக்கோபு என்ன ஒரு மகத்தான விதத்தில் எழுதியிருக்கிறார்.

தன் சகோதரர்களுக்கு சொல்லியிருக்கிற இந்த எல்லா காரியங்களின் நோக்கம் என்ன என்று பார்ப்போம். ஒரு கணம் இந்த முழு கடிதத்தையும் மறுஆய்வு செய்வோம்.

பண்பு, இயேசுவின் வாழ்க்கை மற்றும் அவருடைய ஒன்றுவிட்ட சகோதராகிய யாக்கோபை போல முன்மாதிரியாக எப்படி வாழ வேண்டும்? சோதனை, எப்படி நாம் சோதனைகளை மேற்கொள்ள வேண்டும்?

ஞானம், சோதனைகளை மேற்கொள்ள தேவனுடைய ஞானத்தை நாம் எப்படி பெற வேண்டும்?

தூண்டுதல், ஏன் தூண்டப்படுகிறோம்? அதின் மூலக்காரணங்கள் என்ன? எப்படி அதை மேற்கொண்டு பரிசுத்தமான வாழ்க்கை வாழ்வது?

அறிவு, நம்முடைய வாழ்க்கையில் நாம் பெற்றிருப்பதை நாம் எவ்வாறு உணர்ந்துகொள்ள முடியும்? மற்றவர்களை எவ்வாறு நடத்த வேண்டும்?

தேவனுடைய வார்த்தைகளை கேட்பதின் மூலம் அது நம்முடைய நடைமுறை வாழ்க்கையில் எப்படி தாக்கத்தை ஏற்படுத்த வேண்டும்? வெறுமென தேவனுடைய வார்த்தையை கேட்பவர்களாயிராமல் அதன்படி செய்கிறவர்களாயிருக்க வேண்டும்.

நாவை பழக்குதல், நம்முடைய நாவை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்? ஏனென்றால் அது பலமுள்ளது. நம்முடைய நாவை பயன்படுத்தும் விதத்தில்தான் நாம் யார் என்று தீர்மானிக்கப்படுவோம்.

வேற்றுமை, ஏன் நாம் வேற்றுமை பார்க்க கூடாது? தேவன் நம்மிடையே ஏன் பாரபட்சம் காட்டுவதில்லை?

இரக்கம், மற்றவர்களிடத்தில் இறக்கம் காட்டுவதில் நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். எப்படி நியாயத்தீர்ப்பு இல்லாமல் இரக்கம் தேவனுடைய கண்களுக்கு முன்பாக சரியாக இருக்க முடியும்?

விசுவாசம் மற்றும் கிரியை, நீங்கள் செய்யும் மற்ற கிரியைகளோடு உங்களுடைய விசுவாசம் எவ்வாறு நிரூபிக்கப்படுகிறது. கிரியைகள் இல்லாத

விசுவாசம் செத்ததாயிருக்கிறதே.

பெருமை, பெருமைக்கு தேவன் எவ்வாறு எதிர்த்து நிற்கிறார்? பெருமையானது ஒரு மனிதனை முழுவதுமாக எவ்வாறு அழித்து விடுகிறது?

ஐஸ்வரியம் மற்றும் செல்வம், எப்படி நாம் உலக பிரகாரமான ஐஸ்வரியங்களில் நம்பிக்கை / விசுவாசம் வைக்க கூடாது என்றும் மாறாக, நம்மை நாமே தாழ்த்தி தேவன் அளித்த ஆசீர்வாதங்களின் நோக்கம் என்ன என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

பொறுமையில் விடாமுயற்சி, தேவனோடு எப்பொழுதும் நெருக்கமாய் இருப்பதற்கு நாம் எவ்வாறு பொறுமையில் விடாமுயற்சியோடு இருக்க வேண்டும்?

ஜெபம், ஜெபம் பண்ணுவதற்கு மகத்தான வழி என்ன? ஒரு பிணியாளியை எவ்வாறு நாம் காப்பாற்ற முடியும் மற்றும் எப்படி ஒரு ஊக்கமான ஜெபம் தேவனிடத்திலிருந்து பதில்களை பெறும்?

கடைசியாக, “இந்த கடிதம் இரட்சிப்புக்கான அழைப்பு” என்று இறுதி உரையில் யாக்கோபு தன்னுடைய இருதயத்திலிருந்து வெளிப்படுத்தியிருக்கிறார்.



**யாக்கோபு 4:7-10,** 7ஆகையால், தேவனுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்; பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள், அப்பொழுது அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான். 8தேவனிடத்தில் சேருங்கள், அப்பொழுது அவர் உங்களிடத்தில் சேருவார். பாவிகளே, உங்கள் கைகளைச் சுத்திகரியுங்கள்; இருமனமுள்ளவர்களே, உங்கள் இருதயங்களைப் பரிசுத்தமாக்குங்கள். 9நீங்கள் துயரப்பட்டுத் துக்கித்து அழுங்கள்; உங்கள் நகைப்பு துக்கிப்பாகவும், உங்கள் சந்தோஷம் சஞ்சலமாகவும் மாறக்கடவது. 10கர்த்தருக்கு



முன்பாகத் தாழ்மைப்படுங்கள், அப்பொழுது அவர் உங்களை உயர்த்துவார்.

வேறு வார்த்தைகளில், கிறிஸ்துவுக்கு முன்பாக முடங்குங்கள். உண்மையான இரட்சிப்புக்குள்ளாக வாருங்கள்.

5:13, உங்களில் ஒருவன் துன்பப்படுகிறானா?

5:13, உங்களில் ஒருவன் மகிழ்ச்சியாயிருக்கிறானா?

5:14, உங்களில் ஒருவன் வியாதியாயிருக்கிறானா?

5:19, உங்களில் ஒருவன் சத்தியத்தைவிட்டு விலகி போகும்போது,

யாக்கோபு, விழுந்து போன மற்றும் சத்தியத்திலிருந்து வழி விலகி போன சகோதரர்களைப்பற்றி பேசுகிறார் என்று இதிலிருந்து நாம் அறிந்துகொள்ளலாம். அவர்கள் சத்தியத்திலிருந்து வழி விலகி போனார்கள் என்றும் சொல்லலாம் அல்லது முதலிடத்தில் அவர்களுடைய மனந்திரும்புதல் முழுமையாக இல்லை என்றும் சொல்லலாம்.

அவருடைய மகா இரக்கத்தினாலேயன்றி வேறு எதை கொண்டும் நாம் இரட்சிக்கப்படவில்லை என்பதை பாவிகளாய் இருந்த நாம் தாழ்மையோடு அறிந்துகொள்ள வேண்டும்.

**தீத்து 3:3-7,** 3ஏனெனில், முற்காலத்திலே நாமும் புத்தியீனரும கீழ்ப்படியாதவர்களும், வழிதப்பி நடக்கிறவர்களும், பலவித இச்சைகளுக்கும் இன்பங்களுக்கும், அடிமைப்பட்டவர்களும், துர்க்குணத்தோடும் பொறாமையோடும் ஜீவனம்பண்ணுகிறவர்களும், பகைக்கப்படத்தக்கவர்களும், ஒருவரையொருவர் பகைக்கிறவர்களுமாயிருந்தோம். 4நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய தயையும் மனுஷர்மேலுள்ள அன்பும் பிரசன்னமானபோது, 5நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். 6தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு, நித்திய ஜீவனுண்டாகும் என்கிற நம்பிக்கையின்படி சுதந்தரமாகத்தக்கதாக, 7அவர் நமது இரட்சகராகிய இயேசுகிறிஸ்து மூலமாய், அந்தப் பரிசுத்தாவியை நம்மேல் சம்பூரணமாய்ப் பொழிந்தருளினார்.

**1 கொரிந்தியர் 6:9-11,** 9அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும்,

ஆண்புணர்ச்சிக்காரரும், [10]திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. [11]உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாயிருந்தீர்கள்; ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள்.

நம்மிடத்தில் பணிவு இருக்குமாயின் ஆண்டவர் நமக்கு செய்த எல்லா உபகரணங்களுக்காகவும் நாம் நன்றியுள்ளவர்களாயிருப்போம். நம்முடைய இரட்சிப்புக்கான அற்புதமான மகிமையை நாம் காணவில்லை என்றால் அந்த மகிமையை எளிதாக இழந்து விடுவோம். அப்போஸ்தலனாகிய பேதுரு கடிதத்தை எழுதினபோது மிக வெளிப்படையாகவே தன்னுடைய நிருபத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

**1 பேதுரு 1:8-12,** [8]அவரை நீங்கள் காணாமலிருந்தும் அவரிடத்தில் அன்புகூருகிறீர்கள்; இப்பொழுது அவரைத் தரிசியாமலிருந்தும் அவரிடத்தில் விசுவாசம் வைத்து, சொல்லிமுடியாததும் மகிமையால் நிறைந்ததுமாயிருக்கிற சந்தோஷமுள்ளவர்களாய்க் களிகூர்ந்து, [9]உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்துமரட்சிப்பை அடைகிறீர்கள். [10]உங்களுக்கு உண்டான கிருபையைக் குறித்துத் தீர்க்கதரிசனஞ்சொன்ன தீர்க்கதரிசிகள் இந்த இரட்சிப்பைக்குறித்துக் கருத்தாய் ஆராய்ந்து பரிசோதனைபண்ணினார்கள்; [11]தங்களிலுள்ள கிறிஸ்துவின் ஆவியானவர் கிறிஸ்துவுக்கு உண்டாகும் பாடுகளையும், அவைகளுக்குப் பின்வரும் மகிமைகளையும் முன்னறிவித்தபோது, இன்னகாலத்தைக் குறித்தாரென்பதையும், அந்தக் காலத்தின் விசேஷம் இன்னதென்பதையும் ஆராய்ந்தார்கள். [12]தங்கள்நிமித்தமல்ல, நமதுநிமித்தமே இவைகளைத் தெரிவித்தார்களென்று அவர்களுக்கு வெளியாக்கப்பட்டது, பரலோகத்திலிருந்து அனுப்பப்பட்ட பரிசுத்த ஆவியினாலே உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தவர்களைக் கொண்டு இவைகள் இப்பொழுது உங்களுக்கு அறிவிக்கப்பட்டு வருகிறது; இவைகளை உற்றுப்பார்க்க தேவதூதரும் ஆசையாயிருக்கிறார்கள்.

கண்டிப்பாக நமக்கு தெரிந்த ஒருவரை நினைவில் கொள்ள முடியும், அவர் உற்சாகமாக தேவனுக்காக ஊழியம் செய்து எல்லா காரியங்களிலும் கலந்துகொண்டு, ஒரு தருணத்தில் ஒரு தடங்கலையோ அல்லது பிரச்சனைகளையோ சந்திக்க நேரிட்டால் பின்பு கொஞ்ச நாட்களுக்கு பிறகு அந்த மனிதரை சபைகளிலோ அல்லது தேவனோடு தொடர்புடையவராய் பார்க்கவே முடியாது.

**லூக்கா 15ஆம்** அதிகாரம் **“வழிதவறி” போனதற்கு மற்றொரு உதாரணம். வசனம்**



**1-7 “காணாமற்போன ஆடு”** பற்றி விளக்குகிறது. வசனம் 8-10 **“தொலைந்து போன நாணயம்”** பற்றி விளக்குகிறது. மற்றும் **வசனம் 11-32 ல்,** அற்புதமான கதை **“காணாமற்போன மகனை”** பற்றி விளக்குகிறது.

நான் **“காணாமற்போனதை தேடி”** வந்தேன் என்று இயேசு சொன்னார். **மத்தேயு 18:11,** 11மனுஷகுமாரன் கெட்டுப்போனதை இரட்சிக்க வந்தார். இங்கு **“வழிதவறிய / காணாமற்போன”** என்பது அவருக்கு சொந்தமானது ஒன்று காணாமல் போய்விட்டது என்பதை காட்டுகிறது.

ஆகவே யாக்கோபு அவர்களிடம், ஒருவரும் தவறி விடாதபடி ஒருவருக்கொருவர் கவனித்துக்கொள்ள வேண்டுகிறார்.

**வசனம் 20 ல்,** பாவிகளை பற்றியும் மற்றும் பாவத்திற்கு அடிமையானவர்களை பற்றியும் அவர்களுக்கு யாக்கோபு எழுதியிருக்கிறார்.

**[20]தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன்.**

முதன் முதலில் வேதபுத்தகம் **“சோதோம் கொமோராவில்”** இருக்கிறவர்களை தான் **“பாவிகள்”** என்று அழைக்கிறது.

**ஆதியாகமம் 13:13,** சோதோமின் ஜனங்கள் பொல்லாதவர்களும் கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுமாய் இருந்தார்கள்.

**சங்கீதம் 1:1 -5**
1துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும்; [5]ஆகையால் துன்மார்க்கர் நியாயத்தீர்ப்பிலும், பாவிகள் நீதிமான்களின் சபையிலும் நிலைநிற்பதில்லை.

**எசேக்கியல் 18: 4,** இதோ, எல்லா ஆத்துமாக்களும் என்னுடையவைகள்; தகப்பனின் ஆத்துமா எப்படியோ, அப்படியே மகனின் ஆத்துமாவும் என்னுடையது; பாவஞ்செய்கிற ஆத்துமாவே சாகும்.

**எசேக்கியல் 18:20a,** பாவஞ் செய்கிற ஆத்துமாவே சாகும்;

**ரோமர் 6:23,** பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்.

இயேசு இவ்வுலகத்தில் இருந்த போது பரலோகத்தை விட நரகத்தைப்பற்றியே அதிகம் பேசினார். அதை பற்றி, மத்தேயு வில் கீழ்கண்ட அதிகாரங்களில் பேசியிருக்கிறார்.

**அதிகாரம்** 5,

**அதிகாரம்** 7,

**அதிகாரம்** 8,

**அதிகாரம்** 10,

**அதிகாரம்** 13,

**அதிகாரம்** 18,

**அதிகாரம் 22,**

**அதிகாரம் 23, மற்றும்**

**அதிகாரம் 25,**

இயேசு, நரகத்தைப்பற்றியும், நித்திய மரணத்தைப்பற்றியும், என்றென்றும் பற்றி எரிகின்ற அக்கினியைப்பற்றியும், சவாமையுள்ள புழுக்களைப்பற்றியும், அழுகை, பற்கடிப்பு, மந்தாரமுமான இருளைப்பற்றியும், பேசியிருக்கிறதை பார்க்க முடியும். மரணம் என்பது இதுதான். ஆழமான பயங்கரம் நிறைந்த கல்லறை, பாவிகளுடைய முடிவு இப்படிப்பட்டதாயிருக்கிறது.

**மத்தேயு 9:13,** பலியையல்ல, இரக்கத்தையே விரும்புகிறேன் என்பதின் கருத்து இன்னதென்று போய்க் கற்றுகொள்ளுங்கள்; நீதிமான்களையல்ல, பாவிகளையே மனந்திரும்புகிறதற்கு அழைக்க வந்தேன் என்றார்.

**வசனம் 20** சொல்லுகிறது, **“திரளான பாவங்கள் கொண்ட / உடைய..’**

மரணம் தொடங்கி நித்திய காலமாய் நரகத்தில் அழுகி போகாதபடிக்கு நாம் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். மனுஷனுடைய இருதயம் பொல்லாங்கு செய்வதில் தீவிரமும் எல்லாவற்றிற்கும் மேலாக வஞ்சகம் நிறைந்ததுமாயிருக்கிறது. மனுஷனுடைய வாழ்நாள் முழுவதிலும் பாவத்தின் எடை அதிகரித்து கொண்டே போவதினால் அது அவனை நித்திய பாதாளத்திற்கு தள்ளிவிடும்.

**வசனம் 20, ‘‘பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன்.’’**

யார் இந்த காரியத்திற்கு பயன்படுத்தப்படுவார்கள் என்று உங்களுக்கு தெரியுமா? மூப்பர்களையோ, திருத்தொண்டர்களையோ, போதகர்களையோ, அப்போஸ்தலர்களையோ, பிரசங்கிமார்களையோ அல்ல...’’ எவன் ஒருவன்’’ என்றுதான் சொல்லுகிறது.

அப்படியென்றால், யார் வேண்டுமானாலும் இருக்கலாம், இது பொதுவான ஒன்று மற்றும் நாம் எல்லோருக்கும் இந்த கடமை / பணி உண்டு.

**பயன்பாடுகள்:**

முதலாவதாக, வழியை விட்டு விலகி போகாதபடிக்கு நம்மை நாமே காத்துக்கொள்வோம். எவ்வாறு நாம் அதை செய்யமுடியும்? இயேசு நமக்கு கட்டளையிட்டது போல

**யோவான் 8:31,** இயேசு தம்மை விசுவாசித்த யூதர்களை நோக்கி: நீங்கள் என் உபதேசத்தில் நிலைததிருந்தால் மெய்யாகவே என் சீஷராயிருப்பீர்கள்;

வழி விலகி போனவர்களாய் இராமல் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தின்



மூலம் மறுபடியும் உபதேசத்தில் நிலைபெற்றவர்களாய் இருக்க வேண்டும் என்று நிருபங்கள் நமக்க தெளிவாக சொல்லுகிறது.

**எபிரேயர் 6:4-6** [4]ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரம ஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், [5]தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், [6]மறுதலித்துப்போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புகிறதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம்.

மறுபடியும் நம்மை புதுப்பிக்க வேண்டும் என்று தேவனுடைய வார்த்தையார் நாம் கட்டளையிடப்பட்டிருக்கிறோம்! நம்முடைய அலட்சிப்பில் நிலைத்திருக்கவும் அதில் தொடரவும் வேண்டும் என்று அப்போஸ்தலனாகிய பேதுரு நமக்கு கடுமையான எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

**2 பேதுரு 2:20-22,** [20]கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளால் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். [21]அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட **பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப்பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும்.** [22]நாய் தான் கக்கினதைத் தின்னவும், கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும்திரும்பினது என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது.

இரட்சகராகிய ஆண்டவர் இயேசு கிறிஸ்துவைப் பற்றி மற்றவர்களுக்கு சுவிசேஷம் அறிவிக்கும்படி நமக்கு மிக பெரிய பணி கொடுக்கப்பட்டிருக்கிறது என்று அப்போஸ்தலனாகிய யாக்கோபின் கடைசி வாக்கியத்தின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

**1. இயேசு நம்மை இரட்சிக்க வந்தார்.**

**யோவான் 3:17,** உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்.

இயேசு கிறிஸ்து நமக்கு கட்டளையிடிருப்பது,

**மத்தேயு 28:19-20,** [19]ஆகையால், நீங்கள் புறப்பட்டுப்போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங்கொடுத்து, [20]நான்

உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள்; இதோ, உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன் என்றார். ஆமென்.

**யோவான் 20:21,** [21]இயேசு மறுபடியும் அவர்களை நோக்கி: உங்களுக்குச் சமாதானமுண்டாவதாக; **பிதா என்னை அனுப்பினதுபோல நானும் உங்களை அனுப்புகிறேன் என்று சொல்லி,**

**2. ஒப்புரவகுதலின் ஊழியத்தை இயேசு நமக்கு கொடுத்திருக்கிறார்.**

**2 கொரிந்தியர் 5:18,** இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது அவர் இயேசுகிறிஸ்துவைக்கொ ண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்.

விலைக்கிரயமாக **(you bought at a price - don't know how to translate so chk it)** அவர் உங்களை பெற்றிருக்கிறபடியால் உங்களுக்காக நீங்கள் வாழ முடியாது.

**2 கொரிந்தியர் 5:14-15,** [14]கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது; ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லாரும் மரித்தார்கள் என்றும்; [15]பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம்.

**1 கொரிந்தியர் 6:19-20,** [19]உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா? [20]கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே; ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்.

**3 ஒரு அவ்விசுவாசியின் எதிர்காலம் நித்தியத்திற்கும் யூகிக்க முடியாத வலியையும் வருத்ததையும் கொண்டு வரும்.**

**யோவான் 3:18,** அவரை விசுவாசிக்கிறவன் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படான்; விசுவாசியாதவனோ தேவனுடைய ஒரேபேறான குமாரனுடைய நாமத்தில் விசுவாசமுள்ளவனாயிராதபடியினால், அவன் ஆக்கினைத்தீர்ப்புக்குட்பட்டாயிற்று.

இரட்சிப்பு என்பது இயேசு கிறிஸ்து என்னும் நாமத்தில் மட்டுமே இருக்கிறது.

**அப்போஸ்தலர் 4:12,** அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை என்றான்.



**யோவான் 14:6,** அதற்கு இயேசு: நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்.

**4. அளவிட முடியாத வாழ்வு உண்டு.**

**யோவான் 10:10,** திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்.

உங்களுடைய விசுவாசத்தையும் சுவிசேஷத்தையும் பகிர்ந்துகொள்ள முடியாதபடி தடுக்கிற முக்கியமான 5 காரணங்கள் என்ன?

1. பயம்
2. அறியாமை
3. இறுமாப்பு / அகந்தை
4. சோம்பேறித்தனம்
5. மோசமான இறையியல்

அப்போஸ்தலனாகிய பவுல் போதனையில் பயத்தை பற்றி பேசியிருக்கிறார். **எபேசியர் 6:19-20,** [19]சுவிசேஷத்திற்காகச் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாபதியாகிய நான் அதைப்பற்றிப் பேசவேண்டியபடி தைரியமாய்ப் பேசத்தக்கதாக, [20]நான் தைரியமாய் என் வாயைத்திறந்து சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கிறதற்கு வாக்கு எனக்கு கொடுக்கப்படும்படி எனக்காகவும் விண்ணப்பம் பண்ணுங்கள்.

உங்களுக்கு தேவன் தைரியத்தை கொடுக்க வேண்டும் என்று ஜெபியுங்கள்.

Also as அப்போஸ்தலர் 1:8, பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின்கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார்.

நம்முடைய கார்த்தருடைய ஆவி உங்களை அபிஷேகிக்கட்டும் அப்பொழுது நீங்கள் போகும் இடங்களில் சாட்சியாயிருப்பீர்கள்!!

# Book of James

## LESSONS FOR LIFE



**Abraham David John,** a chemistry graduate, is an entrepreneur-turned-disciple maker. Born and brought up in a Christian household, he never had a personal relationship with God up until he was 36 years old. Year 2000 saw him coming to know God and becoming a born-again believer in the Lord. He started serving at the Rayners Lane Baptist Church (London) since 2003, also being part of an outreach program known as the "Neighborhood Network" – serving among the Asian community – also running a fellowship at the church premises among the Tamil (a south Indian language) speaking community. Soon God called him to start what would now be called as the World Christian Fellowship in 2009. With complete focus on this God-ordained ministry, Abraham regularly mentors and disciples those passionate about God and His mission near and far as per His Word. God had also enabled him to plant new churches across the nations, including the United States, United Kingdom and Latvia. Apart from English and Tamil congregations, he has also planted churches in the Latvian language.

Over the years, he has come to grips with a painful truth that the churches are overlooking its fundamental purpose of making disciples. Failing to find an ideal source for discipleship, he penned his own manual, which was well received among the congregation with enormous results.

The passion for grooming His bride, the Church to the likeness of Christ grew stronger in the thoughts of Mr. Abraham. This resulted in his eloquent and bold Biblical teachings which fills the gap between understanding the scriptures and applying them in real life. The nucleus of all his teachings lies in transforming lives to the likeness of Christ by delivering unadulterated and uncompromised teachings. The zeal to build a comprehensive Biblical library in Tamil pushed him to organize his sermons to cover an overview of all the Old and New Testament books with detailed notes of their historical background, purpose and the timeline of writing of each book.

One of his unshakable foundational principles is "A Christian's life must be cultured according to the Bible, even though a person could come from any society or nation". This drives him to address real life issues and drive church goers to Christian culture. Some of the common problems addressed are like over-eating, tattooing, casteism in marriage, gossiping and many more.

**World Christian Fellowship**
60, High Worple, Rayners Lane, Harrow,
Middlesex, HA2 9SZ, United Kingdom.
www.wcflondon.com E-mail : wcflondon@gmail.com